ரிஜ. நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-வருஷ சித்திரை-மீ 26-உ (8—5—1932) | மலர் 2.



## பலமுள்ள வீரபுருடனாக

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன
மொத்துவாழ, இல்லற இன்பம் அனுபவிக்க, புத்திர
பாக்கியம் பெற வழியில்லையேன வருந்துபவர்கள்

## தங்கபஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டா
கும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ. 10.

## மாதர்களுக்கு

இதுதான்வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்



மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயி
ற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய்
பஹிஷ்டையாகும். செர்ப்பாசயம் சினைப்பை
இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி
கெர்ப்பம் உண்டாகும் மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி S I.

---

தாது புஷ்டிக்கு

## "கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது.
நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்
மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக
அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

---

## ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)




பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா
ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சேன்னை.

---




---

## புதுவை முரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிப்பிரதி இனம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... | 0—6—0 |
| 5. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 6. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | ஈ. வெ. ராமசாமியின் போட்டோபடம் ... | 0—8—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

---

பண்டிதர். உயர் திரு. சாமி சிதம்பரனுர் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது
# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

---

## "தமிழன்"
### மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $1, 00.
வெளிநாடு ,, இந்தியா $1, 50,
ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.
விலாசம்:—மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

---

## Read.
### The 'Citizen'
and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

---

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினுல் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

---

## சுயமரியாதை இயக்கப்பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ ராமசாமி, 2. W. P. A. சௌந்திரபாண்டியம், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யசாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனுர், 9. குருசாமி குஞ்சிதம், 10. நிலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசன பொன்னம்பலனுர், 12. சிவானந்தம், 13. அருணகிரிசுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் $6\frac{1}{2}$ X $4\frac{3}{4}$ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2}$ X $6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிற வர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம்கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். விலாசம்:—
பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

---

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'
வாரப்பதிப்பு
உள்நாடு வருட சந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.
வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "போர் முரசு"
வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

---

### "சன்மார்க்கன்"
தமிழ்மாதப்பத்திரிகை.
பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர்: —
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

---

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

# சேலம் ஜில்லா முதலாவது

# சுயமரியாதை மகா நாடு.

## மகாநாட்டுத்தலைவர். தோழர் ம. சிங்காரவேலு அவர்கள் B.A., B. L. முகவுரைப் பிரசங்கம்.

—:0:—

தோழர்களே!

சுயமரியாதைக் கூட்டத்தாரை நான் சந்தித்து, ஏறக்குறைய ஒரு வருஷமாகின்றது. அது முதல் உங்களுடைய இயக்கத்தையும், உங்கள் நோக்கங்களையும் கவனித்து வருகின்றேன். உங்கள் இயக்கம் ஆரம்பமாகி 7, 8 வருஷமாகின்றதாகத் தெரிகின்றது. இந்த ஏழெட்டு வருஷமாக, நீங்கள் செய்து வரும் வேலைகளைச் சற்று ஞாபகப் படுத்திப் பார்க்கலாம்.

உலகம் க்ஷணத்திற்குச் க்ஷணம் மாறிக் கொண்டே வருகின்றது. உலகில் வசித்து வரும் நாமும், நமது செய்கைகளும், நமது எண்ணங்களும், நமது கோரிக்கைகளும், நமது வாழ்க்கைகளும் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறுதலை அடைந்து வருகின்றன. நம்மை ஆண்டு வரும் ஆங்கில ராஜாங்கத்தாரும் நம்மைப் போலவே, அவர்கள் செய்கை, எண்ணம், கோரிக்கை, நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் மாறுதல் பெற்றே வருகின்றனர். இத்தியாதி மாறுதல்களை கவனியாது நமது செய்கைகளையும், நடத்தைகளையும். நடை முறையில் செலுத்திக் கொண்டு போனால், உலகப் போக்குக்கும், நமக்கும் சம்பந்த மில்லாமலே போய் விடும். ஒன்று நீங்கள் தெரிந்து கொள்ளல் வேண்டும். அது யாதெனில், சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த நீங்கள் உங்களைச் சுற்றி நிகழ்ந்து வரும் இயக்கங்களுக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லை என எண்ணலாகாது. எல்லா இயக்கங்களும், சமூக இயக்கங்களென (Social movements) கருதல் வேண்டும். ஆதலின், நீங்கள் கடந்த வருஷங்களாக செய்து வந்த வேலைகளை கணக்கெடுத்துப் பார்த்து, இனி நடக்க வேண்டிய காரியத்தையும் கவனிக்க வேண்டும். முதலாவது, உங்கள் சுயமரியாதை இயக்கத்தின் நோக்கை இன்னதெனத் தெரிந்து கொள்ளுவோம். அதன் பிறகு, நீங்கள் செய்து வந்த வேலைகள் எம்மாத்திரம் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றின வென்பதை நிர்ணயிக்கலாம், நாம் செய்த வேலைகளைக் கணக்கிடல் (Taking stock என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அதாவது நாம் செய்த வேலைகளை, ஞாபகத்திற்குக் கொண்டு வந்து யோசித்தலாகும். நமது சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்யாது? உங்கள் கூட்டங்களின் நடவடிக்கைகளையும், பிரசங்கங்களையும், உங்கள் இயக்கத்தை ஆதரித்துப் பேசும் 'குடி அரசு', 'சண்டமாருதம்', 'புதுவை முரசு', 'குமரன்', 'தமிழன்' முதலிய பத்திரிகைகளையும், (News papers) சஞ்சிகைகளையும் (Journals) கேட்டும் வாசித்தும் வந்ததில், உங்கள் இயக்கத்தின் நோக்கம் இன்னதென்று விளங்குகிறது. முதலாவது மதங்களையும் மதக் கோட்பாடுகளையும், அவை சம்பந்தமாக எழும் மூட நம்பிக்கைகளையும், நமது சமூக வாழ்க்கையினின்று நீக்க வேண்டு மென்ற கோரிக்கை முதன்மையான தென்று நான் எண்ணுகிறேன். இரண்டாவதாக, ஜாதி வேற்றுமைகளையும் கிளைஞ்ஜாதி சமூகவித்தியாசங்களை நீக்க வேண்டுமென்பதும் உங்கள் கோரிக்கையாகும். இவ்விரண்டும், உங்கள் இயக்க நோக்கங்களில், முக்கிய சீர்திருத்தங்களாகும். பெண்களின் சமூகத்தாழ்வையும் போக்கி அவர்கள் நிலைமையை உயர்த்தி ஆணுடன் பெண்ணும் சரி சமத்துவம் பெற வேண்டுமென்ற கோரிக்கையும் உங்கள் நோக்கங்களில் முக்கியமானதாகும். இந்த நோக்கின் விஷயமாக புனர் கல்யாணத்தையும், கலப்பு மணத்தையும் ஆதரித்து வருகின்றீர்கள். சமூக வாழ்க்கையில் புகுந்து கொண்டு தீங்கிழைத்து வரும் பலவித பழக்க வழக்கங்களைப் போக்குவான் வேண்டி, சுயமரியாதைக் கல்யாண மென்ற, வீண் சடங்குகள், வீண் செலவுகள் இல்லாத கல்யாணங்களை ஆதரித்தும் அனுகூலப் படுத்தியும் வருகின்றீர்கள். தாழ்த்தப் பட்டவர்களாகிய பள்ளு பறை பதினெட்டு என்று வழங்கும் பல கோடி மக்களின் கோரிக்கைளுக்கு அனுகூலமாக இருந்தும் வருகின்றீர்கள். தீண்டாமை என்ற தோஷத்தை முற்றிலும் ஒழிக்க பல துறைகளிலும் புகுந்து வேலை செய்து வருகின்றீர்கள். தாழ்த்தப் பட்டோருக்கு, ராஜ சபைகளில் தனித்தொகுதி வேண்டு மென்றும் வாதாடுகின்றீர்கள்! கடைசியாக உலக ஜனப்பெருக்கை அடக்கி, வாழ்வை உயர்த்தவும், "கர்ப்பத் தடை" என்ற பிறப்பு குறையச் செய்வதையும் ஆதரிப்பதாகவும் தெரிகிறது. இதன் விஷயமாக சில தீர்மானங்களும் செய்து மிருக்கின்றீர்கள்! மதத்தை ஒழித்து ஜாதியை நீக்கி பெண்கள் சம உரிமைகளைக் கைதூக்கி, மறுமணமும், கலப்பு மணமும் ஆணும் பெண்ணுக்கும் உரியவை என்ற சித்தாந்தத்தை வற்புறுத்தித்தீண்டாமையை ஒழித்து, மிதமாக குழந்தைகளைப் பெற்று இந்திய மக்களின் சமூக வாழ்வை சுகம் பெறச் செய்விப்பது, உங்களுடைய நோக்கமென எண்ணுகின்றேன். முற்றிலும் பால்ய கல்யாணத்தைத் தடுத்து விதவை கல்யாணத்தை ஆதரிக்கின்றீர்கள். சமூகச்சீர்திருத்தங்களைஎதிர்த்துப்போர்புரியும் கட்சியினரையும், சமூக வாழ்க்கையின் கொடுமைகளை ஆதரித்து வரும் இயக்கங்களையும் கண்டித்து வருகின்றீர்கள்!

கொடிய பழக்க வழக்கங்களுக்கு ஆதரவை அளிக்கும் மதஸ்தாபனங்களாகிய இந்து சபை, தபியத்தென்ற மசமதிய சபை முதலிய பிற்போக்குக்குரிய ஸ்தாபனங்களை, தயைதாட்சண்யமின்றி கண்டித்தும் வருகின்றீர்கள், வைதீக கோஷ்டியாரின் எடனங்களையும் தடுத்தும் வருகின்றீர்கள். எங்கெங்கு சமூக வாழ்க்கைக்கு தடையுளவோ, அங்கங்கெல்லாம், அவ்விதத்தடைகளை நீக்க, ஆவல் கொண்டு உழைகின்றீர்கள். உங்களுடைய சுயமரியாதை இயக்கம் இந்திய சமூக சீர்திருத்தங்கள் யாவையும் கொள்ளத் தக்க இயக்க மென்றே எண்ணத் தகும். இந்த இயக்கத்தைப் போன்று, எந்த வோர் இயக்கமும் இவ்விதமாக நமது சமூக ஊழல்களை, வேர் களைய ஒரே காலத்தில் எழுந்ததை அறியோம். உங்களுடைய இயக்கத்தை One of the most Comprehensive social reformers organ) என்று கூறக் கூடும். உங்களுடைய இயக்கம், நின்று நிலைத்து ஒழுங்காக உழைத்து வரும் பட்சத்தில், தேசம் முன்னேற்ற மடைய என்ன தடை? ஆனால் உங்களுடைய இயக்கம், நமது நாட்டிற்கு முழுப் பிரயோஜனத்தை நெருங்கிய காலத்தில் அளிக்க வேண்டுமானால், நீங்கள் மிகுந்த ஊக்கத்துடனும், மனவுறுதியுடனும், சுயநலம் பாராது இந்த இயக்கத்தை விசாலப்படுத்திக் கொண்டு, ஒழுங்குபட நடத்திவருவீர்களாகில், நமக்குப் பின் வருவோர் நன்மை அடையாமற் போகார்.

முற்காலங்களில் நீங்கள் கோரும் சீர்திருத்தங்களைவிஷயமாகக் கொண்ட சமூக சீர்திருத்த ஸ்தாபனங்கள், பற்பல இந்த நாட்டில் தோன்றி மறைந்தன. உங்கள் இயக்கம் அக்கால ஸ்தாபனங்களின் பரம்பரையாக வந்த தென்றே சொல்லலாம். Social reform association சமூக சீர்திருத்தச் சங்க மென்று, பல வருஷங்களாக ஜாதியின்கொடுரங்களை ஒழிக்கவும், பரதேச யாத்திரை தடையின்றி செய்யவும் விதவைகளை மறுமணம் புரிவிக்கவும் உழைத்து வந்தது. அதன் விஷயமாக காலஞ் சென்ற, வீரேசலிங்கம் பந்துலு, உழைத்து வந்த பலனாக பல விதவாமணம் நடந்தன. ஆனால் அவ்வித மணத்தால் விதவைகள் தங்கள்உரிமைகளைஇந்துலாப்படி இழக்க நேரிட்டது. ஆனால், சமூக சீர்திருத்தக்காரர்கள் அரசியல் துறையில் நுழைந்து, சில நிபந்தனைகளுடன் விதவா விவாகத்தைச் சட்டபடிச் செய்ய அரசியல் திட்ட மொன்றை சட்ட சபையில் நிறைவேற்றினார்கள். அதே மாதிரியாகவே கலப்பு மணத்தாலோ அல்லது இந்து லாவுக்கு உடன்படாமலோ செய்து கொள்ளும் கல்யாணத்தாலோ, ஜாதியை இழக்க நேரிடின், அது பாதிக்கத்தக்கதல்ல வென்று வேறொரு சட்டமும் உண்டு பண்ணப்பட்டது. இவ்விதமாக சில வருஷங்களுக்கு முந்தியே, சிற்சில சமூக சீர்திருத்தங்களை ராஜாங்கத்தாரேசெய்ய நேரிட்டது. ஆனால் இத்தியாதி சீர்திருத்த சட்டங்களால் ஜாதியும் ஒழியவில்லை, பெண்களின் நிலைமையும் உயரவில்லை. இவைகளுக்குப் பிறகு, அனேக வருஷங்கள் சென்ற பின், நேற்று சாரதா சட்டம் நிறைவேறிய விஷயம் நமது கால சீர்திருத்தமாகும். இதனை ஆட்சேபித்துவரும் வைதீகர்களுடைய ஆக்கிரமும், இந்த சட்டத்தை மாற்ற செய்துவரும் முயர்ச்சியின் தீரமும் நமக்குத்தெரிந்த விஷயங்களே. ஜாதிக்கட்டுப்பாடுகள், ஜாதி பகிஷ்காரங்கள் இருந்தே வருகின்றன. பெண்கள் சம்மதிக்காத கல்யாணங்கள் ஆயிரக்கணக்காக நடந்துகொண்டே இருக்கின்றன. கோவில்களிலும், குளங்களிலும் மூடபக்தி செலுத்தப்பட்டே வருகின்றன. அந்தந்த ஜாதியில் தான் கல்யாணம் நடந்தேறி வருகின்றன. கலப்புக்கல்யாணம் பாமர மக்களிடம் நடப்பதரிதுசிசுமரண விகிதம் மானுஷீகத்திற்கு மேலிட்டு வருகிறது. பால்ய தாய்மார்வதை இந்தியாவைத்தவிற மற்ற எந்த நாட்டிலும் காண்பதரிது. சொத்துரிமை பெண்களுக்கில்லாமையால் இவர்கள் அடிமைகளாகவே கருதப்படுகிறார்கள். சமூக வாழ்க்கையில் நாமாகிய இந்தியர் வேத காலதத்தில் இருந்தவாறே இன்றைக்கும் இருந்து வருகின்றோம். இதற்கு அத்தாட்சி வேண்டுமானால் மிஸ். மேயோ நமது வாழ்க்கையைக் குறிப்பிட்டிருக்கும் சில ஊழல்களே போதும்.

சில தேசீயவாதிகள் மிஸ். மேயோ குறிப்பிட்ட ஊழல்கள் நம்மிடம் இல்லை என்பார்கள். ஆனால் அது உண்மையாகா. ஒரு நாட்டின் ஊழல்களை எடுத்துக்காட்டினால் அதனால் என்னகுறை? உண்மையாயின் அவைகளைச் சீர்திருத்தம் செய்துகொள்வது நமது கடமையாகும். இல்லாவிடில் அதனால் நம்மை பாதிப்பதொன்றுமில்லை. ஊழல்கள் உண்மையாயின் அது அரசுபுரிந்துவரும் ராஜாங்கத்தாருடைய குறைவேயொழிய அதனை அறியாதார் குற்றமாகா.

அக்குறைகள் நமதுசமூகவாழ்க்கையில் இருப்பது உண்மையாகஇருப்

பின்கடந்த 150வருஷமாக விவேகிகளாகிய ராஜாங்கத்தாரும், அவர்களுக்குத் துணையாய் இருந்துவரும் இராஜ விஸ்வாசிகளும், சட்டசபை அங்கத்தினர்களும், மந்திரிமார்களும் ஏன் இந்த ஊழல்களைப் போக்கவில்லை? கல்விச்சாலைகளில் உயர்தரக்கல்வி பெற்றவர்கள் எத்தனை? பரந்த ஞானத்தை அடைந்தோர் எத்தனை? ஜட்ஜுகள் மேஜிஸ்டிரேட்டுகள் உயர்தர உத்தியோகஸ்தர்கள் எத்தனை? ஐரோப்பா தேசங்களை கண்டு வந்தவர் எத்தனை? இவ்வளவு பேரும் இருந்தும் உலகம் நகைக்கும் சமூக வாழ்க்கையில் நாம் இருந்து வருகின்றோமென்றால் இதைவிடக்கேவலம் நமது நாட்டில் என்ன இருக்கின்றது? சமூக ஊழல்கள் இல்லாத தேசங்கள் இவ்வுலகில் இல்லை என்பார். இது உண்மையே. ஆனால் எந்த ஊரில் ஒருமனிதனை இன்னொருமனிதன் தீண்டப்படாதென்ற கொடிய பழக்கம் இருக்கின்றது? எந்த ஊரில் வீட்டு வேலைகளைப்பெண்கள் செய்யவும், ஆண்பிள்ளைகள் உல்லாசமாக உலாத்தி திரிந்துவரும் காட்சி உள்ளது? எந்த ஊரில் தெருவெல்லாம் கற்களைநட்டுத்தொழுகின்றார்கள்? எந்த ஊரில் கிராமங்கள் முழுமையும் மலக்காடாய் செய்கின்றார்கள்? எந்த ஊரில் நதிக்கரைகளையும், குளக்கரைகளையும் மல ஜல பாதைக்கு இடமாகச்செய்து கொள்கின்றார்கள்? எந்த ஊரில் சாதாரண நாட்களை கரிநாள், அமாவாசை, கிர்த்திகை பரணி என்று எந்தவேலையும் செய்யாதிருக்கின்றனர்? பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் லொன்று சாகின்றன? எந்தவூரில் கொள்ளைநோய் வருஷா வருஷம் ஏழைமக்களை கொள்ளை கொள்கின்றன? எந்த ஊரில் கோடிமக்கள் பசியால் வருந்துகின்றனர்? எந்த ஊரில் கோடான கோடி குடிசைகளிலும் தரித்திரத்திலும் அசுத்தத்திலும் வாழ்ந்து வருகின்றனர்? எங்குமில்லை என்று சொல்லலாம்! அந்த கார இருளில் மூழ்கிக்கிடக்கும் நாட்டை இரண்டொரு பிரசங்கத்தால் சீர்படையச்செய்ய சுயமரியாதையோர் நினைக்கின்றார்கள் போலும்! உங்களுடைய ஆற்றல் இவ்வளவில் நிற்க நமது தேசிய காங்கிரசின் வள்ளலைச் சற்று கவனிப்பாம்.

தேசிய காங்கிரஸ் என்னும் ஸ்தாபனம் ஏறக்குறைய 50 வருஷங்களாக தேசமுன்னேற்றத்தைக்குறித்து உழைத்து வருகிறது. இதன் நடைமுறை (Method of work) காலத்திற்கு தக்கவாறு மாறிக்கொண்டு வந்திருக்கின்றது. இதன் நோக்கமோ மிகுதியும் அரசியல் விஷயமாகக்கொண்ட நோக்கமாகும். முதலில் சுதேசிகளுக்கு (Natives) பொது உத்தியோகங்களில் அதிகமாகக்கொடுக்கவேண்டுமென வாதித்து வந்தது. இத்துடன் சிலவரிகளைக்குறைக்கவும் சில சட்டங்களை அமுலுக்குக்கொண்டுவரவும் உழைத்து வந்தது. ஆனால் இந்தக்காலத்தில் சில உத்தியோகங்கள் சில சுதேசிகளுக்கு கிடைத்து வந்தனவேயொழிய மற்றபடி பொது ஜனங்களுக்கு யாதொரு பயனும் அளிக்கவில்லை. ஜாதி மத நடத்தைகளில் எந்த வித ஆழ்ந்த சீர்திருத்தங்களும் நடைபெறவில்லை. இந்த காலத்தில் தான் மிண்டோ மார்லி (Minto Morley Scheme) அரசியல் திட்டம் நிகழ்ந்து வந்தது. இந்த காலத்திற்கு முந்தி பிரதம தேசியவாதியாகிய தாதாபாய்நவ்ரோஜி (Dadhabai Naoroji) பாமர மக்களின் வறுமையைப்பற்றிப்பரிந்து பேசிவந்தார். இந்த காலத்தில் சுயராஜ்யமென்ற சொல் இந்திய அரசியல் துறைகளில் வழங்கி வந்தது. இந்த காலமுதல் பிரிட்டிஷாரும் அரசியல் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற அவசியத்தையும் ஒத்துக்கொண்டு வந்தனர். அதுமுதல் நாளதுவரை பொது மக்கள் சுகப்படும்படியான சீர்திருத்தங்கள் யாதொன்றும் பிரிட்டிஷார் வழங்கவுமில்லை, சுதேசிகள் பெறவுமில்லை. இந்தக்கால வரையின் பிறகு (Period) மாண்டேகு செம்ஸ்பர்ட் (Montagu Chelmsford) திட்டமென்ற அரசியல் முறை ஏற்பட்டது. இனி சைமன் திட்டம் வரப்போகின்றது. எந்த திட்டங்கள் வந்தும் காந்தியார் ஒத்துழையா இயக்கத்தை இந்த மூன்றுவது தடவை நடத்தியும் நாட்டைவிட்டு மதக்கட்சிகளும் மூட நம்பிக்கைகளும், ஜாதிப்பற்றும், ஜாதி வேற்றுமைகளும், தரித்திரமும், பிணியும் போனதாகவாவது அல்லது போகப் போவதாகவாவது காணப்படவில்லை.

காந்தியாரின் தலைமையின் கீழ் சென்ற 15 வருஷகாலமாக காங்கிரஸ் தேசத்திற்கு உழைத்து வருவதாகச் சொல்லலாம். ஆனால் பாமர மக்களுக்கு எந்தப்பயனையும் அளிக்கவில்லை என்பதை மறுக்கமுடியாது. நீரின்மேல் குமிழிபோன்ற தேசபக்தி, தேசவிஸ்வாசம் சிலரிடம் உதித்ததாகச்சொல்லலாம். ஆனால் ஜாதிமதப்பிரச்சினைகளும், சொத்துரிமை பிரச்னைகளும் அதிகரித்தே வருகின்றன. இந்து முஸ்லீம் கட்சிகள், மிராசுதார் வாதம் தாழ்த்தப்பட்டோர் பிரச்சினை முதலாளிகளின் கடூரம் தொழிலாளியின் வறுமை பொது மக்களின் தாழ்ந்தவாழ்க்கை இத்தியாதி விஷயங்கள் மேன்மேலும் வலுத்து வருகின்றன. இவைகளுக்கு யாதொரு பரிகாரமும் காங்கிரஸ்காரர்களாலும் மற்ற தேசியவாதிகளாலும், ஆங்கிலத்துரைத்தனகாரர்களாலும் செய்ய முடியவில்லை. முக்கியமாக இந்த பற்பல தேசிய கட்சிகளும் பெறமுயர்ச்சித்து வருவது எதற்கென்றால் சிற்சில உத்தியோகங்கள் பெறவும், வரிகளை அதிகப்படுத்தவும், சிக்கனங்கள் ஏற்படுத்தவும், வர்த்தகம் பெருக்கவுந்தான். ஆனால் பாமர மக்களுடைய வறுமை அதிகரிக்கவும் மூடபக்தி நாட்டில் நிலைக்கவும் ஜாதி வேற்றுமை இருந்தவாறே இருக்கவும் இந்த நிலைமைகளைக்காப்பாற்றவே காங்கிரசினுடையவும், பிரிட்டிஷாரினுடையவும் மற்ற கட்சிகளினுடையவும் முயர்ச்சிகளென அறிக. இராமராஜியமுதல் நாட்டில் இருந்து வந்த நிலைமையை காப்பாற்றவே நமது காங்கிரசும் நமது மிதவாதிகளும் நமது ராஜாங்கத்தாரும் போரும் அதிக்கமென அறிக. கோயில் குளங்கள் மூடபக்தியை வளர்க்கவும் ஜாதிமத வேற்றுமைகள் தழைத்தோங்கவும் வறுமையும் அறியாமையும் நிலைத்துவரவும் ஏற்பட்டுள்ள நமது காங்கிரசும் பிரிட்டிஷ் அரசும் மற்ற தேச விஸ்வாசிகளும் அரசியல் கட்சிகளுமென அறிக. உண்மையை உலகம் உணரவேண்டுமானால் பிரிட்டிஷ் அரசியலும் காங்கிரஸ் வாதிகளும் மிதவாதக்கட்சிகளும் ராஜ விஸ்வாசிகளும் தேசத்தில கடந்த 100, 150 வருஷங்களாக சாதித்ததென்ன? ஊரில் மரணவிகுதி குறைந்ததா? பசிப்பிணி குறைவுபெற்றதா? சுகாதார வீடுகள் பாமர ஜனங்களுக்கு ஏற்பட்டனவா? வேலை இல்லாமை நின்றதா? சகலருக்கும் போதுமான உணவு கிடைக்கின்றதா? நாட்டில் சுத்தமும், சுகாதாரங்களும் அதிகரித்து சுகம் அதிகரித்ததா? கோயில் வருமானங்கள் சோம்பித்திரியும் குருமார்களுக்கும் மடாதிபதிகளுக்கும், தாசிக்கும், வேசிக்கும் தேருக்கும் திருவிழாக்களுக்கும் ஆகும்வினியோகம் குறைந்ததா? ஜாதி வேற்றுமைகள் குறைவுபட்டனவா? ஜாதிக்கட்டுப்பாடுகள் குற்றமென்ற (Criminal) விதிகள் ஏற்பட்டனவா?

சிற்சிலரே, பூமி முழுமையும் பங்கிட்டுக்கொண்டிருக்கும் நிலைமை ஒழிந்ததா? வரிகள் குறைவு அடைந்தனவா? அகவிலை ஒழுங்குபட்டதா? சமூக வாழ்க்கையில் ஏற்பாட்டுள்ள கொடூர பழக்கங்கள், வழக்கங்கள், தொலைந்தனவா? பகுத்தறிவு அதிகப்பட்டதா? ஸ்திரிகளுக்கும் புருஷர்களுக்கும் ஏற்பட்டுள்ள சமூக வித்தியாசங்கள் ஒழிந்து சமஉரிமை ஏற்பட்டனவா? கல்வி அதிகரித்ததா? எண்ணும் எழுத்தும் 35 கோடி மக்களும் அடைந்தனரா? இந்தக்கொடூர நிலைமையிலிருந்து எந்த மக்களும் நீங்கவில்லை என்றால், நிகழ்ந்து வரும் திட்டங்கள் இருந்துமென்ன? போயுமென்ன?

காங்கிரஸ் திட்டங்களால், பெரும்பான்மை பொது மக்களாகிய தொழிலாளரும், கிருஷிகரும், பிரிட்டிஷ் ஆட்சியில் அடைந்திருக்கும் நிலைமையைவிட, உயர்ந்த நிலைமையில் வர முடியுமா வென்றால், அதுவும் சொல்வதற்காகிலும், அனுமானிக்கவாகிலும் இல்லை. தற்போதுள்ள அரசியல் திட்டத்திலுள்ள விசேடங்களைவிட, வேறு எந்த விசேடம் முளைக்குமென்று எண்ணக்கூடும்? காங்கிரஸ் திட்டத்திலும் சொத்துரிமையும், மதவுரிமையும், ஜாதியுரிமையும் காக்கப்படப்போகின்றது. நிலச்சுவானும், பண்ணை ஆளும் காங்கிரஸ் திட்டத்தில் இருந்தே தீரப்போகின்றனர். தொழிலாளரும், முதலாளியும் பங்காளி தத்துவ முறையைக் கொண்டாடப்போகின்றனர். இவ்விருவருக்கும் எலிக்கும் பூனைக்குமுள்ள சம்பந்தந்தான் ஏற்படப்போகின்றது குடிக்கூலி வாங்கும் வீடுடைத்தவனும், குடிக்கூலி கொடுக்கும் குடியானவனும் இருக்கப்போகின்றனர். வர்த்தகமும், சிலரிடத்தே தங்கப்போகின்றன. பொதுவுடமையோ, அல்லது சமதர்மவுடமையோ, காங்கிரஸ் ஆட்சியில் காணப்போவதில்லை. நாட்டுக்கு நல்லரசன் வந்தாலும, தோட்டிக்கு புல்சுமக்கும் வேலை இருந்தே தீரப்போகிறது. நிலமில்லாதவன். நிலமில்லாமலும். ஜமீன்தாரன் ஜமீன்தாரனாகவும், முதலாளி முதலாளியாகவும், தொழிலாளி தொழிலாளியாகவும், புரோகிதன் புரோகிதனாகவும், கோயில் கோயிலாகவும், பிராமணன் பிராமணனாகவும், பறையன் பறையனாகவும் இருந்தே தீரப்போகின்றனர். இந்த திட்டமே, நமக்குள்ள சமூக திட்டமாக 5000 வருஷகாலமாக இருந்து வருகின்றது. இதே திட்டம் வெள்ளையர் அரசியலிலும் இருந்து வருகின்றது. இனி வரப்போகும் சைமன் திட்டத்திலும் சொத்துரிமை, மதப்பற்றுரிமை, ஜாதிவித்தியாசவுரிமை காப்பை அளித்துமுள்ளார். இக்காப்பினை காங்கிரஸ் நிராகரித்ததாகத் தெரியவில்லை. ஆனால், கராச்சியில் கூடிய காங்கிரசில் இந்த மூன்று தற்காப்புகளையே, அதாவது சொத்துரிமை, மதவுரிமை, ஜாதியுரிமைகளை காக்கவேண்டிய திட்டத்தையே அங்கீகரிக்கபட்டுள்ளது. ஆதலின், காங்கிரசும், "அவன் தம்பி அங்குதன்" என்றவாறே நடக்கப்போவதாக உறுதி கூறியுள்ளது! ஆதலின் காங்கிரஸ் கூற்றும், பிரிட்டிஷார் கூற்றும் ஒன்றென்றால், எதைத்தான் உயர்வு தாழ்வு என்றி சொல்லுவது? ஆங்கிலத்தல் சொல்வதின்படி "There is nothing to choose between both" இரண்டில் எதையும் அங்கீகரித்துப் பேச இடமில்லை என்று தீரமாக உரைக்கலாம். காங்கிரஸ் திட்டங்களே, இவ்வகையானால், மற்றுமுள்ள அரசியல் கட்சிகளைக் குறித்துச்சொல்லவும் வேண்டுமா? மற்ற கட்சிகள் யாவும் முதலாளி கட்சிகளே யாகும். சொத்துரிமை, மதவுரிமை, ஜாதியுரிமைகளைத் தவிர்த்த கட்சியாதுமில்லை. ஒத்துழைக்கும் கட்சிகள் யாவும் பிரிட்டிஷாரைப் போல் முதலாளி கட்சியினரே யாவர். இவ்விதமான, எந்த கட்சிகளாலும் பாமர மக்களுக்கு நன்மை இல்லை என்றால், அவர்களுக்கு எந்த காலத்தில் தான் விமோசனம்? இந்த சந்ததியில் (Present generation) நமது 35 கோடி மக்களுக்கு, சுகமென்பதே எந்த காலத்திலும் வரப்போவதில்லை போலும்!! ஆனால் ஒரு நம்பிக்கை கடந்த 7, 8 வருஷமாக உண்டாகிக்கொண்டே வருகின்றது. அதுயாதெனில், உங்கள் சமூக உழைப்பாகிய சுயமரியாதையே என்று எண்ணலாம் போலும்.

உங்கள் சுயமரியாதைத் திட்டத்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# நகையா?
## அல்லது நங்கையர்
# அடிமைத்தளையா??

(நாகை கே. முருகேசன்)

சகோதரிகளே! உங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகள் அனந்தம். உங்களை இதுகாறும் கேவலம் "பிள்ளை பெறும் இயந்திரமாக" மதித்து வந்த கொடுமை ஒரு புறமிருக்க அதன் மூலம் உங்களுக்கு சொத்துரிமை ஏற்படாமல் போனது அதினிலும் கொடியதாகவே முடிந்தது. அத்துடன் நீங்கள் என்று நகை அணிந்து கொள்ள வேண்டுமென்ற பிரேமையை உடையவர்களாக ஆனீர்களோ அன்றிருந்தே நீங்கள் ஆண்களுக்கு ஒரு விதத்தில் அடிமைப் பட்டவர்களாக இருக்க நேரிட்டது. இதை மறுக்கும்அனேக பிச்சுகளும் உண்டு. அவர்க்ள் கூறும் சமாதானம் பெண்களுக்கு சொத்துரிமை இல்லாத ஒரு குறையானது நகை அணிவது என்ற வழக்கத்தினால் நிவர்த்தி அடைகிறதென்று கூறுகின்றனர். இதை ஆராய்ந்து பாருங்கள்! சமாதானம் முற்றிலும் பிழையுடையதென்பது புலனாகும்.

பெண்களுடைய அடிமை நிலையில் அவர்கள் எவ்வளவு தான் நகை அணிந்து கொண்டாலும் அதை அவர்கள் சுதந்திரமாக உபயோகிப்பதற்கில்லை. மேலும் இந்த நகையை ஆண்களுடைய தயவின்றி சுதந்திரமாக பெற முடிகிறதா? அதுவுமில்லை. இன்னொன்று தன் முடைக்கு எதவு மென்று ஒரு பெண் சில நகைகளை அணிந்து கொண்டிருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அவள் சில காலங்களுக்குப் பிறகு அவற்றை விற்று உபயோகிப்பதென்றாலும் அக்காலத்திள்கிடையே ஏற்பட்ட விலைமாற்றம், தேய்வு, காசுக்கடைக்காரனின் புரட்டு' தட்டானுக்குக் கொடுத்த கூலி நஷ்டம் ஆக இவைகளெல்லாம் கழிந்த மீதந்தான் இறுதியில் கிட்டுவதாக இருக்கின்றது. இந்த விற்று முதலை கணக்குப் பார்த்தால் அசலுக்கே பாதி கூட தேறுவது துர்லபமாயிருக்கும். இவ்வளவு நஷ்டங்களுக்கிடையே நகைகளை அணிந்து கொள்வதும் அதை ஒரு சிலர் பெண்களின் "சேவிங்ஸ் பாங்" என்று கூறுவதும் எவ்வளது புரட்டு என்பதையும் கவனியுங்கள் அத்துடன் நஷ்டம் மாத்திரமல்லாமல் நகை அணிந்தால் எப்பொழுதும் திருட்டு பயத்திற்காக இவர்கள் வெளிப் போவதற்கே அஞ்சி பதுங்க வேண்டி இருக்கிறது. அலட்சியமாக சென்றவர்கள் எவ்வளவு காது கழுத்து அறுபட்டு துன்பமுற்றனர் என்பதையும் கவனியுங்கள். அதன் பிறகு நகை அணியும் பழக்கமானது பெண்களின் சொத்துரிமையின் சாயலென்பதை விடுத்து அவர்களுடைய சத்துருவாக ருக்கிற தென்றே அறிந்து கொள்வீர்கள் விதண்டையாக பேசுவதை விட பெண்களுக்கு உண்மையான நன்மைகளை அளிக்கக்கூடிய சுயசம்பாத்தியத்திற்கான சுதந்திரமும் சட்ட ரீதியான சொத்துரிமையும் ஏற்படுவதற்காகப் பிரயத்தினப் படுவதன்றோ யோக்கியமாகும்.

எனினும் பெண்கள் மேற் கூறிய சுதந்திரங்கள் பெற்ற பிறகும் கூட நகை அணியும் பிரேமையை விட்டொழிப்பார்களா என்பது தான் நமது கவலை. பாரம்பரியமாக இந்த பிரேமை ஏற்பட்டு முற்றி பைத்தியமாக மாறிய ஒரு நிலையில் இங்ஙனம் சந்தேகிப்பதற்கு இடந்தருகிறது. எனினும் பண்டைக்காலத்தில் பெண்கள் பாரமாக அணிந்திருந்த அனேக விகாரமான நகைகளெல்லாம்ஒழிந்து ஒரு சில எண்ணிக்கைகளுக்கு வந்திருப்பதைக் கொண்டு சிறிது திருப்தி அடைய வேண்டி இருக்கிறது. மேலும் நாகரீக முதிர்ச்சியினாலோ சிறிது கல்வி பெற்றதின் பயனாலோ இளம் பெண்களில் பெரும் பகுதியார் தங்களுடைய மூக்கு காதுகளை துளையிட்டுக் கொள்வது அநாகரீகமென்று எண்ணத் தலைப்பட்டு விட்டனர். இதுவும் சிறிது திருப்தியை அளிப்பதாகவே இருக்கிறது. என்றாலும் இவர்களுக்கும் இன்னும் அந்த நகைகளின் மீதுள்ள பிரேமையானது அடியோடு நீங்கி விடவில்லையென்பது வெளிப்படை ஆனால்இன்னும் சிறிது காலத்தில் இன்னும் அதிகமான கல்வியும் அறிவும் நாகரீகமும் முதிர முதிர இவைகள் ஒழிந்துவிடு மென்றே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. இதற்கு அடிப்படையான சில விஷயங்களையும் பெண்ணுலகம் அறிந்து கொண்டாலொழிய இந்தப் பைத்தியம் ஒழிவதற்கு வெகு காலம் பிடிக்கு மென்றே அஞ்சுகின்றோம். இந்த நகை அணியும் பழக்கமானது வெகு பிராசீனமானது என்று யாவரும் ஒப்புக் கொள்கின்றனர். இந்தப் பிரேமை பெண்களைப் பிடித்தது இன்று நேற்றல்ல. மக்கள் அநாகரீக மிருகப் பிராயத்தினராய் இருந்த பொழுதே இப்பழக்கம் ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

நாகரீக முதிர்ச்சி அடைந்து வரும் இந்தக் காலத்திலும் கூட நம் ஆஸ்திகக் கூட்டத்தினர் உங்களை வெறும் பிள்ளைப் பெறும் கருவியாக மதித்து வருகின்றார்களெனின் அநாகரீககாலமாகிய பண்டைக் காலத்தவர்கள் உங்களை வெறும் ஆண்களின் காம வேட்கையை தணித்துக் கொள்வதற்கான பொம்மைகளாக மதித்து வந்தனர்களென்றால் இதில் என்ன ஆச்சரிய மிருக்கமுடியும். ஆகவே நீங்கள் பண்டைக்கால முதல் ஆண்களின் சொத்தாகப் பாவிக்கப் பட்டீர்கள். வயிற்றுப் பசியை தீர்த்துக் கொள்வதற்கு வேட்டையாடுவதும் உண்பதும் உங்களுடன் சேர்ந்து காம வேட்கையை தீர்த்துக் கொள்வதும் உறங்குவதுமாகவே காலங் கழித்து வந்தனர். அக்காலத்தவர்களின் வாழ்க்கை லட்சிய மெல்லாம் அவ்வளவோடு முடிந்தது.

அந்நிலையில் காட்டு மிராண்டி ஆடவர்களின் வேட்டைக் கருவியாகிய அம்பு, வில், நாய்கள் இவைகள் போன்றே நீங்களும் அத்தியாவசியமான உடைமையாக கருதப் பட்டீர்கள். நீங்கள் சாதாரணமாகபொதுச் சொத்தாக இருந்த காரணத்தால் வாள் வலியும் தோள்வலுவும் உள்ள ஆண் மக்களால் பலத்த போட்டிக்கிடையே உங்களைக் கவர்ந்துசென்று அவர்களில் குடில்களில் சிறைப் படுத்தி வைத்தனர். மனத்திற்கினியதும் வாழ்க்கைக்கு அவசியமாகக் கருதப் படுவதுமான எந்த வஸ்துக்களும் சாதாரணமாகப் பெட்டியில் வெகு ஜாக்கிரதையாக வைத்துக் காப்பாற்றப்படுவது சகஜமல்லவா? அது போலவே நீங்களும் ஆண்களுக்கு அடிமைப்பட நேர்ந்தது. அவர்கள் தங்கள் அருமை நாய்க் குட்டிகளை அலங்கரிப்பது போலவே தங்கள் அநாகரீகக் கண்களுக்கு ரம்மியமாகப் படும் விதத்தில் செயற்கை அழகை உங்களுக்கு செய்து பார்த்துக் களிகூர்ந்தனர்.

முதலில் பலவித புஷ்பங்களாலும் இலை தழைகளாலும் உங்களை அலங்கரித்துப் பார்த்தனர். பின்னர் பலவித பூச்சிக்கூடுகளாலும் கிளிஞ்சல்களாலும் அக்காமணி போன்ற அனேக மணிகளாலும் காலத்திற்கு காலம் அலங்காரம் மாறியது. சிங்கப்பல்லும் புலி நகமும் ஒருகாலத்தில் உங்கள் ஆபரணமாக இருந்தது. பிறகு பித்தளையும் செம்பும் முத்தும் பவளங்களுமாக மாறியது. அவைகளும் மாறி வெள்ளி தங்கமாகவும் இறுதியாக நவரத்தினமாகவும் மாறி வந்து விட்டது. பெண்களை அலங்கரிப்பதற்கு உபயோகப்பட்ட இந்த நானாவித வஸ்துக்களும் நாளடைவில் மதிப்பும் கிராக்கியும் அடைந்ததே ஒழியபெண்களாகிய உங்களுக்கு ஒரு சிறிதாவது யோக்கியதையை அதிகப்படுத்தவில்லை.

பணி அணிகளால் அலங்கரித்துக் கொள்ளும் பழக்கமானது உங்களிடத்தில் குடி கொண்டு நாளடைவில் அதுவே உங்களுக்குள் அடிமைப் புத்தியை அதிகப் படுத்துவதற்கும் ஆயுதமாக இருந்தது. இயற்கைகளை மறந்து செயற்கை அழகில் சித்தம் கலங்கிய நீங்கள், வாழ்க்கையின் உன்னத லட்சியம் வேறு எதையும் அறியாத நீங்கள், அதிக நகைகளை பெறுவதற்கு ஆசைப்படுவதும், அதை உங்களுக்கு அளிக்கவல்ல ஆடவர்களுக்கு உங்கள் தேகத்தை அடகு வைக்கவும் ஒருப்பட்டீர்களென்பது சகஜமானதே. எனினும் இதனால் உங்கள் அடிமைத்தளை இறுகியதே ஒழிய தளரவில்லை. என்ன கேவலம்! அநாகரீக காலத்தில் ஏற்பட்ட ஒரு கெட்ட பழக்கத்தை நீங்கள் இன்னும் கைவிட மனமில்லாதிருப்பது கேவலமல்லவா? நீங்கள் எவ்வளவிற் கெவ்வளவு பாரமாக நகைகளை வாரிச் சுமக்கண்ணுகிறீர்களோ, எவ்வளவிற் கெவ்வளவு லட்சணமான அவயவங்களை அவலட்சணமாக பொத்தல் செய்து கொண்டு திரிகின்றீர்களோ அவ்வளவிற் கவ்வளவு உங்கள் அடிமை விலங்கானது அழுத்தமாக உங்களை பிணித்து நிற்கு மென்பதை மறந்து விடாதீர்கள். உங்கள் அடிமைத் தனத்தை நீங்களே உணர்ந்து கொண்டு அதற்கான விடுதலை மார்க்கத்தைத் தேடாத வரையில் உங்களை அடிமையாக நடத்துவதாக ஆண்களைக் குறை கூறுவதில் யாதொரு வித பிரயோஜனமில்லை. நகைப் பைத்தியத்தைக் கொண்டே உங்களை திருப்தி பண்ண முயன்று அதன் மூலம் அடிமைகளாகச் செய்ய விரும்பும் ஆண்கள் உங்கள் அறிவு விருத்தியில் அக்கரை கொள்வார்களென்பது அசம்பாவிதம். உங்களை அடிமைப்படுத்துவதற்குச் சுலபமானமார்க்கங்கள் எவைஎவையோ அவைகளெல்லாம் ஒழிந்த பொழுதே நீங்கள் உங்கள் உண்மை நிலையை அறிந்து கொள்வீர்கள். ஆனால் இவற்றிற்கு உங்களுடைய சுய அறிவும் அவசியமாக இருக்கிறது. அந்த அறிவு கல்வியினாலல்லது வேறு மார்க்கத்தால் அடைய முடிவதல்ல. நீங்கள் கல்வி பெறாமல் அறியாமையினால் அழுந்திக் கிடக்கின்ற வரையில் ஆண்களின் சுயநலத்திற்கு அரணல்லவா? அதனால் உங்களை இன்னும் கேவலமாக மதித்து உங்களைத் திருப்தி பண்ணுவதற்கு இயலாத ஆண் மக்கள் உங்களை "ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள்" என்றும் இன்னும் இது போன்ற அடை மொழிகளால் கேவலமாக வர்ணித்ததோடு பாட்டும் பாடி மனுஸ்மிருதி போன்ற பல புத்தகங்களையும் எழுதி வைத்து விட்டனரன்றோ! உங்களுக்கு அறிவு என்பது ஒன்று உண்டு என்பதையே அலட்சியம் செய்து விடும்படியாக நீங்கள் நகைப் பைத்தியத்திலேயே நாட்டம் கொண்டு கிடந்தால் உங்களை அவர்களுக்குச்சமத்துவமானவர்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# "எட்டாவது ஆண்டல்லவா? யாருக்குக்கொண்டாட்டம்?? யாருக்குத் திண்டாட்டம்???"

[யானை வெடி]

ஒரு குடும்பத்திற்கு தலைவன் தகப்பன். ஒரு கிராமத்திற்கு தலைவன் கிராமமுன்சீப். ஒரு போர்க்களத்திற்குத் தலைவன் காப்டன் என்பதுபோல, சுயமரியாதை இயக்கத்திற்குப் பத்திரிகைகளில் தற்காலத்தலைவன் "குடிஅரசு" என்னும் வாலிபனே. அவனுக்கு வயது வரவர தன் வேலையில் வெகு மும்மரஸ்தனை விளங்குகிறான். நண்பர்களே! முதலில் எனக்குத்தான் கொண்டாட்டம் என்? இந்த எட்டாவதாண்டில் சப்தமுள்ள வெடியாக வெடித்து சாதித்திமிர்கொண்டவர்கள் காதுகளில் சமயப்பித்துக்கொண்ட சாம்பிராணிகளின் காதுகளில் 'சுள்' என்ற சப்தத்தைக்கொடுத்து அவர்கள் மூளைகளில் சூழ்ந்திருக்கும் சூன்யங்களை அகற்றி சுகப்பட வாழச் செய்வேன். தங்களது சொந்த புத்தியை உபயோகப்படுத்தாது எப்பொழுதோ ஒரு கூட்டத்தாரால் அவர்களது சுயநலத்துக்காக எழுதிவைத்த ஏடுகளை நாட்டிற்கு நன்மை பயக்காதகதைகளை நரகமென்ற ஒரு மிரட்டல் சொல்லிற்குப்பயந்து அக்கொள்கைகளிலும் அன்னாரின் பேச்சுகளிலும் நம்பிக்கை வைத்து நலிவுறாடும நண்பர்களின் காதுகளில் என்னுடைய வெடியின் சப்தமானது நறுக்கென்று நுழைந்துவிடும் அவர்களது சொந்த (சுய)மரியாதையைக் காப்பாற்றுவதற்குப் பாடுபடும். இது தான் எங்களது ஆசை. குடிஅரசு என்ற வாலிபனுக்கும் மற்றுமுள்ள சீர்திருத்தப்பிரியர்களுக்கு முன்னவா; இதில்தான் எங்களுக்குக் கொண்டாட்டம்.

இவ்வேழு வருஷங்களாக குடிஅரசு எடுத்துக்கொண்ட வேலைகளில் உயரிய நோக்கங்களில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கும் அதுவும் அன்னார் ஒப்புக்கொண்ட கொள்கைகளை நடைமுறையில் நடத்திக்காட்டியவர்களுக்கும் கொண்டாட்டம். சூத்திரன் என்றால் வேசிமகன் என்ற பொருளை உணர்ந்தவர்களுக்கும்; அதன்படி சூத்திரன் என்று சொல்லும் கூட்டத்தினரை அவ்வப்பொழுது கண்டித்தவர்களுக்கும்; சுயநலங்கொண்டு சாஸ்திரமென்றும், சமயமென்றும், மதமென்றும், மநு என்றும், புராண இதிகாசமென்றும் கடவுள்கள் திருவிளையாடல் என்றும் எழுதிவைத்த ஒரு கூட்டத்தாரின் விளம்பரங்களில் சூழ்ச்சிகளில் உள்ள நம்பிக்கையை முற்றும் விட்டவர்களுக்குக்கொண்டாட்டம் அவைகளுக்காக கைக்காசுபோகாமல் விழித்துக்கொண்டவர்களுக்கும் கொண்டாட்டம். மோக்ஷம், நரகம், பரமபதம், வைகுண்டம் பாபவிமோசனத் தண்ணீர் பட்டாடைசாமிகள், பண்டைக்காலத்து வெறும் பழக்கங்கள், பசுதானம் இவைகளில் உள்ள நம்பிக்கையைவிட்டு விட்டதற்கு செய்கையில் காண்பித்தவர்களுக்குக்கொண்டாட்டம். இறுதியாக கதர், ஹிந்தி, காந்தீயம், காங்கிரசு, குடிசைத்தொழில், வருணாச்சிரமம், பகவத்கீதை, ஆகிய இவைகளடங்கிய பணக்காரர்களும், பார்ப்பனர்களும், தங்களது செல்வாக்கை நிலைநிறுத்திக்கொள்ளவும், தங்களது சூழ்ச்சிகள் வெளியாகா வண்ணமும் ஏற்படுத்திய கூட்டத்தில் காலடி வைக்காதவர்களுக்கும் கொண்டாட்டம்.

ஆனால் யாருக்குத்திண்டாட்டம்? பார்ப்பனர்களிலும் படுமோசப்பார்ப்பனர்களை நம்பி பாதத்தில் விழுந்து பாதகாணிக்கை செலுத்தி பசுதானம் வழங்கி (கலர் கலந்த) பஞ்சு பச்சையரிசியைத்தலையில் பயபக்தியாக ஏற்றுக்கொண்டவர்களுக்கும், இனிக் கொள்பவர்களுக்கும் திண்டாட்டம் மறுஜென்மத்திற்கென்றும், மதத்திற்கென்றும், மோக்ஷத்திற்கென்றும், தங்களது மதியையும் இழந்து மதவெறிகொண்ட மடையர்களிடம் தங்களது பொருளையும்கொடுத்து மண்டிபோட்டவர்களுக்கும் போடுபவர்களுக்கும் திண்டாட்டம்.

அதன்பிறகு பரமசிவன் என்றும் பங்கயற்கண்ணன் என்றும், பரமேஸ்வரி என்றும், பண்டரிநாதன் என்றும், பழனி முருகன் என்றும், பள்ளிகொண்டவனென்றும், அம்மன் என்றும், அரசாணி என்றும், அருக்கக்கடவுள் அங்காளம்மை என்றும், அழகியநாச்சி என்றும், அம்பிகா என்றும், அல்லல்தரக்கூடிய வார்த்தைகளை நம்பி; அன்பில்லாத அருளில்லாத ஆணவங்கொண்ட அர்ச்சகர்களிடம் தங்களது அருமை புத்தியையிழந்து தங்கள் பொருள்களை அள்ளிக்கொடுத்தவர்களுக்கும் கொடுக்கிறவர்களுக்கும் இனிக்கொடுப்பவர்களுக்கும் திண்டாட்டம். கதர், ஹிந்தி, காந்தீயம், காங்கிரசு, மகாத்மா, என்பதில் நம்பிக்கை வைத்து தங்களது சூத்திரப்பட்டமும் எடுபடாமல் தலைவர்களை கார்கள் மூலமாகவே சிறைபுகச்சொல்லி தடையுத்தரவை மீறி தடுப்பதில் தாங்கள் முன்போய் நின்று தடியடிபட்டவர்களுக்கும் படுகிறவர்களுக்கும் வாங்கப்போகிறவர்களுக்கும் திண்டாட்டம். இன்னும் யாருக்குக்கொண்டாட்டம்? உண்மையை உணர்ந்து உலகத்தையறிந்து உண்டியல் உளறுவாயர்களை உதைத்து தள்ளுபவர்களுக்குக்கொண்டாட்டம். கலப்பு மணம் கண்யமுள்ளதெனவும் விதவைமணம் விவேகமுடையதெனவும் தங்களது விவேகத்தாலேயே விரைவில்அறிந்து அதன்படி நடக்க வீரிட்டெழுந்தவர்களுக்கும் கொண்டாட்டம். என்ன யானை வெடியே! வெடி ஒன்றாயிருக்கவேண்டும். தலை வேறு உடல்வேறாக இருக்கவேண்டாமா? அதுபோல சுருங்கச்சொல்ல வேண்டுமென்று நினைத்தீர்களானால் சொல்லிவிடுகிறேன், பகுத்தறிவை உபயோகப்படுத்துகின்றவர்களுக்குக் கொண்டாட்டம். பகுத்தறிவைஉபயோகப்படுத்தாதவர்களுக்குத் திண்டாட்டம். சுயமரியாதைக்காரர்களுக்குக்கொண்டாட்டம். புராணமரியாதைக்காரர்களுக்குத் திண்டாட்டம். இன்னும் சுருங்கச்சொல்லவேண்டுமானால் கோபியாதீர்கள் சொல்லிவிடுகிறேன் சு. ம. க்காரர்களுக்குக் கொண்டாட்டம். பு. ம, க்காரர்களுக்குத்திண்டாட்டம், இன்னும் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இத்துடன் இக்கட்டுரையையும் சுருக்கிக்கொண்டேன். நல்லவேளை ஒரே ஒரு ஆசீர்வாதம் குடிஅரசே எட்டாவதாண்டில் இன்னும் எண்ணற்ற மக்களை ஏமாற்ற மென்ற தூக்கத்திலிருந்து எழச்செய்வாய்! புஸ்!

---

# பாட புத்தகங்கள்.

(என். ரங்கசாமி பி. ஏ., எல். டி.,)

மதம் என்ற பைசாசம் எப்பிரதேசத்தில் உளதோ ஆங்கு மனிதருக்கு ஓர் நிலையான அறிவு கிடையாது. மதம் கடவுளைச்சார்ந்தது. கடவுள் நம்பிக்கையைச். சார்ந்த ஓர்..........என்னவென்று தெரியாது. மதத்தையும் கடவுளையும் நம்பியிருக்கும் ஓர் மனிதனிடத்து சுயபுத்தியோ தன்நம்பிக்கையோ ஓர் காரியத்தை சாதிப்போமென்ற ஓர் தைரியமோகிடையாது. அன்னவர் பிள்ளையாருக்குத்தேங்காயுடைப்பவராயும் காளிக்கு ஆடு, எருமை, கோழி வெட்டுபவராயும், பழனிக்குப் பாற்காவடி, மச்சக்காவடி அன்னக்காவடி எடுப்பவராயுமே இருப்பர். இவர் எவ்வளவு கற்றவராயிருப்பினும் சரி; எவ்வளவுயர் பதவியிலிருப்பினும் சரி; இரசாயன சாஸ்திர பௌதீக சாஸ்திர விற்பனாயிருப்பினும் சரி; திருச்சி மலைக்கோட்டைப் பிள்ளையாருக்கு பி, ஏ. எம். ஏ. முதலிய உயர் பரீக்ஷாகாலத்துத் தேங்காய் எத்தனை உடைபடுகின்றன? மந்திரி முதலிய உயர் பதவி கிடைத்த பிறகு காவடி எடுப்பவர்கள் எத்தனை? சாஸ்திர விற்பன்னர்கள் கிரகணம் பிடித்த குளிர்காற்று அடிக்கும் இரவில் ஆற்றில் இறங்கிச்சபிப்பார் எத்தனை? என்னே இவர்களின் மாண்பு! என்றுதான் இவர்களுக்குச் சுயபுத்தி வருமோ தெரியவில்லை. இன்னவருக்கு ஓர் பொருளினிடத்து ஓர் நிலையான நம்பிக்கை கிடையாது. கலாசாலைகளில் சாஸ்திரிகள் சூரியனையோ சந்திரனையோ இராகு கேது என்னும் பாம்புகள் பிடிப்பது சாஸ்திரோக்தத்திற்கு விரோதமென உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஆதாரங்களுடனும் உதாரணங்களுடனும் எடுத்துமிக அழகாகப்போதிப்பர். ஆயினும் கிரகணம் வந்த காலத்து நதியினிடம் சென்றும் கடற்கரை சென்றும் தாமும் தம் மக்களும் மூக்கைப்பிடித்து ஆற்றிலும் கடலிலும் நிற்பர். பாம்பு சூரியசந்திரர்களைப் பிடிக்கிறதென்று பண்டைய புராணங்களினின்று கூறுவர் ஓர் அலைவந்து இவர்களை அடித்துக்கொண்டு போய்விடும். மாண்டார். புத்தியிருந்தும் இல்லாத சாஸ்திரி அந்தோபாவம்!

இத்தகைய சுயபுத்தி அற்ற தன்மை இந்து மதத்தில் மட்டும் அன்று மற்றெல்லா மதங்களிலும் உண்டு; கிறிஸ்துவ மதத்திலும் உண்டு, மகமதிய மதத்திலும் உண்டு, இன்னும் மற்றெல்லா மதங்களிலும் உண்டு கடவுள் மதத்தால் பீடிக்கப்பட்ட எல்லா ஜன சமூகத்தையும் பீடித்துள்ளார்.

ஓர் பாடததில் நமது பள்ளிச்சிறார் பூமியை ஆதிசேடன் தாங்குகிறாரென்று படிக்கின்றனர், மற்றோர்வஸ்துவைபாடத்து ஓர்வஸ்துவைமற்றோர் இழுக்கும் சக்தியால் அந்தரத்து நிற்கின்றதென்று படிப்பர். இந்துமகா சமுத்திரம் பசிபிக் மகா சமுத்திரம் முதலிய சமுத்திரங்கள்தான் உண்டென்று படிப்பர்; மற்றோர் பாடத்துப்பாற்கடல், தயிர்க்கடல் முதலிய கடல்களும் இருக்கிறதென்று படிப்பர் (காபிக்கடலும், சேமியா பாயாசக்கடலும் தற்போது இருக்கிறதென்று நான் சாஸ்திர வாயிலாக ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்துள்ளேன் வேண்டியவர்கள் மிகவும் சொற்ப விலைகொடுத்து நம்மிடம் அங்கு செல்லசீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.)

மார்க்கண்டனுக்குச் சிவபிரான் என்றும் பதினாறாயிருக்க வரமளித்த வரலாறென்னே! இஃது யாங்ஙனம் முடியும்! [Time and tide, nobody can call back.) சென்றகாலம் வருமோ? அது கடவுளாயிருப்பினும் சரி, கடவுளுடைய பாட்டனாயிருப்பினும்சரி, காலஞ்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# "மதமும் ஒழுக்கமும்"

டாக்டர் R. P. பராஞ்சிபே எழுதியது.

(நாகலிங்கம்-மொழிபெயர்ப்பு)

வேத சாஸ்திரிகள் கடவுள் என்ற வார்த்தையையோ அல்லது கர்மா என்றதையோ காரணகாரியங்களோடு மெய்ப்பிக்க முடியாவிட்டாலும், தாங்கள் கொண்டுள்ள சித்தாந்தங்களை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்றும், இல்லையேல் உலகில் ஒழுக்கஈனம் மலிந்து பெருங்குழப்பத்தை உண்டாக்கி விடுமென்றும் சாதிக்கின்றனர். அவர்களது எண்ணத்தில் மத நம்பிக்கையானது பெருந்துணை புரிகிறது. முதலில் எல்லோரும் உண்மையாகவே பின்பற்றுகிறவர்களாயிருந்தால் சமூகம்எவ்வகைஇடையூறுமில்லாமல் போய்க்கொண்டேயிருக்கிறதென்பது உண்மைதானா? மதத்திலோ அல்லது கோட்பாடுகளிலோ அறிவற்று நம்பிக்கை வைப்பதால் துன்பம், கஷ்டம், ஒழுக்கஈனம், சுயநலம் இவற்றை உண்டாக்குகிறதல்லவா? அறிவற்று நம்பிக்கை வைப்பவர்கள் முன்னேற வழியில்லாது தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்களா இல்லையா? பற்பல தேசங்களிலும் மதவெறி அதிகமுள்ள காலங்களில் அடிமை வாழ்வே ஸ்தாபனங்களாக செழித்தோங்கவில்லையா? மதத்தைக்காரணமாகக் கொண்டு பயங்கரமான யுத்தங்கள் நடைபெறவில்லையா? முஸ்லீம்களையோ, அல்லது ஹிந்துக்களையோ போன்ற மதப்பற்றுடைய ஜனங்களிடையே பெண் மக்கள் நிலை திருப்திகரமாயிருக்கிறதா?

தெய்வீகம் என்ற சித்தாந்தத்தினால் புதுவிதமான துன்பங்கள் ஒழுக்கத்திற்கும் சரீரத்திற்கும் ஏற்படுகிறதா இல்லையா? கடவுள், பேய், பிசாசு முதலியவற்றின் மீது நம்பிக்கை வைப்பதினால் எத்தகைய கஷ்டங்களை மக்கள் அநுபவிக்கிறார்கள். அதனால் அடையும் ஒழுக்கக்கேடுகள் எத்தனை? துறவரத்தின் அவசியத்தை வற்புறுத்துவதால் ஏற்படும் தூஷணைகள் எவ்வளவு? மதநம்பிக்கையிலிருந்து உண்டாகிற சதி, நரபலி, விரதங்கள், கசையடி, கடுந்தண்டனை, குருக்கள் மார்களது பிரமசரியம் முதலிய மனிதவர்க்க துயரத்திற்கே ஆஸ்பதமாயிருக்கின்றனவா இல்லையா? கோவில்கள், மசூதிகள், தேவாலயங்கள், சமாதிகள் முதலியன கட்டுவதற்காக செலவிடப்படும் பெருவாரியான பணத்தை வேறு வகையில் அறிவோடு செலவு செய்தால் ஜனசமூகம் க்ஷேமமடையாதா? இந்தியாவில் அடிக்கடி ஏற்படுகின்ற சமூகச் சண்டைகளுக்கு மதநம்பிக்கை முக்கிய காரணமல்லவா? மதநம்பிக்கை ஜனசமூகத்தின் சந்தோஷ வாழ்க்கையை அதிகரிக்கின்றது என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அதற்குநேர்விரோதமானஉண்மைகள் இந்தியாவில் காணப்படுகிறதாஇல்லையா?

ஒரு சாதாரண மனிதன் ஒழுக்க சட்டத்திற்கும், சமூக நடத்தைக்கும் சில அநுமதிகள் பெறத்தக்கவன்என வற்புறுத்தப்படுகிறது. அதற்காகவே கடவுள், கர்மா போன்ற பல மத சித்தாந்தங்கள் வழங்கப்படுகிறது, இத்தகையஅநுமதிகள் அவனிடமிருந்து எடுக்கப் படுமேயானால் அதேமனிதன் ஒழுக்க ஈனனாகிவிடுவான் என வாதிக்கப்படுகிறது. ஒழுக்க சட்ட திட்டத்திற்கு இத்தகைய உத்தேசமான அனுமதிகள் வேண்டற்பாலதெனச் சொல்லப்படுவதற்கு நாம் சம்மதிக்க முடியாது. ஒழுக்க வரம்பிற்கு கட்டுப்பட்டே நடக்கவேண்டுமென்ற ஓர் உணர்ச்சி ஜனசமூகத்தினிடையே இயற்கையாகவே இருக்கின்றன.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஜனசமூகம் அடைந்த அனுபவங்களால், பரந்த நோக்கோடு பார்ப்போர்களுக்கு உண்மை, தயாளம், அன்பு முதலியநற்குணங்கள் பொது நன்மையே உண்டாக்கி இருக்கிறதென்பதையும். இதற்கு மாறான குணங்கள் தீமையையும். அதிருப்தியையும் உண்டாக்கியிருக்கின்றனவென்பதையும் கண்டு கொண்டிருக்கின்றன, தவிரவும் உண்மையும் அறிவுக்கு ஒவ்வாதமான சித்தாந்தங்களின் ஆதாரத்தின் மீது நமது சரியான நடத்தையை உபயோகிப்போமேயானால், இத்தகைய சித்தாந்தங்களில் நம்பிக்கை இழக்க வேண்டி வருங்கால் அப்போது நமது நடத்தையும் நம்பிக்கையற்றுப்போக இடமேற்படுகிறது. உதாரணமாக மதுவிலக்கை எடுத்துக் கொள்ளுங்கள். மது விலக்குப் பிரசாரங்கள் அநேகமாக மத சித்தாந்தத்திற்கு விரோதமான குடியை ஒழிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்வதால் வைதீகரும் மதப்பற்றுள்ளவர்களுமான ஹிந்துக்களும் முகமதியர்களும் குடியை வெறுக்கிறார்கள். ஆங்கில கல்வி இந்நாட்டில் புகுத்தப்பட்ட ஆரம்பகாலத்தில் வைதீகமதத்தில் அநேகர் நம்பிக்கை இழந்தனர். அது சமயம் தாங்கள் மதவிடுதலை பெற்றதற்கறிகுறியாக அபரிமிதமாக குடிவகைகளை உபயோகிக்கத் தொடங்கினர். அனால் முதலிலேயே அறிவிற்குப் பொருத்தமான முறையில் சரீராரோக்கியத்திற்கு கெடுதி விளைவிப்பது குடியே என்பதாகபிரசாரம் செய்யப் பட்டிருக்குமேயாயின் பின்னால் அதிகமாகக் குடிக்க வேண்டுமென்று தூண்டிய உணர்ச்சிஉண்டாயிருக்குமா என்று கேட்கின்றேன்.

மனிதன் பொதுவாகவே கண்டு பழகும் மிருகமேயாவான். சமூகசம்மந்தமான நடத்தைகள் ஏதோ சில சித்தாந்தங்களின் மீது தான் உண்டானவை என்பதை விட்டு, ஏனையோர் செய்கிறார்களே, நடக்கிறார்களே, ஆகையால் நாமும் அப்படியே தான் நடக்க வேண்டும், செய்யவேண்டும் என்று கருதுகிறவனாயிருக்கிறார். தன்னைப்பற்றி அக்கம் பக்கத்தார்கள் கண்ணியமாக நினைக்கவேண்டுமென்று கருதுகிறான். பாரம்பரியமாய் வந்த தன்னறிவும் சிறுவயதிலிருந்து அனுஷ்டித்துவந்த பழக்க வழக்கங்களும்இதற்குத்துணை புரிகின்றன. மத ஆதிக்கம் தேய்ந்து வருகிற ஏனைய தேசங்களிலும் இத்தகைய முடிவான சம்பவங்களே நிகழ்த்துகின்றன. இங்லாந்து பிரான்ஸ், ஜெர்மனி போன்ற தேசங்களில் கிறிஸ்துவ மதப்பற்றுள்ளவர்களும் நம்பிக்கை யுள்ளவர்களும் மிகவும் சொற்பமே. ஆனால் அவர்கள் ஒழுக்கவரம்பிற்கு மாறுபட்டு நடப்பதே கிடையாது. பிரதியாக அவர்களிடம் தேசபக்தி, பொதுஜன சேவை, உண்மை, தயாள சிந்தை பொருமை, சமூக ஊழியம் முதலிய அருங்குணங்கள் செழித்து வளர்ந்தேவருகிறது. அதேபோல இந்தியாவிலும் மதப்பற்றும் நம்பிக்கையும் தேய்ந்து வந்தாலும், அல்லது அறவேஒழிந்து போனாலும் மேற் கூறியமற்ற தேயத்தினரைப் போலவே ஒழுக்கக்குறை வில்லாதும், ஏனைய குணங்களோடும் விளங்கு வார்கள் என்பது நிச்சயம். சிலர் காரணவாதம், கொடியதும், லோகாயதமானதென்றும், ஜன சமூகத்தின் இயற்மையையோ அல்லது, இயற்கையின் நுட்பங்களையோ, அழகு, அன்புமுதலிய வற்றையோ மதிப்பதில்லையென வாதிக்கிறார்கள். இஃது உண்மையில் ஒரு பொய்க்குற்றம் என்றே கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் காரணவாதிகள் [Rationalists] இத்தியாதி குணங்களையெல்லாம் சீர் தூக்கிப் பார்த்த பின்பே எவ்விஷயத்தின் மீதும் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். மனோவிகார எண்ணங்களுக்கும், ரசஞ்ஞானத்திற்கும், போதிய கவனம் செலுத்தப்படுகிறது. இத்தகைய உபகருவிகளினாலே ஜனசமூகத்தின் வாழ்க்கையை செழிப்பாக்கவே அவர்கள் எண்ணுகிறார்கள். தவிரவும் மிகமுக்கியமானதாக உலகத்தில் எவ்வித தெய்வாதீனமான அல்லது இயல்புக்கு மாறான சம்பவங்கள் நடைபெறுவது கிடையாதென்றும், எல்லாம் ஒரே விதமான இயற்கைச் சட்டங்களாலேயேநடைபெறுகின்றன வென்பதும் அவர்களது, திடமான நம்பிக்கை. படைப்பாளன் என்று சொல்லப்பட்ட ஒருவனால் சூரியன் சலனமின்றி ஓரிடத்திலேயே நிற்கும்படி செய்யப்பட்டால், வானசாஸ்திரம் பொய்யாவதோடு அதன் உண்மையோ அல்லது புகழோ மதிப்பிழந்து விடுகின்றதன்றோ. உலகத்தில் இயற்கை ஒழுங்கு மறைந்து விடுகிறதன்றோ. கண்சிமிட்டக்கூடிய நேரத்தில் புது வகையான ஜீவவர்க்கங்கள் உண்டாக்கப்படுமேயானால் ஒரு பரம்பரை சந்ததிவர்க்கம் என்ற சாஸ்திரமும், தாவரவர்க்கம் ஜீவவர்க்கம் இவற்றின் ஒழுக்க வளர்ச்சி என்னுவது? இவைகளையெல்லாம் நீரகாரண காரியங்களோடு யோசித்து கடவுள் வணக்கத்தாலோ அன்றி வழிபாட்டாலோ ஒரு முடிவுக்கு வரயத்தனிக்காமல் தன் சுயமுயற்சியாலும் எண்ணத்தாலும், ஆராய்ச்சியாலும், உழைப்பினாலுமே ஒரு பகுத்தறிவாளன் [Rationalist] எத்தகைய முடிவுக்கும் வருகிறான்,

## புதுவையில் சுயமரியாதைக்கூட்டம்.

25-4-32 தேதி மாலை 5-30 மணிக்கு புதுவை முத்தையால் பேட்டை நி. செ. சாலடித்தோட்டத்தில் சுயமரியாதைப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பிரஞ் இந்திய சட்டசபை அங்கத்தினரும், அரியநகர் மேயரும், வக்கீலுமாகிய திரு. எஸ். பெருமாள் அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். பிரஞ் இந்திய அமைச்சர் திரு. ஆ. வே. முத்தையா அவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். தலைவர் முகவுரைக்குப்பின் முறையே தோழர்களான எஸ் குருசாமி பி.ஏ, பொன்னம்பலனார், குஞ்சிதம் பி. ஏ., எஸ். பி. விசாலட்சி சுப்பையா, எஸ் சகுந்தலா, எஸ். காந்தம் ஆகியவர்கள் பேசினார்கள், பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## திருப்பத்தூரில் சுயமரியாதைப் பிரசாரம்.

24-4-32ந் தேதி மாலை 5 மணிக்கு திருப்பத்தூர் மார்க்கட்டில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் ஜோலார்ப்பேட்டை பார்த்தசாரதி, சேலம் கோசலம், சித்தையன் ஆகியவர்களும், நகரின் முக்கியஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். பின் பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி "சுயமரியாதையும் காங்கிரசும்" என்பதுபற்றியும், திரு. எஸ். வி. லிங்கம் அவர்கள் "நகரசபைத்தலைவர் ராமசாமி ஐயரின் தவறு" என்பதுபற்றி பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

# தமிழைப்பிடித்த சனியன்.

[சாமி. சிதம்பரனார்]

ஒரு நாட்டின் மக்கள், அறிவு வளர்ச்சி பெறுவதற்கும், நாகரிகமடைவதற்கும் முதன்மையான காரணமாக இருப்பது அந்நாட்டின் மொழி யென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆதலால் நாட்டு மொழியைப் பண் படுத்த வேண்டியது, நாட்டுத் தொண்டர்களின் கடமையாகும்; மொழிப் பற்றுளர்களின் கடமையும் ஆகும். இவ்வாறு காலத்திற்கு ஏற்ப மக்களுக்கு அறிவையும், நாகரிகத்தையும் ஊட்டக் கூடிய முறையில் பண் படுத்தப் படாத நாட்டு மொழிகள் யாவும் நாளடைவில் மாண்டு மடிவது திண்ணம்.

இவ்வுண்மையை மனத்திற் கொண்டு நமது தமிழ் மொழியின் நிலையைச் சிறிது ஆராய்ந்து பார்த்தால் இம்மொழி அடைந்திருக்கும் தாழ்ந்த நிலைமை புலப்படாமற் போகாது. தற்காலத்தில் தமிழ் மொழியை மட்டிலும் கற்ற ஒருவர், உலக அறிவையும், நாகரிக உணர்ச்சியையும் பெற முடியாது. இதற்கான நூல்கள் தமிழ் மொழியில் இல்லாமையே காரணமாகும்.

தமிழ் மொழியை மட்டிலும் படித்த ஒருவர், குறுகிய அறிவு கொண்டு, மத வேற்றுமை வகுப்பு வேற்றுமை பாராட்டிக் கொண்டு தம்மை விட அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர் வேறு யாரும் இல்லை என்று எண்ணிக் கொண்டு, மாந்தர் கூட்டத்திற் சேராமல் ஒதுங்கியிருந்து விலங்கின் வாழ்க்கையை 'நடத்தத் தான் பயன் படுவாரே ஒழிய வேறு ஒன்றற்கும் உதவமாட்டார் என்பது உறுதி. இதற்குக் காரணம் வகுப்பு வேறு பாட்டை வலியுறுத்தும் புராணத் தொகுதிகளையும், மத வேற்றுமையை வலியுறுத்தும் சமய நூல்களையும் கற்பதேயாகும்.

வகுப்பு வேற்றுமைகளையும், சமய மாறுபாடுகளையும் கூறாத இலக்கியங்களாகத் தமிழ் மொழியில் உள்ள நூல்கள் சிலவே. அவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்னும் சங்க நூல்களேயாகும். இவைகளிலும் கூட சமயச் சனியன் நுழைந்துள்ளான் என்று தான் கூற வேண்டும். இதற்கு எடுத்துக் காட்டாக, பத்துப் பாட்டினுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையையும், எட்டுத் தொகையினுள் ஒன்றாகிய பரிபாடலையும் கூறலாம். இவை இரண்டும் புராணக் கோட்பாடுகளை வலியுறுத்தும் நூல்கள் என்பதை அவற்றைக் கற்றோர் கண்டுணர்வர்.

இனி சங்க நூல்கள் என்று சொல்லப்படும் பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களை எடுத்துக் கொண்டால் அவற்றிலும் பயனற்றவை மிகுதியாக உண்டு என்று உணரலாம். இந்நீதி நூல்களில் "திருக்குறள்" ஒன்றையே சிறந்ததாகக் கூறலாம். இதற்கு அடுத்தபடியாக, "நாலடியார்" "பழமொழி" என்னும் இரண்டு நூல்களையும் கூறலாம். ஆயினும் இவற்றைக் கற்பதனாலும், வாழ்க்கைக்கு யாதும் பயனில்லை யென்பதே எமது உள்ளக்கிடக்கை. மற்ற நீதி நூல்களில் நிலைமையோ மிகவும் இழிந்ததாகும். அவைகள் போதிக்கும் செய்திகள் "உலகம் நிலையற்றது: உடல் நிலையற்றது; செல்வம் நிலையற்றது; கேட்பவருக்கு இல்லை என்று சொல்லாதே; உன்னுடைய செல்வத்தைக் கொண்டு தருமஞ் செய்: கற்றவர்களுக்கு அஞ்சு; அவர்கள் விரும்பியதைக் கொடு; உயர்ந்தவர்களை எதிர்க்காதே; தெய்வத்தைப் போற்று; முன்னோர் வழியைப் பின் பற்று" என்பன போன்ற சோம்பேறி வேதாந்தங்களையே போதிக்கின்றன. இந்த அறிவுரைகள் என்று சொல்லப்படுகின்ற—கற்றவர்களுக்குப்பாதுகாப்பு அளிக்கும்—தன்னல மொழிகள் யாருக்கு வேண்டும்?

ஐம்பெரும் காப்பியங்கள் என்று சொல்லப்படும் சங்க நூல்களும், சமண, புத்த மதங்களைப் போதிக்கும் கதைகளே.

இப்பொழுது தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் புராணங்களும், சமய நூல்களும், சங்க நூல்களும், நீதி நூல்களுமேயாகும். இவற்றைத் தவிர உடல் நூல், பூமி நூல், வான நூல், ரசாயன நூல், இயற்கைப் பொருள் நூல், பொருளாதார நூல், அரசியல் நூல் கைத்தொழில்கள் சம்பந்தமான நூல்கள் போன்றவை யாதொன்றும் தமிழ் மொழியில் இல்லை. பள்ளிக் கூடங்களில் பாடம் வைப்பதற்காக இவை சம்பந்தமாக எழுதப் பட்டுள்ள சிற்சில சிறுசிறு புத்தகங்களைத் தான் காணலாம். மக்களுக்குப் பயன் படக்கூடிய இத்தகைய நூல்கள் நாட்டு மொழியில் வெளி வந்தால் ஒழிய அம்மொழியினால் அந்நாட்டு மக்களுக்கு ஒருபயனும் உண்டாகாது.

காலஞ் சென்ற பாரதியார், தமிழ் மொழியின் வளர்ச்சியைக் குறித்துக் கூறும் போது,

> பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
> தமிழ் மொழியில் பெயர்த்தல்
> வேண்டும்;
> இறவாத புகழுடைய புதுநூல்கள்
> தமிழ் மொழியில் இயற்றல்
> வேண்டும்;
> மறைவாக நமக்குள்ளே பழங்
> கதைகள்
> சொல்வதிலோர் மகிமை யில்லை;
> திறமான புலமையெனில்
> வெளி நாட்டோர்
> அதை வணக்கம் செய்தல்
> வேண்டும்;

என்று கூறிப் போந்தார். இதை உய்த்துணர்ந்து ஆவனபுரியும் அறிஞர்கள் நமது நாட்டில் யாருள்ளார்? இன்னும் பழங்கதை பேசிக்கொண்டு காணே காலம் போக்குகின்றனர்?

ஆனால் "தமிழ் வளர்ச்சி" "தமிழ்த் தெய்வம்" "தமிழ்த் தாய்" "தமிழ்த் தொண்டு" என்று பிதற்றிக் கொண்டு கிடக்கும், பண்டிதர்கள் பலர் இருக்கின்றார்கள்; தமிழ்ச் சங்கங்கள் சில இருக்கின்றன, இந்தப் பண்டிதர் குழாங்களுக்கும், சங்கங்களுக்கும், உண்மையில் தமிழ்ப் பற்று இருக்கலாம். ஆனால் இந்தப் பண்டிதர்களும், சங்கங்களும் எந்த முறையில், எந்த நோக்கத்தோடு, தமிழ் மொழியை வளர்க்க விரும்புகின்றார்கள் என்பதை உற்று நோக்கினால் இவர்களே தமிழைக் கொலை செய்யும் கொலைகாரர்களாகத் தோன்றியிருக்கிறார்கள் என்பது விளங்கும்.

சில பண்டிதர்கள், வைணவ மத புராணங்களைப்பற்றியும், வைணவ சமயக் கொள்கைகளைப் பற்றியும், மக்கள் உணரும்படி செய்வதே தமிழ்த் தொண்டு என்று கருதுகின்றனர். சில பண்டிதர்கள். சைவ சமய புராணங்களையும், சைவ சமய நூல்களையும் மக்கள் உணரும்படி செய்வதே தமிழ்த் தொண்டு என்று கருதியிருக்கின்றனர். சங்கங்களும் இதைத் தான் செய்கின்றன. உதாரணமாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும் கரந்தைத்தமிழ்ச்சங்கத்தையும் எடுத்துக் கொள்ளலாம். மதுரைத் தமிழ்ச் சங்கம், பார்ப்பனர்கள் பொறுக்கித் தின்பதற்கிடமாகவும், வைணவ சமய வளர்ச்சி சபையாகவும் இருக்கின்றது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குச் செல்வ நிலை அரிதானமையால் யாரும் அதை அண்டிப் பிழைக்க வழியில்லை; ஆனால் இச்சங்கம் சைவ சமய வளர்ச்சி சபையாக இருக்கிறது என்று எண்ணும்படியான நிலையில் தான் இருக்கிறது.

இனி, இந்தப் பண்டிதர்களும், சங்கங்களும், செய்யும் தமிழாராய்ச்சியையும், வெளியிடும் தமிழ் நூல்களையும் எடுத்துக் கொண்டால், அவை ஒரு இழுப்புப் பொடிக்குக் கூட பயனற்றவை என்று தான் புகல வேண்டும். ராமன் கதை, பஞ்ச பாண்டவர் கதை, கண்ணகி கதை, மணிமேகலை கதை, புராணக் கதைகள் இவைகளைச் சுருக்கி எழுதுவதும், விரிவாக எழுதுவதும், பாட்டாக எழுதுவதும், வசனமாக எழுதுவதும் அவைகளில் உள்ள பாடல்களுக்குப் பொருள் எழுதுவதும், ஆகிய செயல்கள் தான் இவர்கள் செய்யும் ஆராய்ச்சி; இவைகள் தான் இவர்கள் தமிழ் மொழிக்குச் செய்யும் உதவி.

வெறுந் தமிழ்ப் புலவர்கள் தான், வேறு வழியில்லாமல் வயிற்றுப் பிழைப்புக்காக இவ்வாறு பழங்கதைகளை எழுதிக் கொண்டு கிடக்கிறார்களென்றால், ஆங்கிலம் படித்த புலவர்களுமா இதையே செய்ய வேண்டும்? பி. ஏ. எம். ஏ. பி. எல். எம். எல். முதலிய பட்டம் பெற்ற புலவர்களுங்கூட தேவாரப் பிரசங்கம் செய்வதும், அப்பர் சுந்தரர், சம்பந்தர் கதைகள் எழுதுவதும், ராமாயணப் பிரசங்கம் பண்ணுவதும், கண்ணகி கோவலன் கதை எழுதுவதும், அப்பர் திருவிழா நடத்துவதுமாக இருந்தால் தமிழ் மொழி வளர்வது எப்பொழுது?

பரந்த கல்வி யுடையவர்களும், சமயப் பித்துக் கொண்டு தமிழ் மொழியைக் கொலை செய்வதற்குக் காரணம் தமிழ் மொழியில், தற்காலத்தில் இலக்கியங்களாகக் கருதப் படும், சாதி சமய நூல்களேயன்றோ? ஆகையால் உண்மையிலேயே தமிழ் மொழி மக்களுக்குப் பயன்பட வேண்டுமானால்—தமிழ் மொழியில் புதிய நூல்கள் தோன்றவேண்டுமானால்—வேற்று மொழி பயின்றவர்களும் மூடர்களாகாமலிருக்க வேண்டுமானால், தமிழ் மொழியில் உள்ள சாதி, சமய நூல்களையெல்லாம் கட்டி மூலையில் போட வேண்டும்.

இந்த நூல்கள் ஒரு புறமிருந்தாலும் தற்காலத்தில் தமிழ் மொழியை வளர வொட்டாமலும், தமிழ் மொழியைக் கற்கின்றவர்களுள் பகுத்தறிவற்ற சாதி சமயப் பித்துக் கொள்ளும்படி செய்வதற்கும் காரணமாக இருப்பவர்கள், பண்டிதர்களும் சங்கங்களும் என்பதே நமது முடிவான எண்ணமாகும். ஆகவே முதலில், சங்கங்களும் பண்டிதர்களும் சீர்திருந்தினலொழிய மொழி சீர்திருந்தாதென்பதை எடுத்துக் காட்டி முடிக்கின்றோம்.

---


## விளம்பரம்.

கொழும்பில் கீழ்கண்ட விலாசத்தில் சுயமரியாதை பத்திரிகைகளும், புத்தகங்களும். தலைவர்கள் உண்மை போட்டோக்களும் பேட்ஜ்களும் (புதுவை முரசு) விசேஷ அநுபந்தமும் கிடைக்கப்பெறலாம்.

ஏ. எஸ். பரமசிவம்.
46, காலிரோட், பம்பலபிட்டி
கொழும்பு.


---

ஹிந்தி 'இந்திய'பாஷை;
ஆங்கிலம் உலக பாஷை.
இதில் எதைக்கற்பது
அவசியம்?

# திரு. காந்தியின் முன்னுக்குப்பின் முரண்.

(ஆர். இரத்தினசபாபதி)

உயர் திரு. காந்தி அவர்கள் 1919-ம் ஆண்டில் இந்தியாவில் பெரிய அரசியல் வாதியாகவும், சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கவரான போதும் அவரது அடிப்படையான கொள்கை 'தீண்டாமை ஒழித்தல்' அதாவது தீண்டாமை ஒழியாமல் சுயராஜ்யம் ஓர்நாளும் வராது. அவர் தீண்டாமை ஒழித்தலின் அவசியத்தையும், வைதீகத்தைக் கண்டித்தும் சாஸ்திரிகள் கூட்டத்தில் மிகவும் ஸ்பஷ்டமாகவும், ஆணித்தரமாகவும் கூறியதைக்கீழே கொடுக்கிறேன். திரு. காந்தியவர்கள் 1925-ம் ஆண்டின் இரண்டாவது மாதக்கடைசியில் கத்தியவாரில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது ராஜக்கோட்டை என்னும் இடத்தில் அவர் உபசரிக்கப்பட்டார். ஜனப்பிரதிநிதி சபையின்சார்பாக கொடுக்கப்பட்ட உபசாரப்பத்திரம் அவ்வூர் அரசன் தாகூர்சாயபு அவர்களால் வாசிக்கப்பட்டு அநேக சாஸ்திரிகளால் ஆசீர்வாதம் செய்யப்பட்டது. திரு. காந்தியவர்களின் தேச கைங்கர்யங்களில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை முயற்சியைத்தவிர வேறு ஒன்றும் குறிப்பிடப்படவில்லை திரு. காந்தியவர்கள் பதில்கூறுமுகத்தான்............உங்கள் உபசாரப்பத்திரத்தில் நீங்கள் உண்மையும், சாத்வீகத்தன்மையும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை முயற்சியும் என்னுடைய முக்கிய நோக்கங்கள் என்று சொன்னதோடு கதரையும், தீண்டாமை ஒழித்தலையும் விட்டுவிட்டீர்கள் இவைகளிரண்டும் மறந்துவிட்டால் ஹிந்து, முஸ்லீம் ஒற்றுமைமாத்திரம் சித்திக்காது. ஓர் அறிவுள்ள மகமதியர் சொன்னதுபோல் ஹிந்துக்களுக்குள்ளே தீண்டாதார் என்ற மதஸ்தர் இருந்தால் மற்ற மதஸ்தர்கள் ஹிந்துக்களிடம் என்ன நம்பிக்கை வைப்பார்கள். நமது சாஸ்திரங்களில் தீண்டாவகுப்பு என்று ஒன்றுமே கிடையாது. சாஸ்திரிகள் எல்லோரும் என்னை எதிர்த்தாலும் நான் தீண்டாமை தருமசாஸ்திரத்திலும் இல்லையென்று சொல்வேன்.............. என்று விளக்கமாகப் பேசியிருக்கிறார். ஆனால் அப்போது இப்படிச்சொன்னவர் தற்போது மாற்றுகிறார். அதாவது 'சுயராஜ்யம் வந்தவுடன் தீண்டாமை தானாகவே ஒழிந்துவிடும்' என்று சொல்கிறார். உதாரணமாக திரு. காந்தி அவர்கள் உப்பு சத்தியாக்கிரகத்துக்குப்புறப்படு முன்புகூட ஒடுக்கப்பட்டவர்கள் மறித்துக் கொண்டு கேட்க திரு. காந்தி அவர்கள் சுயராஜ்ய இந்தியாவில் தீண்டாமையை ஒழித்து விடுவதாகச்சொல்லிவிட்டார். ஆகவே திரு. காந்தியவர்கள் முன் சொன்ன கொள்கைக்கு இன்றுமுரண்படுகிறார் அல்லவா? நிற்க.

மேலே திரு. காந்தியவர்கள் கூறியபடி ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்குத்தாம் மிகப்பாடுபடுவர் என்றபடி அதற்காகிலும் ஓர் ஏற்பாடுசெய்யவேண்டாமா? ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையையும் அவர் தள்ளிவிட்டார்.

உதாரணமாக திரு. காந்தி அவர்கள் லண்டன் வட்டமேஜை மகாநாட்டுக்குப்போகு முன்பு 'நான் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்தாமல் லண்டனுக்குக் காலடிவைப்பதில்லை' எனக்கூறினார். ஆனால் எந்த ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்திவிட்டு லண்டன் சென்றார்?

திரு. காந்தி அவர்கள் தீண்டாமை ஒழியாமல் சுயராஜ்யம் வராது என்று சொன்னாரல்லவா. ஆனால் அதே திரு. காந்தியவர்கள் அதற்கு என்ன வியாக்கியானம் சொல்லுகிறார் தெரியுமா. தீண்டாமை ஒழியவேண்டுமென்று சொன்னவர் (அதாவது சமத்துவம் வேண்டும் என்று சொன்னவர்) பிறகு 'சமத்துவம் ஆத்மாவுக்கே ஒழிய சரீரத்திற்கல்ல' என்று சொல்லிவிட்டார்.

திரு. காந்தி அவர்கள் தான் எல்லா மதங்களையும் ஒன்றாகவே மதிப்பதாகக்கூறியது உலகப்பிரசித்தம். இதைக்கண்டே எல்லா மதஸ்தர்களும் இவரைத்தங்கள் தங்கள் மதப்பெரியார்களுக்கு ஒப்பிட்டு வந்தனர். ஆனால் இதே திரு. காந்தி அவர்கள் கராச்சியில் வாலிபர்களிடையே பேசியபோதும் சிகப்புச்சட்டைக்காரர்களால் கருப்புப்புஷ்பம் கொடுத்து கருப்புமாலை போட்டபோது தான் ராமராஜ்யத்திற்காக உழைப்பதாகவும் அதற்காகத்தான், தான் உயிருடனிருப்பதாகவும் உண்பது, உறங்குவது பேசுவது, மூச்சுவிடுவது ஆகிய யாவும் அதற்காகவே என்று சொல்லியிருக்கின்றார். இப்படிப்பட்ட ராமராஜ்யத்தை விரும்பும் போது முன்சொன்ன சர்வ மதக் கொள்கை எங்கே போயிற்று?

உயர் திரு. காந்தி அவர்கள் கதரையே பிரதானமாகக்கருதி அதைத்தவிர்த்து வேறு எதையும் அணியக்கூடாது அவ்வாறு அணிந்தால் அது தேசியத்திற்கு விரோதம் என்று சென்ற இடமெல்லாம் பிரசாரம் செய்தவர் இன்று ஆலை முதலாளிகளுக்கு சலுகை காட்டுவான்வேண்டி ஆலைத்துணியையும் ஆதரிக்கலாம் என்ற அபிப்பிராயத்திற்கு வந்துவிட்டார். அப்படியானால் கதர் இனிமேல் இறக்கவேண்டியதுதானா?

உயர்திரு. காந்தியவர்கள் கைத்தொழில் கோரி உழைப்பவர் என்பது உலகப்பிரசித்தம். இதற்கு சிறந்த உதாரணம் இவரின் ஆரம்ப கதர்திட்டம் டால்ஸ்டாயைப் போன்று இயந்திரங்களிலேயே பற்றில்லாதவர். ஆனால் சென்ற வருடம் அக்டோபர் மாதம் 31ந் தேதிக்குள் கைராட்டினத்தை இயந்திர வடிவாக்குபவர்க்கு ஓர் லட்ச ரூபாய் பரிசு கொடுப்பதாக அறிவித்திருந்தார். (இன்னும் இது கண்டு பிடிக்காததாலும்' அநேகர் இன்னுங் கொஞ்ச காலமாவது வாய்தா வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இன்னும் ஆறுமாதகாலமாவது வாய்தா கொடுக்கலாம் என்று கமிட்டியார் அபிப்பிராயப் பட்டிருப்பதாக சென்ற வருஷம் டிசம்பர் 8ந்தேதி பத்திரிகை செய்தி கூறுகிறது) ஆகவேகைத்தொழில் திட்டத்தை ஆதரிப்பவர் இன்று இயந்திரத்தை ஆதரிக்க வந்துவிட்டார்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு, திரு. காந்தி அவர்கள் தம் 'யங் இந்தியா'வில் அலகாபாத் பல்கலைக்கழகத்தில் பி. ஏ. வகுப்பில் வாசிக்கும் ஓர் மாணவர் ஜாதிப்பிரிவைப்பற்றித் தமக்குள்ளஐயத்தையும், யாவரிடத்திலும் சகோதர நேயத்தை வளர்க்கவேண்டிய வழியைப் பற்றியும் கடிதத்தின் மூலமாகத் தம்மை வினவியுள்ள வினாவுக்கு விடையாக எழுதியுள்ள கட்டுரையைப் படித்த எமக்குப் பெரும், வியப்பும், ஐயமும் உண்டாயிருக்கிறது. அதில் அவர் தற்சமயம் வழக்கிலிருக்கும் ஜாதி பேதத்தில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும், ஆனால் பரம்பரைத் தொழில்களால் விதிக்கப்படும் 'வருண' வித்தியாசத்தை நம்புவதாகவும் கூறுகிறார். ஜாதி பேதத்தை விரும்பாத திரு. காந்தி அவர்கள், வருணாச்சிரமத்தை ஏன் நம்புகிறார் எனத் தெரியவில்லை. வருணாச்சிரமத்தில் நம்பிக்கையிருக்கும் வரைக்கும் ஜாதி பேதத்தை நீக்குவதைப் பற்றிப் பேசுவது வீணாகவே முடியாதா? வருணாச்சிரம தருமம் நடைமுறையில் இருக்கும் வரைக்கும் ஜாதி பேதம் எவ்வாறு ஒழியும்? பழைய வருணாச்சிரம தர்மமுறைக்கும் தற்போதுள்ள ஜாதி பேதத்திற்கும் வேற்றுமையுண்டா? அவ்வாறு வேற்றுமை யிருப்பினும் தற்போதுள்ள ஜாதி பேதத்திற்கு வருணாச்சிரம தருமம் தானே அடிப்படையான காரணமாகும். எனவே காந்தியடிகள் பழைய வருணாச்சிரம தருமத்தில் நம்பிக்கையும் புதிய ஜாதி பேதத்தில் வெறுப்பும் கொண்டிருப்பதும் ஒன்றுக்கொன்று முரணல்லவா?

தென்னாட்டுப் பார்ப்பனர் ஒருவர் சுயராஜியத்தில் மதம் எப்படி இருக்கும் என்ற சந்தேகத்துடன் ஓர் கேள்வி கேட்டிருந்தார் அதற்கு திரு. காந்தி அவர்கள் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—பொதுக் கோவில்களை

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.

1—5—32 தேதி ஞாயிறன்று எனது தகப்பனார்
சிதம்பரநாதமுதலியாரவர்கள் உ[illegible]
[illegible] 10-5-32உ செவ்வாயன்று தரங்கம்பாடி
(King's Street) கிங்ஸ் ஸ்ட்ரீட் பங்களா
வில் நடக்கும் காரியங்களுக்குத்
தங்கள் வரவை கோரும்,
சி. நடராஜன்,
மாயவரம்.

## இலங்கை சந்தாதாரர்கள் கவனிக்க.

இலங்கைக்கு பத்திரிகை வி.பி. அனுப்புவதால் தபால் இலாக்காவினுல் ஏற்படும் சங்கடங்களை யுத்தேசித்து வி. பி. அனுப்புவதை நிறுத்தியிருக்கிறோம். சந்தாதாரர்களுக்கு சந்தா காலம் முடிவடையும் தேதி தெரிவிக்கப்படும். தயவு செய்து அவர்கள் தொகையை தவருமல் மணி ஆர்டரிலேயே அனுப்பிவிடவேண்டுகிறோம்.

மானேஜர்.

குடி அரசு.

ஈரோடு 1932 மேமீ 8-உ

# கோயில் நுழைவும் தீண்டாமையும்.

—:0:—

தீண்டாமை என்னும் வழக்கம் மனிதத் தன்மைக்கு விரோதமான தென்பதையும் அதுவே நமது நாட்டு மக்களைப் பலவேறு பிரிவினராக்கி வைத்துக் கலகத் தன்மையை உண்டாக்கி வருகிற தென்பதையும், தீண்டாமை ஒழிவதன் மூலந்தான் நாட்டில் ஒற்றுமையும், சகோதரத்துவமும் நிலவமுடியுமென்பதையும், இப்பொழுது அனேகமாக எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொண்டு விட்டனர். தீண்டாமையை நாட்டை விட்டு அகற்றி, அதனுல் துன்பப்பட்டுக்கொண்டிருந்த மக்களுக்குச் சமூக சமத்துவமளிப்பதற்காகப் பல கட்சியினரும் பேச்சளவிலும் எழுத்தளவிலுமாவது முயற்சி செய்ய முன் வந்திருக்கின்றனர்.

தீண்டாமை ஒழிந்து விட்டால் அதைப் போற்றுகின்ற வேத சாஸ்திரங்களுக்கும், வைதிக மதங்களுக்கும், அம்மதங்களைப் பின்பற்றுகின்ற கண் மூடி வைதிகர்களின் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆட்டமும் அபாயமும் உண்டாகிவிடும் என்பதை அறிந்திருக்கின்ற திரு. எம். கே. ஆச்சாரியார் கூட்டத்தைச் சேர்ந்த முரட்டு வைதிகர்களையும், அவர்களுடைய சூழ்ச்சிகளில் அகப்பட்டு கிடக்கும் பொது ஜனங்களையும் தவிர வேறு யாரும் தீண்டாமைக்கு ஆதரவளிக்க வில்லையென்று துணிந்து கூறலாம்.

தீண்டாமையை ஒழித்து, அதனுல் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கும் மக்களை கை தூக்கி விட வேண்டியது ஒழுங்கும் நியாயமும், அவசியமும் ஆகும் என்ற உணர்ச்சி தற்போது நமது நாட்டுஉயர்சாதி மக்கள் எனப்படுவோர்கள் சிலருடைய மனத்தில் பட்டிருப்பதற்குக் காரணம், தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் செய்யும் கிளர்ச்சியும், சென்ற ஏழெட்டு ஆண்டுகளாக நமது இயக்கம் செய்து வரும் பிரசாரமுமே என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனுல் தீண்டாமையை எந்த வகையினுல் ஒழிக்க முடியும் என்பதை ஆலோசிக்கும் போது, எல்லோரும் கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமலிருக்க முடியாது.

இந்து மதத்தைச் சாராதவர்களும், இந்து மதத்திற்கு எதிரானவர்களும், இந்து மதப் பற்றுடைய மக்களால், "அந்நியர்கள்" "மிலேச்சர்கள்" என்று இழித்துக் கூறக் கூடியவர்களுமாகிய வேற்று மதத்தினர்கள் உயர்சாதி இந்துக்களுடன் தீண்டாமையென்ற வேறுபாடின்றி நெருங்கிப் பழகிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனுல்,நீண்டகாலமாக இந்துக்கள் என்றே மதிக்கப் பட்டு வருகின்ற தாழ்த்தப் பட்ட மக்களோ உயர் சாதி இந்துக்களுடன் நெருங்கிப் பழக முடியாதவர்களாகவும், அவர்கள் வசிக்கும், தெரு, குளம் கிணறு, பள்ளிக்கூடம் கோயில் முதலியவைகளைச் சமத்துவமாக அனுபவிக்க முடியாதவர்களாகவும் "சண்டாளர்கள்" என்றும் "பாபிகள்" என்றும் "பஞ்சமர்கள்" என்றும், "பாதகர்கள்" என்றும் "புலையர்கள்" என்றும் பலவாறு இகழ்ந்து ஒதுக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தத் தகாத நடத்தைக்குக் காரணம் என்னவென்பதைக் கொஞ்சம் பொறுமையோடு ஆலோசித்தால் விளங்காமற் போகாது.

அந்நியராயிருந்தாலும் அவர்களிடம் மற்ற உயர்ந்த சாதி இந்துக்களைப் போல கல்வியும், செல்வமும், திறமையும், செல்வாக்கும் கட்டுப்பாடும் ஒற்றுமையும் அமைந்திருப்பதே அவர்கள் மற்ற உயர்ந்த சாதி இந்துக்களுடன் சமத்துவமாகப் பழகுவதற்குக் காரணமாகும்.

சகோதர இந்துக்கள் என்று சொல்லப் பட்டாலும் தாழ்த்தப்பட்டவர்களிடம், செல்வமும், கல்வியும், திறமையும், செல்வாக்கும், கட்டுப்பாடும், ஒற்றுமையும் இல்லாமையேஇவர்கள்"உயர்சாதி" என்று சொல்லப்படுகின்ற இந்துக்களால் தீண்டப் படாதவர்களாகக் கொடுமைப் படுவதற்குக் காரணமாகும்.

ஆகையால் உண்மையில் தீண்டப்படாத சகோதரர்கள் சமூக சமத்துவம் பெறவேண்டுமானுல் அவர்கள், கல்வியிலும், திறமையிலும், செல்வத்திலும், செல்வாக்கிலும், ஒற்றுமையிலும் மற்றவர்களைப் போல சம நிலையை அடைய வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனுல் இக்காரியத்தை இப்பொழுதோ அல்லது இன்றைக்கோ, அல்லது நாளைக்கோ, அல்லது மறு நாளோ, அல்லது ஒன்றிரண்டு மாதங்களிலோ அவசரப்பட்டுச் செய்து விட முடியாது. நாளடைவில் தான் இதைச் செய்ய முடியும்.

ஆனுல் தற்போது, அவர்களுக்குச் சமத்துவமளிக்கச் செய்யப்படும் சாதகமான செயல்கள், கோயில் பிரவேசம், தெரு, குளம் கிணறு, பள்ளிக்கூடம் முதலியவைகளைத் தடையின்றி அனுபவிக்க இடமளிப்பது போன்ற காரியங்களாகும் என்பதும் உண்மையேயாகும்.

ஆகவே இவைகளில் தீண்டப்படாதவர்கள்சமத்துவஉரிமை பெறும்விஷயத்தில், அரசாங்கத்தாரும்,சமூக-அரசியல்கட்சிகளைச்சேர்ந்ததலைவர்களும்ஆதரவாகவேஇருக்கின்றார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனுல் பொது ஜனங்களோ இன்னும் வைதீகர் வசப் பட்டவர்களாகவும் ஜாதி, மதம் தீண்டாமை முதலியவைகளில் கொண்டுள்ள நம்பிக்கை மாறுதவர்களாகவும் இருந்து வருவதினுல், தீண்டப்படாதசகோதரர்கள்மேற்கூறியவைகளில் சமத்துவம் பெறுவதற்குகஷ்டமாக இருந்துவருகிறது]

[இவற்றுள் மற்றவைகளைக்காட்டிலும் 'கோயில் பிரவேசம்'என்ற ஒரு விஷயமே இப்பொழுது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது.

இந்தக்கோயில் பிரவேசத்தின் பொருட்டு குருவாயூர் நாசிக்முதலிய இடங்களில் சத்தியாக்கிரகங்கள் நடக்துகொண்டிருக்கின்றன. இதற்கு முன் பலதடவைகளில் மதுரை, திருச்சிராப்பள்ளி, நாகர்கோவில், ஈரோடு முதலிய இடங்களில் கோயில் சத்தியாக்கிரகங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை பயனின்றிக்கழிந்தன.]

[ஆனுல் ;அக் காலத்தில் கோயில் சத்தியாக்கிரகத்திற்கு இருந்த ஆதரவைக்காட்டிலும் இப்பொழுது கொஞ்சம் அதிக ஆதரவே இருந்து வருகிறது என்று கூறலாம். இந்த ஆதரவைக்கொண்டு விடா முயற்சியுடன் கோயில் நுழைவுக்காகப்பாடுபட்டால் அவ்வுரிமைகிடைத்துவிடும் என்பதிலும் ஐயமில்லை என்றே வைத்துக்கொள்ளலாம். ஆனுல் இவ்வாறு தீண்டாத சகோதரர்கள் கோயில் நுழைவு உரிமை பெறுவதனுல் அவர்களுக்குக் கிடைக்கும் பயன் என்ன என்பதைப்பற்றியே இப்பொழுது நாம் குறிப்பிடவிரும்புகின்றோம்.

அவர்கள் மற்றவர்களுடன் சமத்துவமாகக்கோயில்களுக்குச் செல்லும் உரிமை பெறுவதன்மூலம் ஓரளவு தீண்டாமை ஒழிகின்றதென்பதையும் சமத்துவம் கிடைக்கின்றதென்பதையும் நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இதுவும் ரயில்வண்டிகளிலும் திருவிழாக் காலங்களிலும் கோயில்களின் தேர்களை இழுக்குங்காலங்களிலும் எந்த அளவில் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படுகிறதோ அந்த அளவில்தான் கோயில் நுழைவினுலும் தீண்டாமை ஒழிந்து சமத்துவம் ஏற்படும் என்பதே நமது கருத்தாகும். ஆகவே கோயில்நுழைவினுல் நிரந்தரமாகத்தீண்டாமையொழிவோ, சமத்துவமோ, ஏற்பட்டுவிடமுடியாது என்பதைப்பற்றி யாரும் ஐயுற வேண்டியதில்லை.

ஆகையால் பொது இடத்திற்குப்போகக்கூடிய உரிமை தீண்டாதவர்களுக்கும் இருக்கவேண்டும் என்ற கருத்துடன் கோயில் பிரவேச முயற்சி நடைபெறுமானுல் அதை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கவே கடமைப்பட்டுள்ளோம் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறில்லாமல் தீண்டாதவர்களும், கோயிலில் சென்று அங்கு இருப்பதாகச்சொல்லப்படும் 'கடவுள்' என்கின்ற குழவிக்கல்லுகளையும், பதுமைகளையும் தொழுவதற்கும், அவைகளின் பேரால் மற்ற மூடமக்களைப்போல்பணம் செலவு பண்ணுவதற்கும், இவ்வாறு செய்வதன்மூலம் அவர்கள் 'பக்திமான்கள்' ஆவதற்கும் 'மோட்சம்' பெறுவதற்கும் கோயில் பிரவேசம் அவசியம் என்ற கருத்துடன் முயற்சி செய்யப்படுமானுல் 'இம்முயற்சி கண்

## காலித்தனமா? அஹிம்சையா?

—:0:—

காங்கிரசின் பெயராலும், திரு. காந்தியின் பெயராலும், அஹிம்சையின் பெயராலும், சத்தியாக்கிரகத்தின் பெயராலும், நமது நாட்டில் இப்பொழுது நிகழ்ந்து வரும் காரியங்களைப்பார்த்தால் நியாயபுத்தியுடைய எவரும் அவைகளைக் கண்டிக்காமலிருக்க முடியாது. 'அஹிம்சையின்' பெயரால் ஆரம்பித்து நடத்தப்படும் சட்டமறுப்பு இயக்கத்தினால் உண்டாகும் ஹிம்சைகள் எண்ணற்றவை.

நாட்டில் வியாபார மந்தமும் பொருளாதார நெருக்கடியும் ஏற்றுமதி இறக்குமதிக்குறைவுகளும் ஏற்பட்டுச் செல்வநிலை பாழ்பட்டுக்கிடக்கிறது ஏழைமக்கள் பட்டினியிஞலும் நோயிஞலும் கிடந்து மடிகின்றனர். கற்றவர்கள் பலர் வேலையற்ற திண்டாட்டத்தினல் படும் தொல்லைகள் சொல்லித்தொலையாதவை.

அரசாங்கமோ இத்துன்பங்களை நிவர்த்தி செய்ய முன்வராம லிருப்பதற்குத் தங்களுக்குச் சட்டமறுப்புக்காரர்கள் கொடுத்துவரும் தொல்லையே காரணம் என்று சொல்லிவிடக் கூடிய நிலைமையில் இருக்கின்றனர்.

ஆகவே பொது ஜனங்களின் கஷ்டம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு போகின்றதென்பதை யாரும் இல்லையென்று சொல்லமுடியாது. 'அரசாங்கத்திற்கு உண்டாகும் கஷ்டம் ஜனங்களைப் பாதிக்காமல்போகாது' என்ற அரசியல் தத்துவத்தை அறிந்தவர்கள் சட்டமறுப்பு இயக்கமும் பொது ஜனங்களின் கஷ்டத்திற்கு ஒரு முக்கிய காரணமாகும் என்பதை ஒப்புக்கொண்டு தான் தீரவேண்டும்.

தற்போது சட்டமறுப்பு இயக்கம் அரசாங்கத்தாருக்குத் துன்பங்கொடுத்துக்கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் நேரே பொதுஜனங்களுக்கும், துன்பம் உண்டாகக்கூடிய நிலைக்குத்திரும்பிவிட்டதைக்கண்டும் பொது ஜனங்கள் அதை அடக்க முன்வராமலிருப்பதா என்பதுதான் நமது கேள்வி.

உதாரணமாகச்சில தினங்களாக நடைபெற்றுவரும் 'தபால்பெட்டிகளில் தீ யிடுதல்' என்ற நிகழ்ச்சியைப்பாருங்கள். இந்த முயற்சிஇப்பொழுது அனேகமாக இந்தியாவில் உள்ள எல்லாமுக்கிய பட்டணங்களிலும் தொடங்கி நடைபெற்று வருகின்றது. இந்தமதியற்ற காரியத்தால்உண்டாகும்கஷ்டமும் நஷ்டமும் யாருக்குஎன்று ஆலோசித்துப் பாருங்கள்.

இதனல் அரசாங்கத்திற்கு ஒருவித நஷ்டமுமில்லை கஷ்டமுமில்லை அரசாங்கத்தாரிடம் விலை கொடுத்துவாங்கிய ஸ்டாம்புகள் ஒட்டப்பட்ட தபால்களே பெட்டிகளில் போடப்படுகின்றன. அவைகள் பற்றியெரிந்து விடுவதனல் நஷ்டம் அரசாங்கத்தாருக்கா? பொதுஜனங்களுக்கா? என்று ஆராய்ந்து பார்க்கும் மூளையற்றவர்கள் தாஞ சுயேச்சை சுயராஜியம் பெற்று ஆளக்கூடியவர்கள்?

இன்னும் தபால் ஆபீசுகளில் மறியல் செய்யவும் ஆரம்பித்திருக்கின்றனர்- சில இடங்களில் ரயிலை மறியல் செய்தார்களாம். ஆஹா! இவையெல்லாம் எவ்வளவு புத்திசாலித்தனமான காரியங்கள்!

இது மாத்திரமல்ல தனி மனிதர்களின் உயிருக்கும் காலிகள் ஆபத்தை உண்டாக்கி வருகின்றார்கள். கொலை வெறி பிடித்த சில வாலிபர்களால், இது வரையிலும் உத்தியோகஸ்தர்கள் பலர் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கின்றார்கள். இதற்கு உதாரணம் சில தினங்களுக்கு முன் மிதுனபுரி ஜில்லா மாஜிஸ்திரேட் திரு. ஆர். டக்ளஸ் என்பவரை சுட்டுக் கொன்ற அநியாயமும் ஒன்ருகும். தங்கள் கடமைகளை நிறை வேற்றுகின்ற உத்தியோகஸ்தர்களை இவ்வாறு மூர்க்கத்தனமாகச் சுட்டுக் கொல்வதனல் சுயராஜியம் கிடைத்து விடுமா என்று தான் கேட்கின்ருேம்.

இங்ஙனம் உத்தியோகஸ்தர்களைக் கொலைபுரிந்து வரும் கூட்டத்திற்கும், காங்கிரஸ் சட்ட மறுப்புக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லப் பட்டாலும், அரசாங்கத்தின் - மேலும் வெள்ளைக்கார அதிகாரிகளின் மேலும் துவேஷத்தை உண்டாக்கி வரும், அஹிம்சா தருமம் என்று சொல்லப்படுகின்ற சட்ட மறுப்புப் பிரசாரமே காரண மென்பதை யார் மறுக்க முடியும்?

இத்தகைய கொலைச்செயல்களையெல்லாம் காங்கிரஸ்தலைவர்கள் என்பவர்கள் கண்டிக்கின்ருர்கள் என்ருலும் கொலை செய்யத்தூண்டும், துவேஷத்தையுண்டாக்கும் சட்டமறுப்புப் பிரசாரத்தை நிறுத்தவோ ஒழிக்கவோ யாரும்முன் வராமலிருப்பது நமது நாட்டிற்கு இன்னும் கெடுதியை உண்டாக்கும் விஷயமேயாகும்.

இன்னும பல இடங்களில், சட்ட மறுப்புக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்யச் சொல்லும் போது, வேலை நிறுத்வம் செய்யாதவர்களையும், கடைகளைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கின்றவர்களையும் பலாத்காரத்தினல் துன்புறுத்துகிருர்கள் என்ற செய்திகளும் கிடைக்கின்றன. இவைகளையெல்லாம் பார்க்கும் போது தற்போது அஹிம்சையின் பேரால் சட்ட மறுப்புச் செய்து வரும் "புத்திசாலிகள்" காலித்தனத்திலும், பலாத்காரச் செயல்களிலும் இறங்கிப் பொது ஜனங்களுக்குத் துன்பத்தை உண்டாக்கத் தொடங்கி விட்டார்கள் என்று சொல்லுவதில் என்ன குற்ற மிருக்கின்றது?

இவ்வாறு தொண்டர்கள் என்பவர்கள் செய்வதற்குக் காரணம் காங்கிரசல்ல வென்றும், பொறுப்பற்ற சிலருடைய தூண்டுதலே யென்றும் சிலதேசீயப்பத்திரிகைகள் என்பன குறிப்பிட்டிருந்தன. ஆனல்காங்கிரஸ்கமிட்டியில்தபால் தந்தி, ரயில்வே முதலியவைகளையும் பகிஷ்கரிக்க வேண்டு மென்று தீர்மானம் பண்ணியிருக்கும் போது இவைகளுக் கெல்லாமெப்படி காங்கிரஸ் காரணம் அல்லவென்றுகூற முடியுமென்று கேட்கின்ருேம்.

ஆகையால் இவ்வாறு பொறுப்பற்ற தன்மையிலும், காலித்தன்மையிலும், பொது ஜன நன்மைக்கு விரோதமாக நடந்து கொள்ளுவதோ—நடந்து கொள்ளுபவரோ—யாராயிருந்தாலும் எவராயிருந்தாலும், அவர்களை அடக்க வேண்டியதே பொதுஜனங்களின் கடமை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிருேம்.

---

டிப்பாகத் தீண்டாதவர்களுக்குக் கேடு சூழும் முயற்சியே' என்று தான் கூறுவோம்.

இப்பொழுது நமது நாட்டில் இருந்துவரும் எண்ணற்ற கோயில்கள் காரணமாகவும் அவைகளின் சார்பாக நடைபெற்று வரும் 'திருவிழா'க்களின் காரணமாகவும் இவைகளின்மேல் பாமர மக்களுக்குள்ள நம்பிக்கை 'பக்தி' முதலியவைகளின் காரணமாகவுமே பொது ஜனங்களின் செல்வம் பாழாகின்றதென்பதை யாரும் மறுக்கமுடியாது. இதோடு மட்டுமல்லாமல் பொது ஜனங்கள் அறியாமை நிறைந்தவர்களாகவும் மூடநம்பிக்கை மிகுந்தவர்களாகவும் இருந்து வருகின்றதற்கும் கோயில்களே காரணமாகும். இந்த நிலையைக்கருதும்போது தீண்டப்படாத சகோதரர்களும் மூடநம்பிக்கை காரணமாகக்கோயில் நுழைவு உரிமைபெறுவார்களாயின் அவர்களும் தங்கள் பொருளைச்சிறிதும் பயனில்லா மற்பாழாக்கி என்றுமுள்ள வறுமைநிலையில் இருந்துவர வேண்டியதைத்தவிர வேறுவழியில்லை என்றே கூறுகின்ருேம்.

ஆகையால் தீண்டப்படாத சகோதரர்களும் அவர்கள் சமூக சமத்துவத்தில் ஆவலுடையமற்றவர்களும் 'பக்தி' என்ற மூடநம்பிக்கையைக்கொண்டு கோயில் நுழைவுக்குப்பாடுபடாமல் 'பொதுஇடத்தில் எல்லா மக்களுக்கும் உரிமை வேண்டும்' என்ற உறுதியுடன் கோயில் நுழைவுக்கு முயற்சிசெய்யவேண்டுகின்ருேம். இவ்வகையில் தீண்டப்படாத சகோதரர்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுகிருேம். உண்மையில் தீண்டாமைக்கொடுமையொழிந்து மற்ற மக்களுடன் சமத்துவமாக வாழ்வதற்கு அடிப்படையான காரணங்களாக இருக்கும் செல்வம், கல்வி, திறமை, செல்வாக்கு, ஒற்றுமை முதலியவைகளைப்பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டுகிருேம்.

---

## வருந்துகிருேம்.

நமது இயக்கத் தோழர் மாயவரம், சி. நடராஜன் அவர்களின் தந்தையார், திரு. சிதம்பரநாத முதலியார் அவர்கள் சென்ற 1—5—32ல் திடீரென மாணமடைந்த செய்தி கேட்டு ஆற்ருெணுத்துயர மடைகின்ருேம். காலஞ் சென்ற திரு. முதலியார் அவர்கள், நமது இயக்கத்தின் பால் கொண்டிருந்த பற்றுக்கு எல்லைகூற எவராலும் இயலாது. நமது இயக்கத் தோழர்கள் எவர் சென்ருலும் அவர்களை உபசரித்து, ஓயாமல் இயக்கக் கொள்கைகளைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்து, மேலும் இயக்கத்திற்கு உழைக்கும் வகையில் ஊக்கப்படுத்தும் ஒரு பேரறிஞராய்த் திகழ்ந்து வந்தார். இத்தகைய பெரியார் தமது, இரு குமாரர்களான தோழர், நடராஜன், சுப்பையா, பெண்மக்கள், மனைவியார் மற்றும் நெருங்கிய உறவினர்கள், சுயமரியாதைத் தோழர்கள் ஆகியவர்களை வருந்தும்படி விட்டு விட்டு திடீரென

இறந்தமைக்காக வருந்துவோர் "இறப்பது இயல்பு" என்பதை அறிந்து தேறி அவருடைய உயர்ந்த செயல்களைப் பின் பற்றி நடப்பதன் மூலம் ஆறுதலடைய வேண்டுகிறோம்.

---

## திருத்தம்.

சென்ற வாரம் (1-5-32உ) வெளியான "குடி அரசு" பத்திரிகையில் விளம்பரம், 18-வது பக்கம் முதல் பாரா முதல் வரியில் ரூ. 00 என்றிருப்பதை ரூ. 100 டிபாசிட் என்றும், 6-வது பாரா முதல் வரியிலுள்ள "அநுபோகாத்தியதை" என்பதை "அநுபோக பாத்தியதை" என்றும் திருத்திவாசிக்க வேண்டுகிறோம்.

---

## அயர்லாந்திலும் "சுயமரியாதை"

ராஜவிசுவாச பிரமாணத்தை ரத்து செய்ய வேண்டுமென அயர்லாந்து தலைவர் டீவாலரா கொண்டுவந்துள்ள மசோதா விற்குச்சாதகமாக 77 ஓட்டுகளும், பாதகமாக 67 ஓட்டுகளும் கிடைத்ததின் மீது அது அயர்லாந்து பார்லிமெண்டு கமிட்டியில் நிறைவேறிறது.

### திருத்தம் தோல்வி.

அயர்லாந்து பார்லிமெண்டு அங்கத்தினர்களில் இஷ்டமுள்ளவர்கள் ராஜவிசுவாச பிரமாணம் செய்து கொள்ளலாமென, டீவாலரா ராஜவிசுவாசபிரமாண ரத்து மசோதாவையொட்டி எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த திருத்தத்தை இன்று அயர்லாந்து பார்லிமெண்டு கமிட்டியில் ஓட்டுக்கு விட்டதில், அதற்கு சாதகமாக 53 ஓட்டுகளும் பாதகமாக 76 ஓட்டுகளும் கிடைத்ததின் மீது அது தோல்வியடைந்தது.

—ராய்ட்டர்

---

## நீலாவதி இராமசுப்பிரமணியம் சுற்றுப்பிரயாணம்

கோட்டாறில் 13-5-32ந்தேதியில் நடைபெறும் கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலையின் ஆண்டுவிழாவிற்கு திருச்சியிலிருந்து தோழர்களான நீலாவதி அம்மையார், ராமசுப்பிரமணியம், விஸ்வநாதம் ஆகியவர்கள் 11-5-32-ந்தேதி இரவு புறப்படுகிறார்கள். நாகர்கோவிலிலும், திருநெல்வேலியிலும் 12-5-32-ந் தேதி தங்குவார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## "குடியரசு" வாழ்க!

(தமிழ் மகன்.)

சென்ற வாரத்தோடு ஏழாவ தாண்டைப் பூர்த்தி செய்து 1-5-32ந் தேதியிலிருந்து எட்டாவ தாண்டை எட்டியிருக்கும் எனதருமைக் "குடியரசு" பல்லூழி காலம் வாழ்க!! வென வாழ்த்துகிறேன்.

கடந்த ஏழாண்டு காலமாக நமது 'குடியரசு' ஆற்றியிருக்கும் அரும் பணிகள் அனந்தம் என்பதை எதிரிகளும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். சொல்கிறபடி நடத்திக் காட்டு வதில் 'குடியரசுக்கு' இணையான மேலான பத்திரிகைகள் நாமறிந்த வரையில் எதுவுமில்லை. சுயமரியாதைக்கும், உண்மையான உலக விடுதலைக்கும், பெண்கள் நலத்திற்கும், இளைஞர் களுக்கும் நமது 'குடியரசு' ஆற்றி வந்திருப்பது போன்று வேறெந்தப் பத்திரிகையும் நடந்து கொள்ளவில்லை. தனக்கு உண்மை எனத்தோன்றியதை எவர் தயவுக்கும்—தாட்சண்ணியத்திற்கும் பயப்படாமல் வீரமாகக் கூறி வந்திருப்பதில் 'குடியரசே' முதன்மை ஸ்தாபனம் வகிக்கிறது. மதம், மூடப்பழக்க வழக்கங்கள் தீண்டாமை, சாதி, தேர் திருவிழா முதலிய வற்றை ஒழிக்கவும் 'குடி அரசு' செய்திருக்கும் தொண்டு அளப்பரியன வாகும்.

எவ்வளவோ பெருப்பணிகளாற்றி வந்திருக்கும் நமது 'குடியரசு' தற்போது சுமார் ஏழாயிரம் பத்திரிகைளே வெளியிடப்படுவதாக அறிய நான் உண்மையில் அதிசயத்தையும் வருத்தத்தையுமே அடைகிறேன். குறைந்த அளவு பதினையிரம் பிரதிகளாவது வெளிவரும்படி நமது இயக்கநண்பர்கள் முனைதல் வேண்டும். 'குடி-அரசு' தந்தை ஈ. வெ. ரா. அவர்கள் ஐரோப்பாவை விட்டு இங்கு வருவதற்குள் 'குடி அரசு'க்கு பதினையிரம் சந்தாதார்களாவது இருக்கும்படி செய்து வைக்க வேண்டும். சங்கங்கள், வாசகசாலைகள், புத்தகசாலைகள் முதலியவற்றில் குடியரசைப்படித்து விட்டு நின்று விடுகிறார்கள். பொருளுள்ள தோழர்கள் இவ்வாறு நடந்துகொள்வது சரியன்று என்றே நான் கூறுவேன். சந்தா செலுத்திப்படிக்கச்சக்தியற்ற ஏழைச் சகோதரர்களுக்கே பெரிதும் வாசகசாலைகள் நிறுவப்படுகின்றன. எனவேஇதைக்கவனியாமல் சக்தியுள்ள அன்பர்களும் சந்தாதாராகாமல் வாசகசாலைகளில் படிப்பது நலமல்ல. இவ்வாறு செய்தால் பத்திரிகை அபிவிருத்தி அடைவது தடைபடும். இதை நமது தோழர்கள் முக்கியமாக கவனித்து நடந்து கொள்ளவேண்டும். வாசகசாலை நிறுவாகிகளும் இதைக்கவனித்து பொருளுள்ள நண்பர்களைவாசகசாலையில் படிக்க விடாமல் தடுத்துச்சந்தாதாராகும்படி செய்ய வேண்டும். நமது இயக்கப்பத்திரிகைகளின் நிலை எவ்வளவு தூரத்திற்கு முன்னேற்றமடைகின்றனவோ அவ்வளவுக்கு நாமும் நலம் பெறலாம். ஆகவே சக்தியுள்ள சகோதரர்கள் இன்று முதல் சந்தாதாராகுமாறு வணக்கமாகக்கேட்டுக்கொள்கிறேன்.

நிற்க.

இரண்டொரு ஆண்டுகாலமாக நான் "குடியரசு"வில் கட்டுரைகள் எழுத இயலாமல் போனதற்கு வருந்துகிறேன். நமது அன்பர்களும் அடிக்கடி கேட்டுவந்திருக்கின்றனர். இதுகாறும், தமிழன் முதலிய இதர பத்திரிகைகளிலேயே நாம் விஷயதானம் செய்து கொண்டிருந்தமையால் குடியரசுக்கும் விஷயதானம் செய்யக்கூடாமலிருந்தது. இனி அடிக்கடி "குடி அரசு" விலும் என்னால் இயன்றவரை விஷயதானம் செய்யத்தவறேன் என்பதை வாசகருக்கு அறிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அன்பர்கள்குடி அரசுக்கு ஏராளமாகச்சந்தாதாராகி ஆதரிப்பார்களாக. குடியரசு வாழ்க!

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தீண்டக்கூடாதவர்கள் பிரவேசிக்கக் கூடாதென்று இப்போது ஓர் அனியாயம் இருந்து வருகிறதே இந்த அனியாயம்இராது. வேதங்கள் சாஸ்திரங்கள் இவற்றின் அதிகாரம் மறுக்கப்பட மாட்டாது. என்று எழுதியிருக்கிறார். இந்தக் கருத்தை அதாவது இதிலுள்ள முறண்பாடுகளை ஊன்றிக் கவனிக்க வேண்டுகிறோம்.

மேலும் திரு. காந்தி அவர்கள் பொதுக் கோவில்களை சுயராஜிய அரசாங்கத்தில் எல்லோருக்கும் பொதுவாகத் திறந்துவிடப்போவதாகச்சொல்லி விட்டார். எல்லோருக்கும் கராச்சிகாங்கிரசின் மதநடுநிலைமைத்திட்டம் தெரிந்த விஷயம் இதன்படி ஒவ்வொருவருடைய மதங்களும், பழக்கங்களும் பாதுகாப்பதாகவும் ஆதற்கு உத்திரவாதம் கூட கொடுப்பதாக திரு, காந்தி. அவர்கள் வியாக்கியானம் செய்திருக்கிறாரே அப்படியானல் மேற்சொல்லிய ஆலயப் பிரவேச விஷயம் சாத்தியமாகுமா? இது முன்னுக்குப் பின் முரணல்லா?

உயர் திரு. காந்தி அவர்கள் இந்தியாவின் லட்சியத்தைப் பற்றி கிங்ஸ்லி ஹாலிலிருந்து அமெரிக்காவுக்கு பிராட் கேஸ்டிங் (Broadcast) மூலம் பேசியதில் குறிப்பிட்டதாவது "இதுவரை தேசங்கள் மிருகங்களைப் போல சண்டையிட்டு வந்தன, மிருகங்களைக்கட்டுப் படுத்தும் சட்டம் மனித வர்க்கத்திற்குவழி காட்டியாக இருக்கக் கூடாது என்பதே யாகும். இதிலிருந்து மனித வர்க்கத்தை மிருகங்களைக் கட்டுப்படுத்தும் படியான சட்டமின்றி யாவரும் சுதந்திரமாக வாழவேண்டுமென்பது அவர் பேச்சின் கருத்து, ஆனல் அவர் இந்தியாவில் இருக்கும்போதோ வர்ணாஸ்ரம தர்மத்தைப் பற்றி மிகவும் வற்புறுத்துகிறார். (இதை விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானல் 5-9-31 சுதந்திர சங்கைப்பார்த்துத்தெரிந்துகொள்ளலாம்.) இதில்உயர்வுதாழ்வு,முதலிய கொடுமைகள் உள்ளனவே. அங்கு மாறுகப் பேசுவது எக்காரணமோ?

மேலும் அதிலேயே இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதும், இந்துக்கள் கோடிக்கணக்கான தங்களுடைய சகோதரர்களைத் தீண்டாதார் என்றுஒதுக்கி வைப்பதும் அவமானம் என்று சொல்லுகிறார். ஏன்? கராச்சி மதநடுநிலைமைத் திட்டத்தைப்போன்று இன்னும் நான்கு திட்டம் போட வேண்டும். பளா! பளா!! தீண்டாதாராக ஒதுக்கிவைப்பது அவமானமாகும். என்கிறார். மிகவும் வாஸ்தவம் பின் ஏன் தனக்கு வருணாஸ்ரம தர்மத்தில் மிகவும் நம்பிக்கையுண்டு என்று சொல்லுகிறார். ஏன்! இன்னும் சொல்லிக்கொண்டு மிருக்கிறார். இது முன்னுக்குப் பின் முரண்தானே.

(தொடரும்)

---

## மரணம்.

ஜஸ்டிஸ் கட்சியின் முக்கியஸ்தர்களுள் ஒருவரான திவான் பகதூர் டி. வரதராஜுலு நாயடு அவர்கள் சென்னையில் ஹாரிஸ் ரோட்டிலுள்ள தமது பங்களாவில் 5—5—32ந்தேதி இரவு 9-மணிக்கு காலஞ்சென்றாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## இருகூர் திராவிட முன்னேற்றசங்கம்.

கோவைக்கடுத்த இருகூர் திராவிட முன்னேற்ற சங்க இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா, தோழர் எஸ். முருகப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கோவை, குனியமுத்தூர் குரிச்சி, சூலூர், பள்ளபாளையம், சிங்காநெல்லூர், ஒண்டிப்புதூர் போன்ற பலவிடங்களிலிருந்தும் ஆண்களும் பெண்களுமாக சுமார் 1000 பேர்களுக்குமேல் வந்திருந்தார்கள். எம். கே. கஸ்தூரியவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் மிக இனிமையாகப்பாடினார். சங்கக்காரியதரிசி தோழர். சி நாராயணசாமி அவர்கள் சங்கமென்ற ஆண்டு அறிக்கைப்பத்திரத்தை வாசித்த பின்னர் தலைவருக்கு வரவேற்புப்பத்திரம் ஒன்று வாசித்துக்கொடுத்து மாலையிட்டார். திராவிட சமூகப்பெண் ஒருவரால் திருமதி. மு. மரகதவல்லி அம்மையாருக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டு மாலையிட்டபின் ஷண்முகம் வாசகசாலைத் திறப்புவிழா வாற்றிய தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கட்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்து மாலையிட்டு வாசகசாலையைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் வரவேற்புப்பத்திரத்துக்குப் பதிலளித்துவிட்டு வாசகசாலையின் அவசியத்தையும், அதையும் திரு. ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ. அவர்கள் பெயரால் நிறுவுவது மிகப் பொருத்தமானதென்றும் கூறி வாசகசாலையைத்திறந்துவைத்தார்

பின்னர் தலைவர் அவர்கள் முன்னுரையாக வரவேற்புக்குப் பதிலளித்து சிறிது பேசியபின் தோழர் கே. பிரம்மாச்சாரி அவர்கள் 'நாஸ்திகமும் மனித வாழ்க்கையும்' என்ற பொருள்பற்றி மிக அழகியதோர் சொற்பொழிவாற்றினார். பின்னர் திருமதி மரகதவல்லியார் அவர்கள் 'சுயமரியாதை இயக்கமும் பெண்மக்கள் கடமையும்' என்னும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார் சொற்பொழிவில் பெண்மக்கள் எத்துறையிலும் ஆண்களுக்கு தாழ்ந்தவரென்றும் ஆகவே அவர்களும் தங்கள் பிறப்புரிமைகளையுடைய தைரியமாய் முன் வந்து பணியாற்றவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டப்பின்னர் தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் 'பெரும்பிணி' என்னும் பொருள் பற்றி மிக அழகாகப் பாமரருக்கும் தெள்ளிதின் அறியும்படியான எளிய நடையில் உருக்கமானதோர் சொற்பொழிவாற்றியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

உங்கள்

**கண்ணையும்**

**காதையும்**

**கவனித்துக் கொள்ளுங்கள்**

**பூவிழல் !!**

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

**செவிடு !!**

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**"Sri" Works**

**Beadon St. Calcutta.**

### புதுவைக் கூட்டம்.

24-4-32-ல் புதுவை புரோக்ரேசீஸ்த் கட்டிடத்தில், கல்வே காலேஜ் மாணவர் சங்கத்தின் ஆதரவில். ஒரு பொதுக்கூட்டம் கூடப்பட்டது. ஏராளமான கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் கூடியிருந்தனர். பி. இந். அரசாங்க அமைச்சர் தோழர் ஆ. வே. முத்தையா அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். சென்னை தோழர், குருசாமி பி. ஏ. அவர்களும், ஷெயாரின் துணைவியார் எஸ். குஞ்சிதம் அம்மையார் பி. ஏ. அவர்களும்.

வாலிபர் இயக்கம் என்பது பற்றி முறையே ஒவ்வொரு மணி நேரம் இங்லீஷில் உபந்நியாசம் செய்து வாலிபர் இயக்கத்திற்குச் சுயமரியாதைக்கொள்கையே அடிப்படையானது என்ற உண்மையை தெள்ளிதில் விளக்கினார்கள். அக்கிராசனர் தமது முடிவுரையில், வாலிபர் கடன் என்னவென்பதை விளக்கிக் கூட்டத்தை இனிது முடித்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

### திருவாளர் ஜவால்கரின் மரணம்.

பூனா பிராமணரல்லாத தலைவரான திரு டி. எஸ். ஜவால்கர் நேற்றிரவு மார்படைப்பினால் இறந்துபோனார். இவர் பிராமணரல்லாதார் இயக்கத்திலும் நாசிக் ஆலயப்பிரவேச சத்தியாக்ரஹத்திலும் சென்ற வருஷம் பம்பாயில் நடந்த காங்கிரஸ் வேலைகளிலும் மும்முரமாகக் கலந்து கொண்டார். இவர் பம்பாய்மாகாண பிராமணரல்லாதார் கட்சிப் பொதுக்காரியதரிசியாக இருந்து வந்தார். இவரது தகனக்கிரியைக்கு ஏராளமாக ஜனங்கள் வந்திருந்தனர். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

### நோட்டீஸ்.

### திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1931 ஞு அசல் நெம்பர் 424,
1932 ஞு I. A. நெம்பர் 334.

பி. ச. அரு. அரு. பாங்கு சிவராமஞ்செட்டியார்—வாதி.

பல்லடம் தாலூக்கா பூமலூர் கஸ்பாவில் இருக்கும் தவசிவலையன் மகன் கருப்பவலையன் 1. ஷெ 1ம் பிரதிவாதியின் தம்பி இராமவலையன் 2. ஷெயூர் பழனி வலையன் மக்கள் தவசிவலையன் 3. நாச்சி வலையன் 4. மைனர் அரசன் 5. ஷெ மைனரின் கார்டியன் தமயன் 3-ம் பிரதிவாதி—1 to 5 பிரதிவாதிகள்.

ஷெ நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் ஷெ நெம்பரில் பெற்றிருக்கும் பிரிலிமினரிடிக்கிரியை Final டிக்ரிசெய்யவேணுமாய் வாதி மனுக்கொடுத்தது அது 12—5—32 வாய்தா. அன்று பிரதிவாதிகள் பகல் 11 மணிக்கு ஆஜராகவேண்டியது. அன்று ஆஜராகத்தவறினால் ஒரு கட்சியாக முடிவு செய்யப்படும்.

ஜி. ஆர். ஜேகதீசசாஸ்திரியார்,
1—5—32. வாதிவக்கீல்.

**அச்சாபீஸ்**

**மிஷின் விற்பனை.**

நமது ஆபீசுக்கு பெரிய மிஷின்கள் வரவழைத்து விட்டபடியால் தற்காலம் நல்ல கண்டிஷனில் மிக சுத்தமாக வேலை செய்து கொண்டிருக்கும் அடியில்கண்ட மிஷின்களை விற்று விடப்படும்.

டபுள் கிரவுன் சிலிண்டர் மிஷின் 1,
டிம்மி சிலிண்டர் மிஷின் 1.

உபயோகப் படுத்தப்பட்டு நல்ல நிலைமையிலுள்ள இங்கிலீஷ், தமிழ் போஸ்டர் டைப்கள்; பல ரகங்கள்.

நேரில் வந்து பார்த்து முடித்துக்கொள்ளலாம். மானேஜர்.

**குமரன் பிரஸ் காஞ்சீபுரம்.**

**தமிழ் நாட்டு பெற்றோர்களே !**

முந்துங்கள் ! முந்துங்கள் !!

**மெட்ரிக்குலேஷன்**

**அறிவை**

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடின தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம். இஷ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பாஸாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்கள் S. S. L. C. தவறியவர்களுக்கு அதிக பிரயோஜனமானது. நமது மாணவர்களின் வெற்றி, K, சீனிவாசகன் (ஹையர் கிரேட்) IV பாரம் படித்தவர்கடந்த கே.சீனியர்பாஸ்செய்து சக்கண்டரியாக மாற்றப் போகிறார். Dr. H. S. சுப்ரமணியம் 4 மாதங்களில் பாஸாகி கடைசி 2 வருஷ M. B. B. S. படிக்கப் போகின்றார். மற்ற விபரத்திற்கு உடன் எழுதவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.

## தமிழ்வருடப்பிறப்பின் விபரமும்

# மக்களின் அறியாமையும்

(காரைக்கால், தோழர். கோ. சௌரிராஜன்.)

பிரஜோற்பத்தி ஆண்டு சென்ற எப்ரல் மாதம் 12-ந் தேதியோடுமுடிவடைந்து 13-ந்தேதி புதனன்று ஆங்கிரஸவருடம் சித்திரைமாதம்முதற் தேதி ஆரம்பித்தது ஆரம்பித்தாலென்ன! நம்பாமரமக்கள் சும்மாயிருந்தார்களா? வைதீகக் கட்டுப்பெட்டிகள்சும்மாவிருந்தனவா? சதாபணம் பறிக்கும் நோக்கத்தோடு திரியும் பார்ப்பனக்குருக்கள் வாளா இருந்தனரா? வருடப்பிறப்பன்று ஏதோ புதியஉலகம் தோன்றிவிட்டதே போல்-காணாதநூதனத்தைக்கண்டுவிட்டாற்போன்று நம்மக்கள்செய்த ஆர்பாட்டங்களுக்கும் அர்த்தமற்ற செய்கைகளுக்கும், அனுவசியசெலவுகளுக்கும், அளவேயில்லை. அன்று கோவில்களில் பிராமணரல்லாதார் பணத்தைக்கொண்டு வீணே எரியும் ஜப்பான் சூடத்திற்கும், செலவாகும் பழம், பாக்கு, வெத்திலை, பொங்கல் முதலியவைகளுக்கும் எல்லையில்லை. அன்றியும், அன்று காவடிகள் தூக்கித் தெருத்தெருவாய்ச்சுற்றி அன்னக்காவடிகளாகவிரும்பினவர்கள் தொகை அனந்தம். அன்று வியாபாரிகளெல்லாம் புதுக்கணக்குப்போடவேண்டுமென்று பார்ப்பனக்குருக்களின் வருகையை எதிர்பார்த்திருந்து அன்னார் காலில் காசுவைத்து விழுந்து தன் மதிப்பிழந்து நிற்பது பெரிதும் பரிதாபகரமானது. என்பதைக்கூற வேண்டியதில்லை. இம்மாதிரி அர்த்தமற்ற அறிவிழந்தசெய்கைகளை அன்று நம்மக்கள் செய்வதற்குக்காரணம், ஆராய்ச்சியென்பது சிறிதும்இன்மையாலும், அடிமைப்புத்தியாலும், வருடம்பிறந்ததினத்திற்குஒருபுதிய தெய்வத்தன்மையைக்கற்பிப்பதுமேயாகும். இம்மாதிரி கொண்டாடுபவர்களை என் இன்று வீண் ஆடம்பரஞ்செய்கின்றீர்கள் எனவினவினுல் அவர்கட்கே சரியான பதில்தரமுடியாது. புதுவருடதினத்தன்று எவ்விததுற்கருமங்களையும்செய்தல்கூடாதுஎன மிகவும் ஜாக்கிறதையாகப்பழகும் நம்மக்கள் இம்மாதிரி பகுத்தறிவைப்பாழ்படுத்தி அடிமைப்புத்தியை வளர்க்க அடிகோலுவது பெரிதும் வருந்தத்தக்கதேயாகும். இவ்வாறு கொண்டாடப்படுவதற்கேதுவான தமிழ்வருடப்பிறப்பின் புராணசம்பந்தமானவரலாற்றை ஆராய்ந்தால் அதுமிகவும்வேடிக்கையாவும் வெறுக்கத்தக்கதாகவுமிருக்கின்றது. அக்கதையின் சுருக்கத்தைக்கீழேதருகிறோம்.

"கிருஷ்ண பகவான் துவாரகையில் அவதாரம் செய்திருந்தகாலையில்பதினாயிரம் கோபிகாஸ்திரீகளுக்கும்பதினாயிரம்வீடுகள்கட்டிக்கொடுத்து அவர்களோடுபலவிதமானலீலைகள் புரிந்துவந்தார். அதுகாலையொர்நாள், நாரதர் கிருஷ்ணனிடம்சென்று தாங்கள் இத்தனைஸ்திரீகளை வைத்துக்கொண்டிருக்கின்றீர்களே அடியேனுக்குஒரு ஸ்திரீகொடுக்கக்கூடாதா என்றுகேட்டார். உடனே பகவான் நான்இல்லாதிருக்கின்றவீட்டிலிருக்கும்ஸ்திரீயை நீர்எடுத்துக்கொள்ளும் என்றார். அவ்விதமே நாரதர் ஒவ்வொரு வீடாகச் சென்றுபார்க்க எங்கும் கிருஷ்ணன் இருப்பதைக்கண்டு, பகவான்இல்லாத வீடேயில்லை என்றுதெரிந்துவெட்கத்துடன் கண்ணனையடைந்து, அவையெல்லாம் எனக்குப்பிடித்த மில்லையாதலாலும், தங்களது அழகியவடிவினிடத்தில்எனக்கு அளவிலாவிருப்பமிருக்கின்றபடியாலும், நான் ஸ்திரீ ரூபங்கொண்டு உங்களுடனேயோகம் செய்யவேண்டும் என்று கூறினர். இதைக்கேட்டகிருஷ்ணபகவான் உடனேநாரதரையமுனாநதியில் ஸ்நானம் செய்யும்படி கட்டளையிட்டார். அவ்வாறுநாரதர் ஸ்நானம் செய்தவுடன் ஒருஅழகிய பெண்ணுருவத்தையடைந்தார். இப்பெண்ணுடனே பகவான் 60வருடகாலம் இல்வாழ்க்கைநடத்தவே அந்தஅறுபது வருடங்களில்அறுபது பிள்ளைகள்பிறந்தன. அப்பிள்ளைகளுக்கு பிரபவ, விபவஎனமுறையே பெயரிட்டார்கள். பின்னர்பெண்ணுருவாகிய நாரதர் தன்னால் பிள்ளைபெற சக்தியில்லைஎன்று பகவானிடம்கூற அவர் மறுபடியும் நாரதரையமுனாநதியில்ஸ்நானம்செய்யச்சொல்லிபழைய நாரதர்உருவடையச்செய்தார் பெண் நாரதருக்கும்-கிருஷ்ணருக்கும் பிறந்தகுழந்தைகள் தான்பிரபவவிலிருந்து அக்ஷயமுடிய சொல்லப்படுகிற பெயர்களையுடைய அறுபது பிள்ளைகளாகும். இப்பிள்ளைகளின் பெயரை அவர்கள் பிறந்தவருடமுழுதும் வழங்கிவந்தபடியினுலே, அவர்கள் பிறந்த அந்நாளே இப்பொழுது வருடப்பிறப்பென்று கொண்டாடப்படுவது" இது தான் வருடப்பிறப்பின் புராணக்கதைச்சுருக்கம்.

மேற்கண்ட பழம்புராணக் கதை எத்துணை அநாகரிகமாகவும், கேவலமாகவும், அர்த்தமற்றதாயும் இருக்கின்றதென்பதை வாசகர்களே யறிந்து கொள்வார்கள். இஃதை அப்படியே நம்பி நடக்கும் மக்களின் மதியீனத்தை எனென்றுரைப்பது! லோகநாயகனென்று சொல்லப்படும் கிருஷ்ணன் பலஸ்திரீகளை வைத்துக் கொண்டிருந்தான் என்பதே பெரிதும் பரிகசிக்கத்தக்கது. அதிலும் யாழ்வல்லுனர்--மிக்க சமர்த்தர் என போற்றப்படும் நாரதமுனி வைகுந்தநாதன் எனப்படும் கிருஷ்ணனிடம் போய் தனக்கொரு ஸ்திரீ கேட்டதும், பிறகு தானே பெண்ணுருக்கொண்டு அந்த கிருஷ்ணபகவானுடன் கூடி பிள்ளைப்பேறடைந்ததும், மிகவும் வெட்கப்படத் தக்க விஷயமாகும். பொதுவாக இதை ஆராய்ந்து பார்த்தால், இக்கதையே பெரும் அபாண்ட மூட்டை என்பது நன்கு விளங்குவதோடு, இதைக் கற்பிக்கும் புராணங்களை தீக்கிரையாக்குவதைத்தவிரவேறுஎவ்விதமுடிவிற்கும் வர வழியில்லை. மேலுமஇது அறிவிற்கும் மனதிற்கும் பொருத்தமுள்ளதாகவிருக்கின்றதா என்று பார்த்தால் அதுவும் இல்லையே. அல்லது இக்கதையின்படி ஒழுகுவதனுல் நமக்கோ அன்றி பிறர்க்கோ ஏதேனுவாவது நன்மை ஏற்படுகின்றதா? அன்றி அறிவுவளர்ச்சி, பொருள் விருத்தி முதலியவைகளுக்கு ஏதேனும் பயன்படத்தக்கதாகயிருக்கின்றதா? ஒருவித நன்மையும் கிடைக்கப்பெருமலிருக்க நம்மக்கள் வீணே வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு என்று சொல்லி, காசையும் அறிய நேரத்தையும் வீணாக்கிப்போதாக் குறைக்கு அறிவைப்பாழாக்கி, மூடக்கொள்கையை விருத்திசெய்து, அடிமைப்புத்தியை விலை கொடுத்து வாங்குவதென்றால் பெரிதும் வருந்தற்குரியதன்றோ!

ஆகவே இனியாவது நம்மக்கள் சிந்தனை செய்து வருடப்பிறப்பு முதலிய சாதாரண நாட்களிடமும் தெய்வத்தன்மயை புகுத்தி, அறிவைக் குறைக்காமல், மூட மதிபோக்கி நற்கருமங்களைச்செய்து நமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு வாழமுற்பட வேண்டுகிறோம்.

---

# சோதிடப்புரட்டு.

(மயிலை சீனி வேங்கடசாமி)

மைசூர் ராஜ்யத்தைஅரசாண்ட திப்புசுல்தானுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் 1799-ம் வருஷம் மே ௴ 4-த்தேதி சண்டை நடந்தது அந்தசசண்டையில், அன்று சாயங்காலம் திப்புசுல்தான் குண்டினுல் கொல்லப்பட்டு இறந்தார்.

அவர் சண்டைக்குப் புறப்படுமுன் அன்று காலையில் சோதிடர்களைவரவழைத்து சகுனம் கேட்டார். இந்தச்சோதிடர்கள் எல்லோரும் பார்ப்பனர்கள். அவர்கள், அன்றைய தினம் கெட்ட நாள் ஆகையால்திப்பு சண்டை செய்யக் கூடாது என்று சொன்னார்கள். ஆனல், தோஷநிவர்த்தி செய்தால் அந்தக்குற்றம் நீங்கிப்போய் விடும் என்றும் பிறகு சண்டை செய்யலாம் என்றும் சொன்னார்கள். திப்புசுல்தான் தோஷத்தை எப்படி நிவர்த்தி செய்வது என்றுகேட்டபோது சுயகாரியப்புலிகளாகிய அந்தப்பார்ப்பன ஜோசியக்கள் கறுப்பு நிறமுள்ள எருமை, கறுப்பு எருது, கறுப்புஆடு, கறுப்புத்துணி, கறுப்புதலைப்பாகை, 90 ரூபாய் (இது மாத்திரம் வெள்ளைநிறம்) எண்ணெய் நிறைந்த இரும்புக்குடம் இவைகளைத்தானம் செய்தால் அந்தகெட்ட நாள் நல்ல நாளாய் மாறிவிடும் என்று சொன்னார்கள். திப்புசுல்தான் அவர்கள் சொல்லியபடியே மாடு, எருமை, துணி, ரூபாய், முதலியவைகளைத் அந்தப்பார்ப்பனருக்குத் தானம்செய்தார். எண்ணெய்க்குடத்தை தானம் செய்வதற்கு முன், எண்ணெயக் குடத்தில் திப்பு தன் முகச்சாயலைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அவரும் எண்ணெய்க்குடத்தில் தன் முகச்சாயலைப் பார்த்து தோஷத்தை நீக்கிக் கொண்டதாக நினைத்துக்கொண்டார். பிறகு, பார்ப்பனர்கள் தங்கள் புரட்டு வார்த்தையினுல் கிடைத்த வெகுமதிகளை வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

இவ்வளவு ஜோசியம் பார்த்தும் தோஷத்தை நீக்கியும் பார்ப்பனருக்கு தானம் செய்தும் அந்தகெட்ட நாள் நல்ல நாளாக மாறவே இல்லை. கெட்ட நாள் கெட்ட நாளாகவே இருந்து விட்டது. எப்படி என்றால் ஜோசியம் பார்த்து தோஷத்தை நீக்கிக்கொண்ட அன்றைய தினம் சாயங்காலமே திப்பு குண்டுபட்டு இறந்து போனார். இங்கிலீஷ்காரர்கள் அன்றைய தினமே திப்பு ராஜ்யத்தையும் சொத்துக்களையும் கைப்பற்றிக்கொண்டார்கள். ஜோதிடப்புரட்டர்களின் வார்த்தை பொய்யாய்விட்டது. ஜோதிடப்புரட்டர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக கெட்ட நாள், நல்லநாள், தோஷம், பரிகாரம் என்று ஜனங்களை மயக்கி தங்களுக்குபெரும்பழியைத்தேடிக் கொள்ளுகிறார்கள். இவைகளை எல்லாம் பாமரஜனங்கள் நம்பிகைப்பொருளை இழந்து நஷ்டமடைகிறார்கள். திப்புசல்தான் மகமதியராய் இருந்தும் இந்தச் சோதிடப்புரட்டார் வார்த்தைக்கு ஏமாந்தார் என்றால், மூட நம்பிக்கை நிறைந்த இந்துக்களைப் பற்றிச்சொல்ல வேண்டுமோ? இந்த ஜோதிட நம்பிக்கை ஜனங்களிடமிருந்து என்று தான் ஒழியுமோ? ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள காங்கிரஸ்காரர், நன்றாய் ஜோசியம் பார்த்துநல்ல நாளைக்கண்டு பிடித்து காரியம் செய்தால் இத்தனைதடி அடியும் சிறைவாசமும் அடைய மாட்டார்களே!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லச்செல்ல ஒருவனுக்கு வயது முதிருமே யொழிய குறையாது? ஓர் நிலையும் நில்லாது அங்ஙனமிருக்க எவ்வண்ணம் என்றும் பதினறுயிருக்க முடியும்? என்னே சிவனது மூடத்தனம்? ஒருவேளை தற்காலத் துக்குரங்கினிடமிருந்து தயாரித்த மருந்தை உட்கொள்ளச்சொல்லியிருக்கலாம். அவ்விதமிருப்பினும் மூப்பைத்தவிர்க்க முடியுமே ஒழிய வயதைக்குறைக்க முடியாது.

இவ்வாறு உலகானுபவங்களுக்கும் இயற்கைக்கும் விரோதமான பொய்க்கதைகளே அதிகரித்து உள்ளநமது பாடபுத்தகங்களில் முதல் வகுப்பு முதற்கொண்டு எம். ஏ. முடிய இது போன்ற கதைகள்உண்டு, இத்தகைய பாடபுத்தகங்கள் மேல் வகுப்புகளில் அதிகத்தீங்கு செய்ய இடமில்லை. ஏனெனில் ஆங்குள்ள மாணவர்களுக்கு ஆராய்ந்தறியும்வல்லமை உண்டு, ஆயினும் மேல் வகுப்பு மாணவர்களுக்கும் கடவுளைப்பற்றிய ஓர் பயமும் சந்தேகமும் இல்லாமலில்லை. ஆயினும் ஆரம்பக்கல்வி பயிலும் நம் சிறுர்கள் மனதின் கண் ஓர்வித ஐயத்தையும், பயத்தையும் இக்கதைகள் விளைவித்து விடுகின்றன. அந்தோ 'சூரியனைப்பாம்பு பிடிக்கிறதென்று அம்மா சொல்ராளே! வாத்தியார் அல்லவென்று அடிக்கிறாரே! சூரியனைப்பூமி சுற்றுகிறதென்று வாத்தியார் சொல்ராறே! அம்மா சூரியன் குதிரைகள் பூட்டிய இரதமீமேறிக் கொண்டு மிகவேகமாக அந்தரவீதியில் போகிறானென்று கூறுகிறாளே! படத்திலும் போட்டிருக்கிறதே' இத்தகைய முரண்பாடுடைய புத்தகங்களைப்படிப்பதால் நமது குழவிகளின் புத்தி விசாலப்படுவது யாங்ஙனம்?

பாடபுத்தகங்களின் ஓர் முக்கிய அம்சம் என்னவெனில் அவை உலகானுபவத்திற்கும் இயற்கைக்கும் ஒட்டியவையாய் இருத்தல்வேண்டும் இத்தகைய புத்தகங்களைப் படிப்பதாலேயே உலகப்போக்குஉள்ளது உள்ளவாறு தெரியும். ஆயினும் இராமாயணக்கதைகளையும் பாரதக்கதைகளையும்போன்ற கதைகளைப்படிப்பதால் தீமையேயன்றி நன்மையாதுமில்லை. இவைகளைப்படிப்பதால் சகோதர வாஞ்சை தந்தை தாய் சொற்றவறுமை சத்தியம் முதலிய நல்லொழுக்கம் படியுமென்று சிலர் கூறலாம். ஆயினும் உலகானுபவத்திற்கு ஒட்டிய உண்மைக்கதைகளை ஏன்படித்தல் கூடாது? [Fairy Tales) என்ற கதைகளைப் படிப்பதால் (Imagination] என்னும் சக்தி உண்டாகுமென்று கூறு தப்பான உண்மையில்லாத ஓர் துறையில் தமது அறிவைச் செலுத்துவதாகுமேயொழிய சரியான துறையில் தமது அறிவைச்செலுத்துவதாகாது.

நமது மாணவர்கள் மேனாட்டு மாணவர்களை விட புத்தி கூர்மை, ஓர் பொருளை உண்டாக்கும் வல்லமை (Inventing power) முதலியவற்றில் குறைந்திருப்பதற்குக் காரணம் நமது பாட புத்தகங்களும் ஒன்று என்று தைரியமாகக் கூறலாம். நாம் அவர்களை விட புத்தி தீட்சண்ய முடையவர்களென்று கூறுவது முடியாது.

இரயில் வண்டியை உண்டாக்கியது யார்? மோட்டார்களை உண்டாக்கியது யார்? இந்தியா முன்னேற்ற முற்றது மேனாட்டார் வந்த பிறகன்றோ? தேசாபிமானம் முதலியவை நம் மக்கள் மனதில் ஏற்பட்டது அவர்களாலன்றோ? ஆதலின் நமது மாணவர்களின் புத்தி விசாலப் பட வேண்டுமாகில் புராணக் கதைகளைத் தவிர்த்தல் வேண்டும். இராமாயணம், பாரதம், சூரிய சந்திர கிரகணக் கதைகள் முதலிய வற்றை விலக்கல் வேண்டும். திருப்பாற்கடல் முதலிய வற்றை ஒழிக்க வேண்டும்.

ஆயினும் இராமாயணம் பாரதம் முதலிய காவியங்களில் நயம் பல வுண்டு. ஆதலின் அவைகளில் உள்ள பொய்ம்மைகளை விலக்கி மெய்ம்மையைப் புகுத்தி உலகானுபவத்திற்கு ஒட்டி எழுதல் வேண்டும்.

பல்லாயிரக்கணக்காக நாம் போற்றி வந்த இராமனையும் இலக்ஷ்மணனையும் விலக்குவதென்றால் வருத்தமாகத்தானிருக்கும். ஆயினும் கவிகளும் ஆசிரியர்களும் தமது வாழ்நாள் நடப்பதற்கு உண்டாக்கிய பொய்ம்மையை விலக்குதல் இன்றியமையாத ஓர் முக்கிய வேலை.

நமது மக்களிடத்து "சுயமரியாதை" புக வேண்டுமானால், இந்தியர்களாகிய நாம் மேன்மையடைய விரும்பினால், நமது பள்ளிச் சிறார்களையே முன்னேற்றுதல் வேண்டும் ஆதலின் அதற்கேற்றவாறு நமது பாடங்களையும், புத்தகங்களையும் அமைத்தல் வேண்டும். பள்ளிக் கூட ஆசிரியரும் அதிகாரிகளும் "சுயமரியாதை"க் கொத்த இயற்கைக் கொத்த புத்தகங்களையே வைக்க விரும்புகிறேன்.

———

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று எண்ணும் உணர்வு எப்படி ஏற்படும். தற்பெருமையும், சுயநலமும் விடுத்து பகுத்தறிவும் சுயமரியாதை நோக்கும் கொண்டு பார்க்கும் வீரர்கள் தான் உங்கள் முன்னேற்றத்திலும் அறிவு விருத்தியிலும் அனுதாபம் காட்டுகிறார்கள். சுயமரியாதைக் காரர்க எல்லாத மற்றவர்களும் உங்களிடம் அனுதாபம் காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பது காளை மாட்டின் பால் பெற விரும்புவதையே ஒக்கும். ஆகவே உங்களுடைய குற்றத்தினாலேயும் ஆண்களுடைய சுயநலப் போக்கினாலேயும்நீங்கள் மீளாத அடிமையானீர்கள்.

எனவே இதினின்று விடுதலை அடைவதற்கு வழியானது உங்கள் வசமே இருக்கிறது. தற்கால மக்களுடைய வாழ்க்கையின் லட்சியங்களோ வெகுவாக மாறி விட்டது. ஆடவர்கள் பெண்களை தங்களுக்கு சமத்துவமாக மதித்து ஒற்றுமையோடு வாழ்ந்து அதிவானந்தம் பெற்று சுதந்திரமாகவும் சுகமாகவும் இருக்க எண்ணங் கொள்கின்றனர் காலப்போக்கிற்கு ஒத்த விதத்தில் இப்புதிய வாழ்க்கைக்கு நீங்களும் உங்களை யோக்கிதை உள்ளவர்களாக செய்து கொள்ளவேண்டும். உங்கள் விடுதலைக்கு அவசியமாய் நிற்பது நகை பணியாதிகளல்ல. அவைகளால் நீங்கள் இதுகாறும் அடிமைப் பட்டு கிடந்த போதும். இனி கல்வியழகே அழகு என்பதை கருத்தில் பதித்து அதனை அடைவதற்கு உங்கள் முழுமுயற்சியையும் பிரயோகிக்கவேண்டும். அல்லாதவரையில் உங்கள் வாழ்க்கையானது முற்றுப்பெறாது என்பதை உணருங்கள். அறிவிற்சிறந்தவர்கள் தங்களுக்குரிய உரிமைகளை வெகுவில் பெறுவதற்கு ஆற்றல் உடையவர்களாய் இருக்கின்றனர். அறிவைப்பெறுவதற்கு கல்வியைத்தவிர்த்து வேறு சுலபமான மார்க்கம் இருப்பதாகத் தோன்றவில்லை. உங்கள் அறிவு வளர்ச்சியினால் உங்களுக்கு சொத்துரிமைமாத்திரமல்ல மற்றெல்லாச் சுதந்திரங்களும் கிடைப்பதில் தடையில்லை. ஆகவே சகோதரிக ளே நாம் இறுதியாகக்கூறு வதாவது நீங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டுமானாலும் ஆடவருக்குச்சமமான ஒரு நிலையை அடைய வேண்டுமானாலும் மதிப்பும், மரியாதையும் பெற வேண்டுமானாலும் அதற்கு முதற்படியாக இந்த நகையணியும்அநாகரீக பழக்கத்தை அடியோடு ஒழிக்கப் புறப்படுங்கள். அதோடு நில்லாது உங்களது பெற்றோர்களும் மற்றோர்களும் உங்கள் நகைகளுக்காகச்செலவழித்த பொருள்களை உங்கள் அபிவிர்த்திக்கவசியமான கல்விக்காக செலவிடுங்கள். உங்கள் இயற்கை அழகிற்கு இணையானது எந்த அழகையும் ஒப்பிட முடியாது. அதை பலமடங்கு சோபிக்கச் செய்வது நகையல்ல, பணியல்ல, ஆனால்கல்வி! கல்வி!! கல்வியாகும்!!! கல்வி என்னும் அருங்கலத்தைப்பேணிஅணியப் புறப்படுங்கள். அதுவே உங்கள் அறிவை வளர்க்கக்கூடியது. உங்களுக்கு சுயமரியாதையையும்சுதந்திரத்தையும் அளிக்க வல்லது. கல்வியழகுடைய பெண்களை எவனும் அலட்சியம் செய்யவும் அடிமையாக நடத்தவும் முடியாது. சுதந்திரம் சமத்துவம் உள்ள வாழ்க்கைத் துணைவிகளாகவும், தாய்மார்களாகவும், சகோதரிகளாகவும் கௌரவத்தோடு வாழ்வீர்கள். கல்வி ஆபரணத்தை கவருவதற்கு எந்தக் கள்ளனும் உங்கள் கழுத்தை வெடுக்கென்று அறுக்கமாட்டான்.; நீங்களும் மூலையில் பதுங்கி கிடக்கவும் வேண்டியதில்லை. நகைகளை ஒழித்தால் உங்கள் அடிமைத்தளையும் ஒழிந்துவிடு மென்பது திண்ணம்.

———

## சுயமரியாதைத்திருமணம்.

(2) கோலார் தங்கவயல் உரிகம் பி. பிளாக் 98 வது கிரகத்தில் 21—1—32 ஞாயிறு காலை 9மணிக்கு திரு. பி. பொன்னுசாமிக்கும் திருமதி. பாப்பம்மாளுக்கும் சீர்திருத்தக்காரர் முன்னிலையில் சுயமரியாதை முறைப்படி திரு. பி. என். வீராசாமியவர்களால் நடத்தப்பட்டு ஆர். சுப்பிரமணியம் அவர்களை சுயமரியாதைத் திருமணத்தை விளக்குமாறு கேட்டுக்கொண்டதினால் ஷை ஆர். எஸ். அவர்கள் விரிவுரையாக யாவர் மனதிலும் பதியும்வண்ணம் புரோகிதத்தையும் மூடச்சடங்குகளையும் கண்டித்துச் சுயமரியாதைச் சிக்கனங்களைக் கையாளும்படி கூறியமர்ந்தார். பின் சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டு மீண்டு மாலை சன்மானங்கள் வழங்கப்பட்டுத் திருமணம் முடிவு பெற்றதென ஒருநிருபர் எழுதுகிறார்.

———

## நோட்டீஸ்.

## திருப்பூர்

## டி. மு. கோர்ட்டு.

1931 ஞு O. S. No. 455

1932. ஞு I. A. No: 335.

பி. ச. அரு. அரு. பாங்கு சிவராமஞ் செட்டியார்—வாதி

பல்லடம் தாலூகா பூமலூர் கிராமம் கஸ்பாவில் இருக்கும் அரசவலயன் மக்கள் அய்யகுட்டி வலயன் 1. மாரிமுத்தவலயன் 2. ஷை தாலூகா சாமளாபுரத்தில் இருக்கும் கருப்ப வலையன் மகன் பழனி வலையன் 3. ஷை பூமலூர் மஜரா வலைய பாளையத்திலிருக்கும் கருப்பவலயன் மகன் நாச்சி வலையன் 4. ஷை பூமலூரில் இருக்கும் ராமவலயன் மகன் மைனர் குட்டி 5. ஷை மைனரின் கார்டியன் தாயார் கருப்பாள்—1 to 5 பிரதிவாதிகள்.

ஷை நெம்பரில் வாதி பிரதிவாதிகள் பேரில் ஷை நெம்பரில் ஏற்பட்ட பிரிலி மினரி டிக்கிரியை Final டிக்கிரிசெய்யவேணுமாய் மனுக்கொடுத்து அது 12-5-32 வாய்தா. அன்று ஷை பிரதிவாதிகள் பகல் 11 மணிக்கு கோர்ட்டில் ஆஜராகவேண்டியது, தவறினால் ஒரு கட்சியாக முடிவு செய்யப்படும் என்கிற சங்கதியை தெரியப்படுத்தியிருக்கிறது.

ஜி. ஆர். ஜெகதீசசாஸ்திரியார்,
1—5—32. வாதிவக்கீல்.

———

இந்தியாவில் பல இடங்களிலும், இலங்கையிலும், நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்துக் கண்காட்சிகளிலும், முதல்தரமான மருந்துகளென்று தேர்ந்தெடுக்கப்பட்டும், அநேக தங்கப்பதக்கங்கள் பரிசு பெற்றும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பேஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப்பெற்றவருமாகிய,

# டாக்டர் சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற உண்மையான மருந்துகள். ஆச்சரியமாய் அநேக நோய்களைக் குணம் செய்கிறது.

## மகா சந்தனாதித் தைலம்.

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது.

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிகப்பு
கண்ணில் நீர் வடிதல்
கண் அரிப்பு
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளைசாருதல்
மேகநீர், வெள்ளெழுத்து
ஒருதலை நோய்
கை கால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்திகாங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்
மண்டை இடி
பீனிசம்
தலை மயக்கம்
தலைப் பொடுகு
சொறி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலைநோய்

முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—
12 ,, ,, ,, ரூ. 2-2-0

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாது புஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும், உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்பு வலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொப்பனஸ்கலிதம்
சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக் கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும். திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். சுருசுருப்பை உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமானது.

ஆண், பெண், சிறுவர் வயோதிகர் யாவரும் சாப்பிடலாம் பத்தியமில்லை. 1-சேர் டப்பி விலை ரூ. 2—8—0.

ஒருமுறை இத்தைலத்தையும், லேகியத்தையும் உபயோகித்தவர்கள் அதன் அருமையான குணத்தைக்கண்டு அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும்.

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும. கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

## நமது மருந்துகளை உபயோகித்த கனவான்கள் சொல்வதைக் கவனியுங்கள்.

ராவ்சாகிப் டி. ஆர். மாசிலாமணி நாடார்,
வாட்டர் ஒர்க்ஸ் சூப்பிரண்டெண்ட், ஒத்தகமந்து.

தங்களுடைய மஹா சந்தனாதித் தைலத்தை கடந்த 4 வருடங்களாக நான் உபயோகம் செய்து வருகிறேன். மூளைக்கும், கண்களுக்கும், சிறந்த குளிர்ச்சியைக் கொடுக்கின்றது. தைல ஸ்நானம் விரும்புவோர்க்கு தற்சமயம் மார்க்கட்டிலிருக்கும் சந்தேகமும் பிரயோஜனமுமற்ற தைலங்களைவிட இத்தைலத்தை வாங்கி தொடர்ந்து ஸ்நானம் செய்து வந்தால் சிறந்த குணம் ஏற்படுமென்று சிபார்சு செய்கின்றேன்.

ஏ. எஸ். நரசிம்மய்யக்கார்,
ஹெட்மாஸ்டர், மேல் வாயல், ராமநாதபுரம்.

தங்களுடைய மஹா சந்தனாதித் தைலத்தை தருவித்து உபயோகித்ததில் உண்மையில் அதிக ஆச்சரியமான குணத்தையடைந்தேன். தைலத்தை தலையில் தேய்த்து ஐந்து நிமிஷத்திலேயே கண் குளிர்ச்சி யடைவதையும், மூளை குளிர்ந்து வருவதையும், விவரமாய் எழுதினால் இக்காகிதம் இடந்தராதெனினும், சுருக்கமாய் சொல்லின் தங்களின் மஹா சந்தனாதித் தைலத்தைவிட உண்மையானதும் சிலாக்கியமானதும் பிரத்தியக்ஷ பலனை அடுத்த நிமிஷத்திலேயே கொடுக்கக்கூடியதுமான தைலத்தை நான் கண்டதில்லை.

D. முருகேசன், ஸ்டோர் கீப்பர், இரங்கூன்.

சுமார் 7 வருடங்களாக ஆண் தன்மை இல்லாதிருந்து நான் ரொம்பவும் துயரத்தையடைந்திருந்தேன். எவ்வளவோ மருந்து சாப்பிட்டும் யாதொரு சுகமுமில்லை. ஆனால் தங்களின் சாலாமிசிரி லேகியத்தைத் தருவித்து தொடர்ந்து சாப்பிட்டு வந்ததில் எனக்கிருந்த கொடிய துயரத்தைத் தீர்த்து நித்திய ஆனந்தத்தை அடையச் செய்தது. தாங்கள் நீடூழி வாழ்க. நான் மாத்திரம் புகழ்ந்து எழுதுவதில் பிரயோஜனமில்லை. தங்களின் மருந்தை உலகத்தார் சகலரும் மதிக்கத்தக்கதே.

K. C. பாண்டியன், மிராஸ்தார், குருந்தம்புளி,
திருநெல்வேலி ஜில்லா.

நோயுற்று திரேகம் மெலிந்து இனி பிழைக்கமாட்டான் என்று சந்தேகிக்கக்கூடிய அவ்வளவு கேவல நிலைமையிலிருந்த என் செல்வப் புதல்வன் தங்கள் சாலாமிசிரி லேகியத்தால் எதிர்பாராத அதி ஆச்சரியத்திற்குரிய விதமாய் குணமடைந்தான். ஷை லேகியத்தால் நானும் என் அருமைக்காதலியும் பலவித நன்மைகள் பெற்றோம். இன்னும் தங்கள் அயக்காந்த திராவகம் மஹா சந்தனாதித் தைலம் ஜீவரஸம் இவற்றாலும் எனக்குப் பெரும் நன்மைகள் விளைந்தன தங்களுக்கு என் வந்தனம்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பகுளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் அடங்கிய சமூக சீர்திருத்தங்கள் யாவும், சமதர்மத்தோற்றத்தின் அறிகுறியாக தோன்றுகின்றது. மதங்களை நாட்டிலிருந்து விரட்டிவிடவேண்டுமென்கின்றீர்கள். ஜாதியையும் பறக்கடிக்கின்றீர்கள். வறுமையையும் ஒருவாறாக போக்கவேண்டுமென்கின்றீர்கள். இம்மூன்று கொடுமைகளையும் மக்கள் வாழ்க்கையிலிருந்து ஒழிக்கவேண்டுமென்கின்றீர்கள். ஆனால் இம்மூன்று நல்வினைகளை எந்த துவாராவில் அனுஷ்டிக்க முடியுமென்பது தான் கேள்வி? அரசியல், முதலாளிகள் வசம் இருந்து வருகின்றது. முதலாளி தனிவுடைமை திட்டத்தைக் கைக்கொண்டவன் முதலாளி திட்டத்தின்படியே உலகர் பொருள்கள் அனைத்தும் அவன் உபயோகத்திற்கே வைத்துக்கொள்வானே அன்றி பொது மக்களின் உபயோகத்திற்கு உதவமாட்டான். ஆனபடியால் தனியுடைமை திட்டம் அரசியல் காப்புக்கு பாத்திரமாய் நிற்கும் வரை, தேச தரித்திரம் ஒழிவதெப்படி? ஆதலின் தனி சொத்துரிமை சமதர்மத்திற்கு விரோதமன்றோ? ஆதலின் தனி சொத்துரிமையை அடிப்படையாகக்கொண்ட அரசியலும் கருப்பு, வெள்ளை, செகப்பாயினும், எதுவாயினும் சமதர்மத்திற்கு நேர் விரோதமன்றோ? ஆதலின் தனி உடைமை நிகழ்ச்சியில் இருக்கும் வரை, நாட்டில் சமதர்மம் ஏற்படாது என்பது நிச்சயம். சமதர்மத்தை ஆதரிக்கும் அரசியல் வரும்வரை, சமதர்மம் என்பது வெறும் பேச்சே! ஆதலின் சுயமரியாதையோராகிய நீங்கள் வெறுஞ் சொல்லோடு நிற்கப் போகின்றீர்களா? அல்லது சமதர்மத்தை நிலைக்கவைக்க, சமதர்ம ஆட்சியைக் கோரப்போகின்றீர்களா? இது முதல் பிரச்னை

மதங்களும், மதஸ்தாபனங்களும் மத சொத்துக்களும் நடைமுறை (Current) அரசியல் திட்டத்தில், காக்கப்பட்டவை. இந்த அரசியல் திட்டம் மாறும்வரை, மதங்களை அனுஷ்டிக்க வொட்டாமல் செய்வதற்காகிலும், மதஸ்தாபனங்களை நல் உபயோகப்படுத்தவாகிலும் அந்த சொத்துக்களை பலருக்கும் வினியோகமாகும்படிக்காகிலும், செய்ய முடியாது. இதைச் செய்யும் வரை மதங்களும் ஒழியா, மதஸ்தாபனங்களும், நல் உபயோகப்படா, மதச்சொத்துக்களும் நல் வினியோகத்திற்கு உதவா. ஆதலின் மதங்கள் ஒழிக, குருமார் ஒழிக, கோயில்கள் ஒழிக, பூசைகள் ஒழிக, நிவேதனங்கள் ஒழிக என்று மந்திரம்சொல்லி மயக்கப்போகின்றீர்களா? அல்லது, மதங்களையும் ஒழிக்க மதஸ்தாபனங்களையும் நல் உபயோகிக்க மதச்சொத்துக்களையும் நல் வினியோகிக்க, சமதர்ம அரசியலை நடத்தப்போகின்றீர்களா? இது இரண்டாவது பிரச்னை.

நமது மூன்றும் வட்டமேசை, ஜாதியை ஆசீர்வதித்து விட்டது! அவனவன் ஜாதி அவனவனது ஜாதி வித்தியாசங்களை அவனவனுக்கே விட்டுவிட வேண்டும். வருண பேதத்தை சட்ட முறையால் நீக்க முடியாது. எங்களுக்கு வெள்ளையர்களுக்கு ஜாதி வேற்றுமை இல்லாமல் இருப்பினும், ஜாதி வேற்றுமையை ஆதரிப்பவர்களைத் தொடப்பாது. நான்கு வகை ஜாதியானாலும் சரி, 4448 ஜாதியானாலும் சரி, இவைகள் ஆட்சேபணை இன்றி (Without hindrance) யாவரும் அனுஷ்டிக்கலாம் என்ற கருத்தை கொண்டுள்ளது வட்ட மேசை! பாப்பான் பாப்பானாக இருத்தல் வேண்டும்! பறையன் பறையனாகவே இருத்தல்வேண்டும்!! ஒன்றிலொன்று நுழையக்கூடாது!!! ராம ராஜ்ய முதல், ஜாதி ஆசாரம் இருந்தபடியே இருக்கவேண்டுமாம்!!!! இதனை அதாவது ஜாதி ஆசாரங்களை, நாலு திசையிலிருந்தும், சட்ட திட்டங்களால் பாதுகாக்கப்படுமோம்!!!!!

இந்த அரசியல் திட்டத்தை அந்த திட்டத்திலேயே இருந்து கொண்டே மாற்ற முடியுமாவெனக் கேட்கின்றோம்? ஜாதி பகிஷ்கார சட்டம் (Caste Disablities Act 91850) உண்டு பண்ணியிருந்தும் ஜாதியை பகிஷ்கரித்தவர்கள்சிறுபான்மையரே இதில் இன்னொரு விநோதமுண்டு. ஜாதியைத் துறந்தவர்கள், வேறொரு ஜாதியினராய் விடுகின்றார்கள்!!! ஜாதிகள் பெருகிவருவதற்கு மனுவைப்பார்க்க வேண்டும். சூத்திரனுக்கும், பிராமணத்திக்கும், பிறந்த பிள்ளை சூத்திரனுமாகான்—பார்ப்பனனும் ஆகானும்! வேறொரு மூன்றும் ஜாதியாகுமாம்!! இவ்விதமாக நமது நாட்டில், முத்தனும், முருகனும், முதலியாராகின்றார்கள்!!! புத்தர் காலமுதல் ஜாதி கண்டிக்கப்பட்டும், கலப்புமணங்கள் நடந்தும், ஜாதி ஒழிந்தபாடில்லை. ஆதலின், ஜாதியை வளர்க்கும் திட்டங்களுடன் ஒத்துழைக்கப் போகின்றீர்களா, அல்லது ஜாதித் திமிரைக் குறைக்கவல்ல அரசியல் ஆதிக்கத்தை கைப்பற்றப்போகின்றீர்களா? இது மூன்றும் பிரச்னை.

நமது இந்திய நாட்டு மக்களில், 7, 8 கோடி மக்கள் தீண்டாதவர்களென்றும், தாழ்த்தப்பட்டவர்களென்றும், பஞ்சமர்களென்றும், பறையர்களென்றும் வழங்கிவருகின்றார்கள். இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்கள் உலகிலெங்கும் அங்கும் இங்கும் ஒரு காலத்தில் இருந்து வந்தும் அவர்களுக்கு மூடநம்பிக்கைக்குறைவுபட்டுவந்தபடியாலும், அவர்கள் கிளர்ச்சி முதிர்ச்சி அடைந்துவந்ததாலும், அவர்களுக்காகப் பரிந்துபேசக்கூடியவர்களின் விடாமுயற்சியாலும் சமூகசாவகாசத்தாலும், அவர்களுடைய நிலைமை, நம் நாட்டைத்தவிர, மற்ற எங்கும் உயர்ந்தே வந்து, தாழ்த்தப்பட்டோர் என்ற நாமதேயமே, அவ்விடங்களில் மறைந்துவிட்டது. ஒடுக்கப்பட்டவர்களென்ற பிரத்தியேக ஜாதியார், நம்முடைய ஊரைத் தவிர, மற்றெங்கும் இல்லை. முதலாளிகளைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் உலகமெங்குமே தாழ்த்தப்பட்டவர்களாகவே இருந்து வருகின்றனர். பஞ்சமர், பறையரென்ற ஜாதியோ, பிரத்தியேகமாக தாழ்ந்தப்பட்டவர்களோ, மற்ற எந்தஇடத்திலும்இல்லை நமது நாட்டில் மாத்திரந்தான். இத்தகைய தாழ்த்தப்பட்ட வகுப்பார் அறிவின்மையாலும், மூடபக்தி மேலிட்டு இருப்பதாலும் பரிதாப நிலைமையில் இருந்துவருகின்றனர். அவர்களுடைய நிலைமையை உயர்த்த உள்நாட்டு அரசுகள் எதுவும் செய்ததாகக்காணோம். தாழ்த்தப்பட்டோருடைய அறியாமையைக் கொண்டு, மேல்ஜாதியார் எவர்களும், தங்கள் சுயநலத்தை அபிவிருத்தி செய்து கொண்டு வருகிறதாகத் தெரிகிறது. பள்ளன், பறையன், என வழங்கும் கோடான கோடி மக்கள் உழைப்பால், நிலச்சுவான்களாகிய, சமீன்தார்களும், மிராசுதார்களும், சுரோத்திரியதார்களும் உலக சுகபோகத்தை அடைந்து வருகின்றார்கள். இந்த சுகத்தை உண்டாக்கும் குடிமக்கள், உண்ணபோதுமான உணவு இன்றி, உடுக்க வழியின்றி, வசிக்க சுகாதார வீடின்றி, படிக்க அறிவின்றி, நமது "சண்டமாருதம்" சொல்லும் "மிருகவாழ்க்கையில்ராம ராஜ்ய காலமுதல் இந்திய தேசத்தில் வாழ்ந்து வந்து இருக்கின்றார்கள். 5000 வருஷத்திற்கு முந்திய வேத காலதிலும், "தஸ்யூ" என்ற ஓர்வித தாழ்த்தப்பட்டோர், நமது காலத்தில் இருந்துவரும் பள்ளுபறை பதினெட்டென்போர் போலவே இருந்திருக்கின்றார்கள் இவ்வளவு காலமாக இத்தனை கோடிமக்கள், இந்தத் தாழ்ந்த நிலைமையில் இருந்து வந்தது, எந்த உலகிலும் நடவாத சம்பவம், அமரிக்காவிலும், யூரோப்பிலும் கோடிகணக்கான தாழ்த்தப்பட்டோர் தங்கள் மானிட சமத்துவத்தைக் கைக்கொண்டனர். ஆனால், நமது நாட்டிலோ, நமது தீண்டாதார், தங்கள் மானுஷீக சமத்துவத்தை உணராமலே, தங்கள் சேவல வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இவர்களுடைய வாழ்க்கை நிச்சயமில்லாத வாழ்க்கையாகவே [Precarious] இருந்துவருகின்றது. நாளுக்குநாள் [Day in and day out] இவர்களுடைய வாழ்க்கை, குறைவடைந்தே வருகின்றது. அங்குமிங்கும், ஓர் எம்ஸி ராஜா, அம்பேத்கர், வாஸுதேவபிள்ளை, சாமிசகஜானந்தர், பொருளாதாரத்தில் உயர்வு பெற்று தோன்றுகின்றார்களே ஒழிய, இந்த கூட்டத்தாரில் இருபது பேர் கூடசொத்துரிமைபெற்றவர்கள் இல்லை. இதன் காரணத்தை, குடி அரசில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளோம். முதலாவது, நமது 7 கோடி தாழ்த்தப்பட்டோருடைய தற்கால பரிதாப நிலைமைக்கு, அவர்களின் அறியாமையே காரணமாகும். மற்ற சமூகங்கள் அந்தந்த காலத்தில், தங்களுக்கு வேண்டிய அரசியல் சமத்துவத்தைப்பரிந்து கிளர்ச்சி செய்து, சிற்சில சுதந்தரங்களைப் பெற்றுளார். ஆனால், நமது தாழ்த்தப்பட்டோர், தங்களுடைய உரிமைகளைப்பெற இதுகாறும் கிளர்ச்சியொன்றும் செய்யாமையால், இவர்களுடைய நிலைமை, எந்த மாறுதலையும் அடையாமல்கடந்த 5000 வருஷமாக இருந்தவாறே இருந்துவருகிறது, இரண்டாவது, இவர்களைப்பற்றிப்பரிந்து பேசவந்தோர் எல்லாம், தங்கள் செல்வாக்குக் குறைவு வாராதபடி, தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென நடித்து வந்தனர். மூன்றாவது, தாழ்த்தப்பட்டிருக்கும்பொருளாதார நிலைமையை உயர்த்தாமல், கோயில் குளத்தைககாட்டிக்கொண்டு மூடநம்பிக்கையை ஆதரித்தும் வந்திருக்கின்றபடியால், இத்தனை கோடி மக்களும் பேதைகளாகவே இருந்துவருகின்றனர். ஆதலின், நமது தாழ்த்தப்பட்டோருடைய நிலைமை விருத்தி பெறவேண்டுமானால், பஞ்சமர் பறையர் என தாழ்த்தப்பட்டோர், அரசியல் துறையில் இறங்கி, தங்கள் சமத்துவத்தைப்பெற தாங்களே முயர்ச்சி செய்யவேண்டும். தாழ்த்தப்பட்டோர் வம்சத்தில் உதித்த இரண்டொரு முதலாளிகளால் தங்களுக்கு எதுவும் கூடிவரப்போவதில்லை. தாங்களே, தங்கள் தனி வாக்குரிமையால், மனுஷனுக்கு அத்தியாவசியமாக வேண்டிய அனுகூலங்களைப் பெறவேண்டும். தக்கள் சமூகங்களில் தோன்றும் சிற்சிலர், கல்வி அடைந்து, பட்டம்பதவிபெற்றோர்களால், எதுவும் கூடிவரப்போவதில்லை. அரசியல் நிர்வாகத்தில் எவர்களும் சமதர்ம உரிமைகளைப் பெறவேண்டி உதவியாக நாம் இருக்கப்போகின்றோமாஎன்பது நமது நான்காம் பிரச்னையாகும்.

தாழ்த்தப்பட்டோர்கள், வாக்குரிமையைக்கோரும் விஷயத்தில், வித்தியாசப்பட்டுள்ளார். ஆனால், நமது நோக்கம் ஒன்றே. அதாவது, தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையோராதலால், மற்ற எல்லாவகுப்பு சமூகங்களும் அதிகசெல்வாக்குப்பெற்றுள்ளவர்களாதலால், நமது தாழ்த்தப்பட்டோர் தனி வாக்குரிமையையே சில காலம்வரை நாடவேண்டும். எந்த காலத்திலும், பொருளாதார செல்வாக்கை உடையவர்கள் தான் பலவித சூழ்ச்சிகளால், முன்வந்து, தங்கள்ஆற்றலை பலப்படுத்திக்கொள்வது சகஜம். ஆதலின், பொதுவாக்குரிமையில், தாழ்த்தப்பட்டோர் தோல்வி அடைதல் திண்ணம். ஆதலின், சமதர்ம ஆட்சிவரும்வரை, தாழ்த்தப்பட்ட சிறுபான்மையோர் (Depressed Miniorities) தங்கள் உரிமைகளைத் தாங்களே பெறவேண்டும். தீண்டாமை ஒழிகவென்று மந்திர உபதேசம் செய்வதால், 7 கோடி மக்களின் தரித்திரம் ஒழியுமென்பது வஞ்சனையே யாகும். தாழ்த்தப்பட்டோர் மனித வாழ்க்கைக்கு வரவேண்டுமானால், அந்த மனுஷ வாழ்க்கைக்கு வேண்டிய வசதியாவும், இந்த க்ஷணமே பெறச்செய்யவேண்டும். இதற்கு யார் சம்மதிப்பார்களெனக் கேட்கின்றோம்? சுயமரியாதையோர், தாழ்த்தப்பட்டோர் பால் அனுதாபம் காட்டுவது

மாத்திரம் போதா? அவர்களுடன் கூடி, அவர்களுக்கு வேண்டிய உரிமைகள் கிடைக்குமாறு கிளர்ச்சிசெய்தல் வேண்டும்.

ஐந்தாவது, ஸ்திரி புருஷ சம்பந்தத்தில் சுயமரியாதையோர் செய்யவேண்டியே கடமைகள் பலவுள. ஸ்திரிகள் சமத்துவம் பெறவேண்டுமென்கின்றோம். விதவைகள், மறு கல்யாணம் செய்துகொள்ளலாம் என்கின்றோம். ஸ்திரிகள் கல்வியும், ஞானமும் பெறவேண்டுமென்கின்றோம். இருவரும் சம்மதியில்லாத கல்யாணம் ரத்துசெய்யப்படலாமென்கின்றோம். ஆனால் இவ்வுரிமைகளை ஸ்திரிகள் பெற்றால், சமத்துவம் உண்மையாகவே பெற்றதாகுமா என்று கேட்கின்றோம்? பெண்கள் இச்சுதந்திரங்களையெல்லாம் பெற்றும், பொருளாதார சுதந்திரமில்லாவிடில், இவ்வுரிமைகள் என்னும்? பொழுது விடிந்தவுடன் தன் ஜீவனத்திற்கு, புருஷனை எதிர்பார்க்க வேண்டுமென்றால், மேல் கண்ட சுதந்திரங்களை பெற்றும் பிரயோஜனம் என்ன? குழவி, தாய் முகம் நோக்க தாய் தந்தை முகம் நோக்க வேண்டுமானால், மற்ற எந்த சுதந்திரம் இருந்தென்ன? இல்லாமலென்ன? ஆதலின் பொருளாதாரசமத்துவமே பெண்ணுக்கு முதலில் வேண்டுமாகையால், அதனை அடையவேண்டிய மார்க்கங்களைக்கடைபிடித்தல்வேண்டும். அரசியல்துறைகளில்நுழைந்த பெண்களுக்குப் பொருளாதார சமத்துவத்தைப் பெற செய்யவேண்டுமா? என்றது உங்கள் ஐந்தாம் பிரச்சினையாகும்.

“உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர் என்றார்கள் புத்தர்கள் இது பண்டைக்கால அனுபவம். உண்டி தான் சகல ஜீவனுக்கும் ஆதாரம். உண்டி இல்லாமல் எந்த ஜீவனும் உயிர் வாழா. மதங்களும், தத்துவங்களும், கோயில்களும், குளங்களும், அரசுகளும், உண்டிக்காக ஏற்பட்டுள வென்றால், மிகையாகா. சண்டைகள் போடுவதும்: ஊரைப் பிடிப்பதும் உணவுக்காகவே. இந்த உணவு சகலருக்கும் கிடைக்க வேண்டியது தான் முக்கிய அவசியம். அரசனும், அமைச்சனும், அடிமையும் ஒரே வித உணவை உண்ண வேண்டி வருங்காலே, இவர்களுக்கு ஏற்பட்ட சமூக வித்தியாசங்கள் பறந்துபோகுமென அறிக.

நமது நாட்டில் இன்றைய தினமே வாழ்வுக்குவேண்டிய உணவு பார்ப்பனனுக்கும், பறையனுக்கும் கிடைக்க சமூகதிட்டம் ஏற்படும் பட்சத்தில் எவனையும் பார்ப்பனனென்றும், பறையனென்றும் அழைக்க மாட்டார்கள். ஆதலின் சமூகவித்தியாசமுழுமையும் பொருளாதார திட்டத்தின்மேல்தான் கட்டுப்பட்டுள்ளது. உணவை சரி சமத்துவமாக கிடைக்கச்செய்வதுதான் சுயமரியாதையோர் முக்கியகடமையாகும், பறையனுக்கும், பார்ப்பானுக்குமுள்ள சமூக வித்தியாசம் போகவேண்டின் முதலில் அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள பொருளாதார வித்தியாசம் ஒழியச்செய்யவேண்டும் இதைச்செய்யாவிடில் தீண்டாமையையொழிக்க எந்த அரசாங்கத்தாராலும், எந்த காங்கிரஸ்காரராலும், எந்த மிதவாதி கட்சியாலும் எந்த சமூக சீர்திருத்தக்காரராலும் முடியாதென அறிக. இந்நாட்டில்பண்டைகால முதல் தீண்டாமையையொழிக்க பலபேர் பாடுபட்டார்கள் ஆதியில் புத்தர்கள் காருண்யத்தைக்கடைபிடித்து அதன் மூலமாக தாழ்த்தப்பட்டோரை உயர்த்தப்பார்த்தார்கள். பலிக்கவில்லை சங்கரர், இராமாநுஜர் முதலியோர் தாழ்த்தப்பட்டோரை தந்திரமந்திரத்தால் உயர்த்தப்பார்த்தார்கள் அதுவும் பலிக்கவில்லை. காந்தியாரும் அவரைத் தலைமையாகக்கொண்ட காங்கிரசும் தீண்டாமையை தினமொன்றுக்கு ஒன்றேகாலணா சம்பாதனையால் தீர்க்கப் பார்க்கின்றார்கள். கடந்த 10 வருஷமாக பலிக்கவில்லை. நமது ராஜாங்கத்தாரும் சில தீண்டாதாருக்குப் பட்டம்பதவிகளைக் கொடுத்தும் சில தீண்டாதாருக்கு கரம்பு நிலங்களைக் கொடுத்தும்சில சேரிகளில் சில பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியும் தீண்டாமையும் தாழ்த்தப்பட்ட நிலைமையும் போகவுமில்லை. சகல சமூக வித்தியாசங்களும் பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்டுள்ளமையால் அந்தப் பொருளாதார உயர்வு தாழ்வை நேர் நிமித்தவேண்டும். இந்த நேர் நிமித்தம் அரசியல் திட்டத்தின் மூலமாகத்தான் முடியும். இந்த அரசியல் திட்டத்தின் பொறுப்பை வகிப்போமா என்பது தான் கேள்வி? இது ஆறாவது பிரச்சினையாகும்-

மதத்தை எடுத்துக்கொள்ளுவோம் மதங்கள் குருமார் இன்றி நிலைக்கா இந்து மதத்திற்கு பார்ப்பன குருக்களும் மகமதிய மதங்களுக்கு மௌலானக்களும், காலிப்புகளும், கிறிஸ்துவ மார்க்கத்திற்கு பாதிரிமார்களும் புத்த மதத்திற்கு பிக்ஷு (Bikshu?) க்களும் வேண்டும். இந்த பிக்ஷு முதலியோர் ஜீவிக்க உணவுவேண்டும். இந்த உணவு கிடைக்காவிடில் எந்த பார்ப்பனக் குரு, எந்தப்பாதிரி, எந்த காலிப், எந்த பிக்ஷு மதங்களை ஆதரிப்பான் இன்றைக்கேகோயில்மான்யங்களும், மடங்களின் சொத்துகளும் தரும ஸ்தாபனங்களின் வருமானங்களும் அரசு பறிமுதல் செய்யட்டும். யார் சைவகுரு, கிறிஸ்துவப்பாதிரி, புத்த சந்நியாசிகளில் எவன் அவனவன் சமயங்களைத்தழுவுவான் பார்ப்போம்! மதங்கள் மனத்தில் இருப்பதென்று கூறுவதும் பெருத்த மோசமென அறிக. எல்லா மதங்களும்,கோயில்கள் குளங்களும், அவைகள் மூலமாக வரும் வருமானங்களைக்கொண்டு நடத்தப்படுகின்றன. ஆதலின் மதங்களைப்போக்க, வருமானங்களைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் இந்த மத வருமானங்களை, பரி முதல் செய்யவேண்டுமானால், அரசியல் மூலமாகத்தான் முடியும். அவ்வித அரசியலை ஸ்தாபிக்க நமக்கு வன்மை உண்டாகவேண்டாமா? என்பது ஏழாவது பிரச்சினை.

உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்று சொல்லுவதெல்லாம் பொருள்படைத்துள்ள வித்தியாசத்தால் ஏற்பட்டவை. வேத ரிஷிகள் முற்காலத்தில் முதன்மையான ஜாதியாயிருந்தனர். அவர்கள் செய்துவந்தது லேசானவேலை. பூசை நைவேதனம், ஓமம் முதலிய வேலைகளால்-முதலிய கோவல வேலையால் ஜீவித்து வந்தார்கள். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு வேலையில்லாத காலமில்லை. தினந்தினம், ஒரு கல்யாணமோ, ஒரு கருமாதியோ, ஒரு பூசையோ, நைவேத்தியமோ ஏதோ ஒரு காரியம் நடந்தே வந்துகொண்டிருக்கின்றது. இன்றும், அன்றும் வேதியர்கள் மிக கஷ்டமின்றி ஜீவித்து வந்தனர். அவர்கள் சந்ததியில் வந்தவர்கள் தான் தற்கால மத குருமாரும் மடாதிபதிகளும். இவர்களுக்குள்ள மத செல்வாக்கு ஒழியவேண்டுமானால், இவர்கள் அனுபவித்து வரும் மத வருமானங்கள் இவர்கள் அடையாமற் செய்யவேண்டும். யாவரும் சமூகத்திற்கு வேண்டிய உண்டி, உணவு, வீடு நிலங்கள், விளைவு முதவிய உபயோகமுள்ள வேலைகளைச் செய்து தான் பிழைக்கவேண்டுமென கட்டாயம் ஏற்படும் பட்சத்தில், வேந்தன் எது, பார்ப்பனன் எது? வேந்தனும் வேதியனும் அனுபவித்து வரும் செல்வமும், செல்வாக்கும் அவரவர்கள் பொருளாதார பெருக்கால் பெறப்பட்டவை. ரஷ்ய தேசத்தில், பொது மக்களுக்கு அரசியல் ஆதிக்கம் வந்த காலே, மதகுருமார்களின் ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் அவர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டபிறகே, அந்த தேசத்தில் மதங்களின் செல்வாக்கும், ஆதிக்கமும், அவைகளால் விளைந்து வந்த மூட நம்பிக்கைகளும் குறிகியநோக்கமும், சோம்பலும் பயமும் அந்த ஊரை விட்டு ஒழிந்து வருகின்றது. ஜாதி மதங்களின் செல்வாக்கு போய் விட்டால், உலகம் நாசமாகும் என்போருடைய கருத்து என்னவெனில் ஜாதி மதங்களால் உண்டான தங்களுடைய செல்வாக்கும், அதிகாரமும் போய் விடுமென்ற பயத்தால் பயமுறுத்துவதென அறிக. இன்றைக்கே பார்ப்பன வேதமும், சைவன் ஆகமமும் அவைகளால் தங்களுக்குண்டாகும் செல்வாக்கும் ஒழியும் பட்சத்தில் எந்த ஜீவனுக்கும் எந்த கஷ்டமும் உண்டாகா. இது திடமான தீர்மானம். ஆனால், கோயில் சொத்துக்களும், மடத்தின் சொத்துக்களும் தருமகர்த்தாக்கள் மடாதிபதிகள் ஆதிக்கத்திலிருந்து பொது ஜனங்கள் ஆதிக்கத்திற்கு வந்ததும், எவ்வளவு நன்மை, பாமர மக்களுக்கு உண்டாகுமென்பது விளங்கும். இதனை விளக்கவேண்டியது, உங்களுடைய கடமைகளில் ஒன்று. மதங்கள் ஒழியவேண்டுமென்று பாமர மக்களுக்குச் சொல்வதால் மாத்திரம் போதா. மதங்களுக்கு ஆதாரமாக இருக்கும் பொருளாதாரத்தை அரசியல் மூலமாகக் கைப்பற்றி பாமரமக்களின் உபயோகத்திற்கு வினியோகப்படுத்திக்கொள்ளவேண்டியதை விபரமாக எடுத்துரைக்கவேண்டும்.

நமது இந்தியாவில் சமதர்மம், அரசியல் முறையாகவேண்டுமாயின், முதலில் வறுமை நீங்க முயலவேண்டும். தான தருமத்தால் தேச வறுமை அதிகரிக்கும் எப்படி எனில், ஒருவன், தனக்கு வேண்டியது போக, மிகுதியில் தானதருமம் செய்யவேண்டுமானால், தொழிலாளரையும், விவசாயிகளையும் இம்சித்து, அவர்கள் கூலியைக் குறைத்தும், அல்லது, பொதுமக்களுக்குச் சேரவேண்டிய ஆதாயங்களை மோசம் செய்து, இவ்விதமாக அபகரித்த சொத்துக்களைக் கொண்டுதான், தானதருமம் செய்ய முடியும். இவ்வித மோசத்தாலும், வஞ்சித்ததாலும், பிறர்வயிற்றை அடித்ததாலும் சேர்த்த செல்வத்தைக் கொண்டுந்தான் “கடவுளுக்கு” கோயில்களும், தேவதைகளுக்கு ஆலயங்களும், ஏழைகளுக்கென சத்திர சாவடிகளும் கட்டப்பட்டன வென அறிக. ஆதலின், ஆஸ்திகம் ஒழிந்து, நாஸ்திகம் பரவவேண்டுமானாலும் சரி, அல்லது தேசத்து வறுமை நீங்கவேண்டுமானாலும் சரி, இனி வரும் அரசியல்கள் சமதர்ம வொழுங்கின்படி அமையவேண்டும்.

மதங்களும், ஜாதி சனியன்களும் ஒழிந்து, மனிதர் பகுத்தறிவை அடைய வேண்டுமானாலும், சமதர்ம ராஜ்யம் நாட்டில் வரவேண்டும். சுயராஜ்யம் என்னவெனில் முதலாளித் தத்துவத்தை அடிப்படையாக வேண்டுவது, சுயராஜ்யத்தில், தரித்திரத்திற்கும், மதங்களுக்கும், மூட நம்பிக்கை முதலிய பழக்கவழக்கங்களுக்கும் ஜாதிசமய வித்தியாசங்களுக்கும் அனுகூலமாகவும், அடிப்படையாகவும் இருந்துவரும் தனி சொத்துரிமைக்கு பாதுகாப்புகள் நிறைந்துள. தனி சொத்துரிமை (Private Ownership) இருக்குமளவும், நமது நாட்டு தரித்திரமும் ஒழியா, மதங்களும் தொலையா, ஜாதி சமயங்களும் நீங்கா “தரித்திர நாராயணனுக்குத்தான்” இனிவரும் சுயராஜ்யமென்றும், 100 க்கு 98 மக்களுக்குத்தான் சுயராஜ்யமென்பதும், தீண்டாதவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தான் வட்டமேஜை மகாநாடு என்பதும் வீண் மயக்குகளேயொழிய (Vain illusion) உண்மை அல்லவே அல்ல. ஆதலால். தோழர்களே! நமது நாட்டிலுள்ள 34 கோடி சாமான்ய மக்களும் உண்மை சுதந்திரம் பெற்று, பசி இல்லாமலும், தரித்திர மில்லாமலும், ஜாதி சமயமில்லாமலும், உண்ண, உடுக்க, இருக்க பிடிக்க வசதிகளையடைந்து சரி நிகர் சமானத்துவமான சமதர்ம ராஜ்யத்தை ஸ்தாபியுங்கள். அதற்கு உங்கள் இடம், பொருள், ஏவல் அனைத்தும், தியாகம் செய்யுங்கள். வேண்டுமானால், சகல சுகபத்துக்களையும் துறந்து உழைத்து வாழுங்கள், நமஸ்காரம்.

7-5-32,

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House,
Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*
Manager "Kudi Arasu" Erode.



"சண்டமாருதம்"
சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்தி செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
அறிவுத்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்சிலிர்க்கச் செய்யும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| உள்நாடு மாத சந்தா | ரூ. | 1—4—0 |
| தனிப்பிரதி ... | ரூ. | 0—0—9 |
| வெளிநாடு வருட சந்தா | ரூ. | 18—0—0 |
| ஆறுமாதம் ... | ரூ. | 10—0—0 |

மானேஜர்
"சண்டமாருதம்"
திருச்சினாப்பள்ளி.



"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்க வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



திருக்குறள் ஆராய்ச்சியும்
ஜைன சமய சித்தாந்த விளக்கமும்
குறளைப்பற்றிப்பல பண்டிதர்களுக்கேற்பட்ட
சந்தேக நிவர்த்தி நூல்
திருக்குறளாசிரியர் திருவள்ளுவரல்லர்.
பரிமேலழகர் உரை பல பொருந்தாதனவைகளே

இந்நூலின்கண் திருக்குறளாசிரியர் ஜைனர் (சமணர்) என்பதையும், திருக்குறள் கடவுள் வாழ்த்துப்பத்தும் அருகக்கடவுளின் தன்மையைச் சார்ந்தனவென்பதையும், மற்றக்குறட்பாக்களும் ஜைன சமய சித்தாந்தம் நிறையப்பெற்றதென்பதையும், தொல்காப்பியர், அகத்தியர், இறையனாரகப்பொருளாசிரியர் ஆகியவர்களும் ஜைனர்களே என்பதையும் விளக்கும் ஓர் ஆராய்ச்சி மிகுந்த நூல். விலை ரூபா 2—0—0. வி. பி. சார்ஜ் வேறு.

கிடைக்குமிடங்கள்:—
தி. அ. அனந்தநாத நயினார் & சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்,
ஆடிசன்பேட்டை, காஞ்சிபுரம்.
தி. ஆதிநயினார்,
21, பாரிஷ் வெங்கடாஜலய்யர் தெரு,
ஜி. டி. சென்னை.



சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.
(1930ளு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S பார்த்தசாரதி அய்யங்கார், B. A, B. L,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.





கோஷாயி இரவுமாத்திரை.

மலபந்த நிவாரணி-மலபந்தத்தினால் ஏற்பட்ட அன்னத்வேஷம், அசதி, இடுப்புவலி, மார்நோய், வாய்வு உபத்திரவங்கள், கீல்வாய்வு, பிடிப்புகள், சூலை, தாதுநஷ்டம் முதலிய வியாதிகளுக்கு இரவு போஜனம் செய்த அரைமணி நேரத்திற்குப்பின் ஒரு வெற்றிலையில் கோஷாயி இரவு மாத்திரை ஒன்று மடித்து மென்று ஜலம் சாப்பிட்டால் வாய்வுகள் கலைந்து அதிகாலையில் மலம் தாராளமாய் கழிக்கும். வெட்டவாய்வு உபாதைகள் படிப்படியாய் குறைந்து குணம் தரக்கூடியது. (சர்க்கூட்) தேசசஞ்சாரம் செய்துவரும் உத்தியோகஸ்தர்கள் வியாபாரிகள் இவர்களின் சௌகரியங்களை உத்தேசித்தே தயாரித்திருப்பதினால் எவ்விதபத்தியமுமில்லை. கோஷாயி இரவு மாத்திரை 51-கொண்ட சீசா 1-க்கு ரூ. 1—10—0. 101 மாத்திரை கொண்ட சீசா 1-க்கு ரூ. 3—0—0. பாக்கிங்தபால் செலவு வேறு மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூபாய் ஒன்று சேர்த்து முன்பணம் அனுப்பி வைக்கவும். எல்லா ஊர்களிலும் கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டாக்டர் B. A. எதிராஜ் (கால்நடை பரி)
கோஷாயி வைத்தியசாலை தென்னூர், திருச்சி.
உதவி டாக்டர்:— T. K. V. Chalam,

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரிகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர் களும், ப[illegible]கிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென [illegible] இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி,நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.